Follow us:

# தமிழன்
THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 300 பிலவ வருடம், ஆடி மாதம் 26ஆம் திகதி புதன்கிழமை
(11.08.2021) ஹிஜ்ரி - 1443, முஹர்ரம் பிறை - 01, 0115886187 - பக்கங்கள் 16

விலை ரூ.30

## நக்கல் நமசிவாயம்




# ஊரடங்கை அமுல்படுத்துக!

## அதிகபட்ச செயல்திறனை சுகாதாரத்துறை எட்டியுள்ளதால் மருத்துவ நிபுணர்களின் சங்கம் கோரிக்கை

•நா.தினுஷா

நாட்டில் கொரோனா தொற்றுக்கு சிகிச்சை வழங்குவதில் சுகாதாரத்துறை அதிகபட்ச செயல்திறனை எட்டியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள மருத்துவ நிபுணர்களின் சங்கம் அனைத்து வைத்தியசாலைகளும் விளிம்பு நிலையில் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அச்சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டிலுள்ள வைத்தியசாலைகளில் பிரேத அறைகள் அனைத்தும் ஏற்கனவே அவற்றின் சேமிப்புத் திறனை மீறியுள்ளன. அதேபோல் தனியார் வைத்தியசாலைகளிலும் இவ்வாறான நிலைமை காணப்படுகிறது.

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையில் கொவிட் - 19 தொற்று மிக வேகமாகப் பரவி வருகிறது. ஏனைய நோய்த்தாக்கத்துக்கு உள்ளாவோரும் வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். ஏற்கனவே ஒட்சிசனுக்கான கேள்வி அதிகரித்துள்ளது. இதன் காரணமாக வைத்தியசாலைகளில் பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களின் தேவையும் அதிகரித்துள்ளது. 02»


படப்பிடிப்பு : சமன் அபேசிறிவர்தன

# ரிஷாட்டுக்கு ஓகஸ்ட்18 வரை விளக்கமறியல்

•நா.தினுஷா

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் சந்தேகத்தின்பேரில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நீதவான் பிரியந்த லியனகே முன்னிலையில் ரிஷாட் எம்.பி. ஆஜர்படுத்தப்பட்டபோது இந்த உத்தரவை அவர் பிறப்பித்தார். 02»

# நாட்டை முடக்குவதே இறுதி அஸ்திரம்

## எந்தச் சந்தர்ப்பத்தில் என்பதை உறுதியாகக் கூற முடியாதென அரசு அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

கொரோனா நெருக்கடியைக் கையாள்வதற்கான இறுதி அஸ்திரமாகவே நாடு முடக்குவதை வைத்திருக்கின்றோம். எனினும், கொவிட் நெருக்கடியைக் கையாளும்போது அவ்வாறான... 02»

# ஈஸ்ரர் தின தாக்குதல்: ட்ரையல் அட் பார் குழு

## விசாரணைக்கு சட்ட மா அதிபர் பரிந்துரை

உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல் சம்பவங்களுக்கு சதி செய்தார்களென குற்றஞ்சாட்டப்பட்டுள்ள 25 சந்தேகநபர்களுக்கான தண்டனைகளை தீர்மானிக்க ட்ரையல் அட் பார் ஆயத்தை அமைக்குமாறு கோரி அதற்கான குற்றப்பத்திரிகையை சட்ட மா அதிபர் பிரதம நீதியரசருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்த சந்தேகநபர்களுக்கு எதிராக 9 தொகுதிகளைக்கொண்ட 23,270 குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# மாகாண பயணக் கட்டுப்பாடுகள் கடுமையாக அமுல்படுத்தப்படும்

## இராணுவத் தளபதி அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

கொரோனா தொற்றின் தீவிரத்தால் நேற்று நள்ளிரவுமுதல் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு கடுமையாக அமுல்படுத்தப்படும் - என இராணுவத் தளபதி ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, அத்தியாவசிய மற்றும் சுகாதாரப் பணியாளர்களைத் தவிர, வேறு எவரும் எந்த மாகாணத்தையும் கடக்க அனுமதிக்கப்பட மாட்டார்கள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நேற்று நள்ளிரவுமுதல் அமுலாகும் வகையில், திருமண நிகழ்வுகளில் பங்கேற்பவர்களின் எண்ணிக்கை 150 இலிருந்து 50 ஆக மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். 02»

# அரசு முடிவெடுக்க தாமதித்தால் உயிர்ப்பலி மேலும் அதிகரிக்கும்

## எதிர்வரும் இரு வாரங்களில் நிலைமை மோசமடையுமென சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவிப்பு



•யோ.தர்மராஜ்

நாட்டில் நாளுக்கு நாள் கொரோனா தொற்று தீவிரமடைந்துள்ளதால் எதிர்வரும் 14 நாட்களில் நாங்கள் என்ன செய்தாலும் நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களின் எண்ணிக்கையும் மிக மோசமாக அதிகரித்துச் செல்லும். அரசாங்கம் முடிவெடுக்க தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் சில உயிர்களை இழக்க நேரிடும் என பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்தார்.

அத்தோடு, வைத்தியசாலைகள் மற்றும் முழு சுகாதாரத்துறைக்கும் தாங்கிக்கொள்ள முடியாதளவுக்கு நோயாளர்கள்... 02»

# தடுப்பூசி ஏற்றிய 200 பேர் கொரோனாவுக்குப் பலி



•யோ.தர்மராஜ்

நாட்டில் தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டவர்களில் இதுவரை 200 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். அவற்றில் 177 பேர் முதல் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களாக இருப்பதோடு, 23 பேர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களாக இருப்பதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொவிட் தொற்று மற்றும் தடுப்பூசிகள் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் பதிவாகும் மரணங்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்களே அதிகமாக உயிரிழந்துள்ளனர். 02»

# அதிபர் – ஆசிரியர் சம்பள முரண்பாட்டை ஆராய அமைச்சரவை உப குழு

# பால்மா இறக்குமதிக்கு வரிச்சலுகை

04»

## அமைச்சரவைத் தீர்மானங்கள்!

# தீர்வு கிடைக்கும்வரை போராட்டம் தொடரும்

## ஆசிரியர் சேவை சங்கம் மீண்டும் அறிவிப்பு



•யோ.தர்மராஜ்

அதிபர் மற்றும் ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கு ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித் தீர்வு கிடைக்கும்வரை நாங்கள் முன்னெடுத்த போராட்டங்கள் கைவிடப்படாது என்பதை ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் உறுதியளிப்பதாக இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் செயலாளர் மகிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை ஆராய்வதற்கு திங்கட்கிழமை மாலை இடம்பெற்ற அமைச்சரவைக்... 02»

# வைத்தியரின் உயிரை பறித்தது கொரோனா

கேகாலை கலிகமுவவில் கொரோனா பரவலைத் தடுப்பதற்காக போராடிய வைத்தியர் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளார். கலிகமுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரதான மருத்துவராகிய டாக்டர் பத்ம ஷாந்த (வயது 60) என்பவரே இவ்வாறு உயிரிழந்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொரோனா தொற்றுக்குள்ளாகி கடந்த மாதம் அவர் கேகாலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக பேராதனை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில், நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழந்த வைத்தியரின் சடலம் சுகாதார விதிமுறைகளுக்கமைவாக கண்டி மஹய்யாவ பகுதியில் தகனம் செய்யப்பட்டது.

# நல்லைக் கந்தன் உற்சவத்துக்கு புதிய சுகாதார அறிவுறுத்தல்கள்

## தடுப்பூசி அட்டை அத்தியாவசியமென மாநகர சபை அறிவிப்பு




•யாழ். செய்தியாளர்

நல்லூர்க் கந்தனின் உற்சவத்திற்கு வருபவர்கள் தடுப்பூசி ஏற்றப்பட்டதை உறுதிப்படுத்தும் அட்டைகளை வைத்திருப்பது அவசியமாகுமென யாழ். மாநகர சபை அறிவுறுத்தியுள்ளது.

நல்லூர்க் கந்தன் உற்சவ நடைமுறைகள் தொடர்பாக யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. 02»

# ஏறாவூரில் தாயை கொலைசெய்த மகன்

## தங்கச் சங்கிலியை கொடுக்க மறுத்ததால் கொடூரம்

08»

# கொரோனா உயிர்ப்பலியின் 75 வீத பொறுப்பை கொவிட் தடுப்பு செயலணி ஏற்கவேண்டும்

## நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன ஆவேசம்

**நா. தினுஷா**

“ஓகஸ்ட் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் நாட்டில் பாரிய அச்சுறுத்தல் நிலை ஏற்படும் என்றும், நாளொன்றுக்கு 200 பேர் வரையில் கொரோனாவால் உயிரிழக்கும் நிலைமை உருவாகுமெனவும் ஒன்றரை மாதத்துக்கு முன்னர் நான் அறிவித்திருந்தேன். இதுவரையில் பலியான அப்பாவி மக்களின் உயிர்களுக்கான 75 சதவீத பொறுப்பையும் கொவிட் - 19 தொற்றைத் தடுப்பதற்கான ஜனாதிபதி செயலணியே பொறுப்புக்கூற வேண்டும்.”

- இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது நாட்டில் தற்போதைய கொரோனா நிலைவரம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

சர்வதேசத்தால் வெளியிடப்படும் சுகாதார பரிசோதனை அறிக்கைகள், எமது விசேட வைத்திய நிபுணர்களினால் முன்வைக்கப்படும் அறிக்கைகள், உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையென சகலவற்றையும் பரிசீலனைக் குட்படுத்தியதன் பின்னரே ஒரு தீர்மானத்துக்கு வந்தோம்.

வைத்திய நிபுணர்களும் இதுதொடர்பில் எச்சரிக்கை விடுத்திருந்தனர். ஆனால், அதனை அரசாங்கம் கண்க்கில்கூட எடுத்துக்கொள்ள வில்லை. சிறியளவான கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்பத்திலேயே ஒருசில நாடுகள் முழுமையாக முடக்கப்பட்டன. ஆனால், 2,500 நோயாளர்கள் அடையாளம் காணப்பட்ட சந்தர்ப்பத்தில் முழுநாட்டையும் திறப்பதற்கு நடவடிக்கை எடுத்தோம். டெல்ட்டா தொற்றின் வீரியத்தால் இந்தியாவுக்கு நேர்ந்த அவலத்தை நாம் நேரடியாக பார்த்தோம். ஒருசில நாடுகள் இன்னும் முடக்க நிலையிலேயே இருந்து வருகின்றன.

சாதாரண வைரஸை விட 60 சதவீதம் வீரியம் கொண்டதாக உள்ளது. ஆனால், இந்த தொற்று நிலைமையை சமாளிப்பதற்கான சுகாதார வசதிகளுக்கான பற்றாக்குறை நாட்டில் உருவாகியுள்ளது. நோயாளர்களுக்கான கட்டில்களுக்கும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான கட்டில்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நாட்டிலுள்ள அநேகமான வைத்தியசாலைகளில் 3/4 பங்கு கொரோனா நோயாளர்களே காணப்படுகின்றனர். இந்நிலையில், கொரோனா தவிர்ந்த ஏனைய நோயாளர்கள் சிகிச்சை பெறவதற்குத் தேவையான இடவசதி இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

மறுபுறம் வைத்தியசாலைகளில் இறந்தவர்களின் சடலங்கள் குவிந்து வருகின்றன. சில தினங்களுக்கு முன்னர் களுத்துறை வைத்தியசாலையில் 41 சடலங்கள் தேங்கியிருந்தன. அதேபோன்று, பாணந்துறை, கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில என சகல வைத்தியசாலைகளிலும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கொரோனா தொற்றுக்குள்ளான நோயாளர்கள், கொரோனா தொற்றுக்குள்ளாத நோயாளர்கள் என சகலரும் வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருவதை அவதானிக்கக் கூடிதாகவுள்ளது. இது அபாய நிலையாகும்.

எமது நாடு இன்னும் உயர்த்தப்பட்ட அபாயநிலையை சந்திக்கவில்லை என்பதை கருத்திற்கொள்ள வேண்டும். இதனை விட அபாயம் நிறைந்த நிலையை நோக்கியே நாடு சென்றுகொண்டிருக்கிறது. செப்டெம்பர் மாதமாகும்போது இதனைவிட பல மடங்கு அபாயநிலை உருவாகும். கொரோனா தொற்றினால் இதற்கு முன்னர் எமது நாட்டில் ஏற்பட்ட நிலைமையை இந்த அரசாங்கம் ஒரு பாடமாகக் கொள்ளவில்லை.

ஆகவே, பொலிஸாரையும் இராணுவத்தினரையும் பயன்படுத்தி உடனடியாக சிகிச்சைகளுக்காக புதிய நிலையங்களை உருவாக்கி நோயாளர்களுக்குத் தேவையான கட்டில் வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கவேண்டும். அதுபோன்று, ஒட்சிசன் உற்பத்தியில் திறனில் 30 சதவீதத்துக்குக் குறைவான அளவு ஒட்சிசனே பயன்படுத்துவதாக உற்பத்திசெய்யும் நிறுவனம் அறிவித்துள்ளது. ஆகவே, 70 சதவீத ஒட்சிசன் பயன்பாடு இல்லாமல் இருக்கிறது. அவற்றை நோயாளர்களுக்கு வழங்குவதற்கான ஓர் ஏற்பாடு இல்லாத நிலை உருவாகியுள்ளது. அதனை நிவர்த்தி செய்வதனூடாக வைத்தியசாலைகளில் நிலவும் ஒட்சிசன் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்துகொள்ளக்கூடியதாக இருப்பதுடன், இறக்கும் அப்பாவி மக்களை காப்பாற்றக்கூடியதாக இருக்கும். இதுவரையில் பலியான அப்பாவி மக்களின் உயிர்களுக்கான 75 சதவீத பொறுப்பையும் கொவிட் - 19 தொற்றைத் தடுப்பதற்கான ஜனாதிபதி செயலணியே பொறுப்புக் கூறவேண்டும் என மிக பொறுப்புடன் தெரிவிப்பதாக சுட்டிக்காட்டினார்.



தடுப்புக்காவலில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீனை 111 நாட்களுக்குப் பின்னர் நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தபோது. (படப்பிடிப்பு - சமன் அபேசிறிவர்தன)





புத்தளம் மக்களுக்கான கொரோனா தடுப்பூசிகளை முறையாக வழங்கக் கோரி மஹவெவ பிரதேசத்தில் பொம்மைகளை வைத்து ஆர்ப்பாட்டம். (படங்கள் : ஜூட் சமந்த)

### தீர்வு கிடைக்கும்வரை...

கூட்டத்தில் அமைச்சர்களின் உப குழு நியமிக்கப்பட்டமை குறித்து கருத்து தெரிவிக்கும் வகையில் நேற்று கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களின் சம்பள முரண்பாடுகளை தீர்ப்பதாகக் கூறிய அரசாங்கம் இதுவரை மூன்று அமைச்சரவைக் கூட்டங்களை கடந்துள்ளது. கடந்த வாரம் கல்வி அமைச்சருடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின்போது, நேற்று (நேற்றுமுன்தினம்) கூடிய அமைச்சரவையில் இறுதித் தீர்மானத்தை பெற்றுத்தருவதாகக் கூறினர்.

இந்நிலையில், தற்போது அமைச்சரவை உப குழுவொன்றை நியமித்துள்ளதாக கூறப்படுகின்றது. இது அரசாங்கத்தின் தீர்மானம். அதனை நாங்கள் எதிர்க்கவோ அல்லது அதற்கு இணக்கம் தெரிவிக்கவோ் முடியாது. ஆனால், இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கு அரசு பக்கத்தில் எடுக்கும் நடவடிக்கைகள் குறித்து சில சில சந்தேகங்கள் இருக்கின்றன.

பிரதமர் மற்றும் கல்வி அமைச்சருடன் பல முறை பேச்சுவார்த்தை நடத்தியும் இதற்கு தீர்வில்லை. ஆனால், இந்தப் பிரச்சினையை தொடர்ந்து இழுத்துக்கொண்டுசென்று முடிவுக்குக் கொண்டுவர முடியும் என அரசாங்கம் நினைத்தால் அது தவறு. அவ்வாறு நடப்பதற்கு வாய்ப்பில்லை.

சம்பள முரண்பாட்டுக்கு எங்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய இறுதித் தீர்வு கிடைக்கும் வரை நாங்கள் முன்னெடுத்த போராட்டங்கள் கைவிடப்படாது என்பதை ஆசிரியர்களுக்கும் அரசுக்கும் உறுதியளிக்கின்றோம். அரசாங்கத்தின் உப குழு பிரச்சினையை தீர்ப்பதற்கானதா அல்லது பிரச்சினையை இழுப்பதற்கானதா என்ற ஒரு முடிவுக்கு எங்களால் வரமுடியாதுள்ளது. இந்தப் பிரச்சினையை அரசாங்கத்தால் கைவிட முடியாது. அந்தளவிற்கு நாங்கள் அழுத்தம் கொடுத்துள்ளோம். இந்த பிரச்சினையை நாங்கள் ஒருபோதும் கைவிடவும் மாட்டோம் - என்றார்.

### தடுப்பூசி ஏற்றிய...

அத்தோடு, 80 வீதமானோர் தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆகவே, நாட்டில் இன்னும் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாத 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் இருப்பார்களாக இருந்தால் தயவுசெய்து அருகிலுள்ள தடுப்பூசி நிலையங்களுக்குச் சென்று தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

இதேவேளை, தடுப்பூசிகள் பெற்றுக்கொண்டவர்களில் இதுவரை 200 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். அவற்றில் 177 பேர் முதல் தடுப்பூசியை பெற்றுக்கொண்டவர்களாக இருப்பதோடு, 23 பேர் இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டவர்களாக இருக்கின்றனர்.

மேலும், நாட்டில் இதுவரை இரண்டு தடுப்பூசிகளும் பெற்றுக்கொண்டவர்களின் எண்ணிக்கை 2.7 மில்லியனுக்கும் அதிகமாகும். அவ்வாறாயின் இரு தடுப்பூசிகளையும் பெற்றுக்கொண்டு 23 பேர் மாத்திரம் உயிரிழந்துள்ளதாயின் அது 2.7 மில்லியனிலிருந்தே உயிரிழந்துள்ளனர். இந்த 23 பேரும் வேறு நோய்த் தாக்கங்களுக்கு உள்ளானவர்களாகவும் இருக்கின்றனர் - என்றார்.

### மாகாண...

முன்னர் திருமண மண்டபங்களின் ஆசனங்களின் எண்ணிக்கை 500இற்கும் அதிகமாக காணப்பட்டால் 150 பேர் கலந்துகொள்வதற்கும் 500இற்கும் குறைவாக காணப்பட்டால் 100 பேர் கலந்துகொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையிலேயே நேற்று நள்ளிரவும் முதல் புதிய விதிமுறைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அத்தோடு, புதிய சுகாதார வழிகாட்டிகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவித்தல்கள் சுகாதார அமைச்சினால் நேற்று மாலை வெளியிடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

### அரசு முடிவெடுக்க...

அதிகரித்துள்ளதை உடனடியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தாக வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நாட்டின் கொரோனா தொற்றின் தீவிரம் குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் 5 நாட்களுக்கு மேலாகவும் 2 ஆயிரத்து 500 ஐ தாண்டிய கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். நான்கு நாட்களுக்கு மேலாக 100 ஐ அண்மித்த மரணங்கள் பதிவாகிய நிலையில் நேற்று முன்தினம் 100 ஐ தாண்டிய கொரோனா மரணங் கள் பதிவாகியுள்ளன.

ஆகவே, எதிர்வரும் 14 நாட்களில் நாங்கள் என்ன செய்தாலும் நோயாளர்களின் எண்ணிக்கையும் மரணங்களும் மிக மோசமாக அதிகரித்துச்செல்லும்.

வைத்தியசாலைகள் மற்றும் முழு சுகாதாரத் துறைக்கும் தாங்கிக்கொள்ள முடியாதளவிற்கு நோயாளர்கள் அதிகரித்துள்ளதை உடனடியாக கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்தாக வேண்டும். பொருளாதாரம் பாதிக்காத வகையில் சமூகத்தில் ஒன்றிணையும் அனைத்து ஒன்றுகூடல்களையும் தடுக்கவேண்டும். மாகாணங்களுக்கிடையில் கடுமையான பயணக் கட்டுப்பாட்டை அமுல்படுத்த வேண்டும். அத்தோடு, தேவையற்ற விதத்தில் நிறுவனங்களுக்கு ஊழியர்களை அழைப்பதை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்தும் கொரோனா தொற்றை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாவிட்டால் நாங்கள் மிக மோசமான நிலைமைக்குத் தள்ளப்படுவோம்.

நாங்கள் முடிவெடுக்க தாமதிக்கும் ஒவ்வொரு நிமிடமும் சில உயிர்களை இழக்க நேரிடும். இந்த அனைத்து உயிர்களையும் பாதுகாக்கவேண்டிய பொறுப்பு எங்கள் அனைவருக்கும் இருக்கின்றன என்பதையும் நாங்கள் உணரவேண்டும்.

அடிமட்டத்தில் கிடைக்கும் நோயாளர்களின் எண்ணிக்கை மற்றும் மரணங்களின் எண்ணிக்கை உயர்மட்டத்திற்கு சரியான முறையில் செல்வதில்லை என்பது தெளிவாகியுள்ளது. சரியான தகவல்கள் வெளியிடாதமையினால் பொது மக்கள் உண்மை நிலைமைகளை அறிந்துகொள்ள முடியாதுள்ளனர். ஆகவே, அடிமட்டத்தில் கிடைக்கும் சரியான தகவல்களை தேசிய மட்டத்திற்கும் கொண்டுசெல்லுமாறு சுகாதாரத்துறையினரிடம் கோரிக்கை விடுக்கின்றோம் - என்றார்.

### ஊரடங்கை அமுல்படுத்துக!...

ஏற்கனவே வேறு நோய்களால் பாதிக்கப்பட்டோருக்கு கொவிட் - 19 தொற்று பரவும் பட்சத்தில் ஆபத்து அதிகமாகும். அத்துடன், கொரோனா தொற்றினால் பாதிக்கப்படுவோர் உயிர் பிழைத்திருப்பதற்கு அவசர சிகிச்சைகளும் தேவைப்படுகின்றன.

இதனால் கடுமையான சுகாதார நடைமுறைகள் அமுல்படுத்தப்படவேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் சுகாதாரத்துறை செயலிழக்கும் நிலை ஏற்படக்கூடிய வாய்ப்பை தவிர்க்க முடியாது எனக் கருதுகிறோம்.

ஆதலால் ஊரடங்கை அமுல்படுத்துவதன் ஊடாகவே மக்களின் நடமாட்டங்களைத் தவிர்த்துக்கொள்ள முடியும். நாட்டை பொருளாதார தாக்கத்திலிருந்து மீட்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் குறித்து நாம் அறிந்திருக்கிறோம். எனினும், எமது கருத்தின் பிரகாரம் இறுக்கமான நடைமுறைகள் அமுல்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### நல்லைக் கந்தன்...

அந்த அறிக்கையிலுள்ள விடயங்கள் வருமாறு;

தற்போது பரவி வரும் கொரோனா தொற்றைக் கருத்திற்கொண்டு நல்லூர் முருகப்பெருமானின் இவ்வருட உற்சவம் முழுமையான சுகாதார நடைமுறைகளை மிக இறுக்கமாகப் பேணி அடியார்களின் பங்குபற்றுதலின்றி அல்லது அந்தந்த சந்தர்ப்பங்களுக்கேற்ப மட்டுப்படுத்தப்பட்ட அடியார்களுடனேயே நடைபெறவுள்ளது. எனவே, இந்த நெருக்கடிமிக்க அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு மிக மிக பொறுப்புடனும் அவதானத்துடனும் நடந்துகொள்ளுமாறு நல்லைக் கந்தன் அடியார்களை மிகப் பணிவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள் மற்றும் அறிவுறுத்தல்கள், அத்துடன், யாழ். மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் மற்றும் யாழ்ப்பாணம் மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியால் விடுக்கப்படும் சுகாதார நடைமுறைகளை கருத்திற்கொண்டும் சுகாதார அமைச்சினால் விடுக்கப்படும் அறிவுறுத்தல்களுக்கேற்பவும் நடைமுறைகளில் மாற்றங்கள் பற்றி அடியார்களுக்கு அவ்வப்போது அறிவிக்கப்படும். குழந்தைகளும் சிறுவர்களும் முதியவர்களும் ஆலயத்திற்கு வருவதை முற்றாகத் தவிர்க்கவும்.

கொவிட்-19 நோய் அறிகுறிகள் உள்ளவர்கள் வீதித்தடையில் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் வேளையில் அடியார்கள் முழுமையாக நடைமுறைகளை பின்பற்றுவதோடு தடுப்பூசி போடப்பட்ட அட்டைகளை வைத்திருப்பதும் அவசியமாகும்.

ஆலயத்திற்கு அனுமதிக்கப்படும் வேளையில் ஆண் அடியார்கள் வேஷ்டியுடனும் பெண்கள் கலாசார உடைகளுடனும் வருதல் வேண்டும்.

சுகாதார நடைமுறைகளுக்கேற்ப அடியார்கள் ஆலயத்தினுள் வரையறுக்கப்பட்ட அளவில் அனுமதிக்கப்படும் பட்சத்தில் தேவஸ்தானத்தின் அறிவுறுத்தல்களின்படி அவர்கள் ஆலய வளாகத்தினுள் தரித்து நிற்கவோ அமர்ந்திருக்கவோ அனுமதிக்கப்படமாட்டார்கள். உரிய சமூக இடைவெளியுடன் வழிபாட்டை நடத்திச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

பக்தர்களின் நன்மை கருதியும் ஆலய உற்சவம் அமைதியான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்தும் முகமாகவும் இம்முறையும் வீதித்தடைகள் நாளை நள்ளிரவுமுதல் எதிர்வரும் செப்டெம்பர் 8ஆம் திகதி இரவுவரை முழுமையாக அமுல்படுத்தப்படும். வழமைபோல் மாற்றுப்பாதை அமுலில் இருக்கும். அடியவர்களின் சுகாதார நன்மையைக் கருத்திற்கொண்டு ஆலயத்தினுள் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பத்தில் சகல அடியவர்களும் முத்திரைச் சந்தியிலிருந்து பருத்தித்துறை வீதியால் மாத்திரமே ஆலயத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுவர். ஆலயத்திற்கு வந்து சேரும் ஏனைய மூன்று வீதிகளும் அடியவர்கள் செல்வ தற்கு முழுமையாகத் தடைசெய்யப்படும். வீதித்தடைக்கு உள்ளே நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட மக்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள், நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் மாத்திரம் மாநகர சபையின் அனுமதி அட்டையுடன் ஏனைய வீதித்தடைகளினூடாகச் சென்று வர அனுமதிக்கப்படுவர்.

ஆலயத்தினுள் அடியவர்களை அனுமதிப்பது, எத்தனை பேரை அனுமதிப்பது போன்றவை தொடர்பாக அவ்வப்போது உள்ள நிலைமைகளைக் கருத்திற்கொண்டு சுகாதாரத் தரப்பின் வழிகாட்டலோடு தீர்மானிக்கப்படும்.

தற்போதைய அசாதாரண சூழ்நிலையில் அங்கப்பிரதட்சணம் செய்தல், அடி அழித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், காவடி, தூக்குக்காவடி எடுத்தல் போன்ற நேர்த்திக்கடன்கள் மேற்கொள்ளுதல், தாகசாந்தி, அன்னதானம் வழங்கல் போன்றவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலிலும் ஆலயத்தை அண்டியுள்ள பகுதிகளிலும் அடியார்கள் மற்றும் பொதுமக்கள் கூடுவதற்கான தெய்வீக சொற்பொழிவுகள், தெய்வீக இசை அரங்குகள், நிகழ்வுகள், களியாட்ட நிகழ்வுகள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன.

ஆலய உற்சவக் காலத்தில் ஆலய சுற்றாடலில் சுகாதார நடைமுறைகளை பின்பற்றத் தவறுவோர் அல்லது மீறுபவர்களின் மீது சுகாதார நடைமுறைகளின்கீழ் கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

தற்போதைய சூழ்நிலையில் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமை, மீறுகின்றமை போன்றவற்றால் ஏற்படக்கூடிய அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு முழுமையான ஒத்துழைப்பை வழங்கவேண்டும். இக்கொரோனா தொற்றுச் சூழலினால் எம்மால் எடுக்கப்படும் விசேட நடவடிக்கைகளால் பக்தர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு மனம் வருந்துவதோடு, தற்போது எழுந்துள்ள மிகக் கடுமையான நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு வழிகாட்டல்களுக்கும் நடவடிக்கைகளுக்கும் பூரண ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென வேண்டுகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### ரிஷாட்டுக்கு ஓகஸ்ட் 18....

உயிர்த்த ஞாயிறு தினத்தன்று சினமண்ட் கிராண்ட் ஹோட்டலில் தற்கொலை குண்டுத் தாக்குதலை மேற்கொண்ட மொஹமட் இப்ராஹிம் இன்ஷாப் அஹமட்டுக்குச் சொந்தமான செப்புத் தொழிற்சாலைக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு அப்போதைய அமைச்சர் என்றவகையில் ரிஷாட் பதியுதீன் தலையீடு செய்ததாக எழுந்த குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மன்றுக்கு அறிவித்தனர்.

அத்துடன், குறித்த நிறுவனத்தினூடாக கிடைக்கப்பெற்ற வருமானமே ஈஸ்டர் குண்டுத் தாக்குதலுக்குத் தேவையான பணத்தின் மூலாதாரமாக இருந்ததாகவும் சுட்டிக்காட்டினர்.

இதுதொடர்பில் அமைச்சின் மேலதிக செயலாளராக பணியாற்றிய பாலசுப்பிரமணியம் என்பவருடன் ரிஷாட் எம்.பி. மேற்கொண்ட தொலைபேசி அழைப்பு குறித்து விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டதாகவும் அறிவித்தனர்.

எனவே, இந்த வழக்கு முடியும்வரை ரிஷாட் பதியுதீனை விளக்கமறியலில் வைக்குமாறு குற்றப்புலனாய்வுப் பிரிவினர் நீதவானிடம் கோரிக்கை முன்வைத்தனர்.

இதேவேளை, ஓர் அமைச்சர் தன்னுடைய அமைச்சின் மேலதிக செயலாளருடன் தொலைபேசியில் உரையாடுவது ஒரு தவறான செயலல்ல என ரிஷாட் பதியுதீன் சார்பில் மன்றில் ஆஜராகியிருந்த சட்டத்தரணிகளான ருஷ்டி ஹபீப், என்.எம்.ஷஹீட் ஆகியோர் சுட்டிக்காட்டினர்.

தொலைபேசி உரையாடலில் என்ன பேசப்பட்டது என்பது வெளிப்படுத்தப்படாமல் அழைப்பு மேற்கொண்டமைக்காக கைதுசெய்யப்படுவது பொருத்தமற்றது எனவும் தெரிவித்தனர்.

இதுதொடர்பான வாதப் பிரதிவாதங்களை செவிமடுத்து விசாரணை அறிக்கைகளை ஆராய்ந்த நீதவான் பிரியந்த லியனகே, ரிஷாட் பதியுதீன் எம்.பியை எதிர்வரும் 18ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

உயிர்த்த ஞாயிறு தின குண்டுத் தாக்குதலுடன் தொடர்புடைய தற்கொலை குண்டுதாரிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின் அடிப்படையில் பயங்கரவாதத் தடுப்புச்சட்டத்தின்கீழ் கடந்த ஏப்ரல் மாதம் 24ஆம் திகதி ரிஷாட் பதியுதீன் வெள்ளவத்தையிலுள்ள அவரது இல்லத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### நாட்டை முடக்குவதே...

தீர்மானத்தை எந்தச் சந்தர்ப்பத்தில் எடுக்க வேண்டும் என்பதை உறுதியாகக் கூற முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹேலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

சுகாதாரத்துறையினர் வழங்கும் ஆலோசனைக்கமையே கொரோனா கட்டுப்பாடுகள் தொடர்பான தீர்மானங்களை அரசாங்கம் எடுக்கும். அதன்படி, நாட்டை முடக்குவது குறித்து சுகாதாரத்துறையினரின் ஆலோசனைக்கமையவே இறுதி முடிவெடுக்கப்படும் என அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோது, ஊடகவியலாளர்களின் கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர்கள் இதனைக் கூட்டாக தெரிவித்தனர்.

இது குறித்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல கருத்து தெரிவிக்கையில்,

கொரோனா தொற்றின் தீவிரத்தால் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தியாக வேண்டும் என்ற நிலைமை ஏற்பட்டால் மாத்திரமே அமுல்படுத்தப்படும். எனினும், நாங்கள் ஊடரங்கு சட்டத்தை அமுல்படுத்தவே மாட்டோம் என நிராகரிக்க வில்லை. அது எங்களின் இறுதி அஸ்திவாரமாகவே உள்ளது.

கொரோனா தொற்று கட்டுப்பாட்டுக்கான தீர்வாக தடுப்பூசியே இருக்கின்றன. இரு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதே தற்போதைய தீர்வாக இருக்கின்றன – என்றார்.

இது குறித்து அமைச்சரவை இணை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரண கருத்து தெரிவிக்கையில்,

சுகாதாரத்துறையினால் விசேட சுகாதார விதிமுறைகள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுமாக இருந்தால் அது தொற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கையாகும்.

எனினும், தற்போதைய ஆபத்து நிலைமையை புரிந்துகொண்டு பாதுகாப்பாக செயற்படுவதற்கான கூட்டுப்பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. இது சுகாதாரத்துறையினரின் கோரிக்கையாகவும் இருக்கின்றது. இதற்கு முன்னர் பல தடவைகள் நாடு முடக்கப்பட்டது. ஆனால், அந்த நிலைமைகளைத் தாண்டி தற்போது கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், பயணக் கட்டுப்பாடுகள் உள்ளிட்டு சுகாதாரத்துறையினர் முன்வைக்கும் பரிந்துரைகளை ஏற்பதற்கு அரசாங்கம் தயாராகவே இருக்கின்றது.

உலகளவில் முடக்கத்திலிருந்து விடுதலை பெற்றுத் தருமாறு கோரி போராட்டங்களையும் முன்னெடுக்கும் நிலைமைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். இவை அனைத்துக் காரணங்களையும் ஆராய்ந்து சுகாதாரத்துறையினர் வழங்கும் ஆலோசனைக்கமையவே அரசாங்கம் முடிவெடுக்கும். அதன்படி, நாட்டை முடக்குவது குறித்து சுகாதாரத்துறையினரின் ஆலோசனைக்கமையவே இறுதி முடிவெடுக்கப்படும் - என்றார்.

# இன்றைய ராசி பலன்

**நாள்: 11.08.2021 புதன்கிழமை - ஆடி 26**

**ஜோதிடர் நற்பவி**

**தொலைபேசி இலக்கம் : 0715346213/0714037141**

| சுப நேரங்கள் | அசுப நேரங்கள் | |
|---|---|---|
| சுப நேரங்கள் | ராகு காலம் | எமகண்ட காலம் |
| காலை 9.23-10.15 | பிற்பகல் 12.17-1.50 | காலை 7.40 -09.13 |
| பிரம்ம முகூர்த்தம் | குளிகை காலம் | துர் முகூர்த்தம் |
| மாலை 4.35 -5.21 | பிற்பகல் 10.45-12.17 | காலை 11.51 - 12.40<br>பிற்பகல் 10.08-02.46 |

**மேடம்** – தேவையற்ற உறவு அல்லது நட்பில் விலகியிருத்தல் நன்மை. வேலைத்தளங்களில் சிறிய பிரச்சினைகள் ஏற்பட்டாலும், பதவியில் மேல் நிலையில் இருப்பவர்களின் ஆதரவு கிடைக்கும்.

**ரிஷபம்** – கூட்டு வியாபாரத்தில் சிறிய பிரச்சினைகள் உண்டாகலாம். பங்குச்சந்தை இலாபங்கள் கிடைக்கப் பெறலாம்.

**மிதுனம்** – வீண் விவாதங்கலிருந்து ஒதுங்கியிருப்பது நல்லது. உங்கள் ஆக்கங்களை திறமையாக செயற்படுத்தும் நிலை உருவாகலாம்.

**கடகம்** – வீடு/காணி வாங்கும் நிலையும், திருமண நிகழ்வுகளுக்கான நல்ல நிலைமைகளும் உண்டாகலாம். பிள்ளைகளின் நல்ல நிலைமைகளில் மகிழ்ச்சி உண்டாகும்.

**சிம்மம்** – தம்பதியரிடையே ஆதரவு நிலை பெருகும். வழக்கு பிரச்சினைகள் உண்டாகலாம். பணிகளில் சிறந்த சூழல் உருவாகும்.

**கன்னி** – வேலைத்தளங்களில் வேலைகள் குறைந்தும், மதிப்பு அதிகரித்தலும் உண்டாகலாம். சாத்தியமான எண்ணங்கள் நிறைவேறலாம்.

**துலாம்** – வீட்டில் வயதில் மூத்தோரின் அறிவுரை பயன் தரலாம். வேலைத்தன்மைகளின் புதிய விடயங்களில் கவனம் தேவைப்படும்.

**விருச்சிகம்** – திருமண சுபங்கள் உண்டாகும். தகவல் தொழில்நுட்பப் பணிகளில் நன்மை உண்டாகும். காணி/வீடு சம்பந்தப்பட்ட விடயங்களிலும், வழக்குகளிலும் நன்மை கிடைக்கலாம்.

**தனுசு** – ஊடகத்துறையில் இருப்பவர்களுக்கு நல்ல செய்தி கிடைக்கப் பெறலாம். பிறரின் விடயங்களில் தலையீடு செய்யாமல் இருப்பது நன்மை.

**மகரம்** – கட்டுமானம் மற்றும் பொறியியல் தொழில் வருவாய் அதிகரிக்கும். உடல்நலத்தில் கவனம் தேவைப்படலாம்.

**கும்பம்** – பெற்றோரின் உடல்நலத்தில் சிறிய கவனம் தேவைப்படலாம். தம்பதியரிடையே சகிப்புத்தன்மை தேவைப்படலாம். பணிகளில் உற்சாகம் தேவைப்படும்.

**மீனம்** – வியாபாரத்தில் புதிய நிதி ஒதுக்கீடு பலன் தரும். பணிக்கான நேர்முக தேர்வுகள் பயனளிக்கும்.

## பரீட்சைகள் திணைக்களத்தின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டன

நாட்டில் அதிகரித்துள்ள கொரோனா பரவலுக்கு மத்தியில் பரீட்சைகள் திணைக்களத்தின் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, சான்றிதழ்களுக்கு ஒன்லைனில் அல்லது மின்னஞ்சல் மூலம் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். தேவையின் அடிப்படையில் விண்ணப்பதாரரின் முகவரிக்கு விரைவு தபால் மூலம் அனுப்பப்படவுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் பரீட்சைகள் திணைக்களத்தின் அதிகாரபூர்வ மொபைல் அப்ளிகேஷனைப் பயன்படுத்தி விண்ணப்பங்களை விண்ணப்பிக்கலாம். இது தொடர்பான மேலதிக விபரங்களை திணைக்களத்தின் அதிகாரபூர்வ இணையத்தளம் மூலம் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2001 மற்றும் அதன் பின்னர் க.பொ.த. (சா/த) மற்றும் (உ/த) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 0112788137 எனும் தொலைபேசி இலக்கத்திலும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் 0112784323 எனும் இலக்கத்திலும் தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## களுபோவில வைத்தியசாலையில் 24 வீதமானோருக்கு ஒட்சிசன் தேவை

கொழும்பு தெற்கு (களுபோவில) போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களில் 24 வீதமானோருக்கு ஒட்சிசன் தேவைப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த வைத்தியசாலையில் நாளாந்தம் 5 முதல் 7 பேர்வரை கொரோனா தொற்று காரணமாக உயிரிழப்பதாக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதன் காரணமாக சடலங்களை பிணவறையில் வைப்பதற்கு இடப்பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் கொரோனா நோய்த் தொற்றுக்குள்ளாகி சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுவோரில் 60 வீதமானோர் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அத்துடன், அந்த நோயாளர்களில் 24 வீதமானோருக்கு ஒட்சிசன் தேவைப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




## சுகாதார விதிமுறைகளை மீறிய 70 பஸ்களின் அனுமதிப்பத்திரங்கள் இரத்து

சுகாதார விதிமுறைகளை மீறிச் செயற்பட்ட 70 பஸ்களின் வீதிப்போக்குவரத்து அனுமதிப் பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன. கொவிட்- 19 தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் பஸ்களில் கடுமையான சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறு அரசாங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளபோதிலும் அதனை மீறியமைக்காக அனுமதிப்பத்திரங்கள் இரத்துச்செய்யப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மாகாணங்களுக்கிடையில் சேவைகளில் ஈடுபடும் 50இற்கும் அதிகமான பஸ்களினதும் மாகாணத்துக்குள் மாத்திரம் சேவையில் ஈடுபடும் 17 பஸ்களினதும் அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள விதிமுறைகளை மீறும் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களை கண்டறிவதற்கான சோதனை நடவடிக்கைகள் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் நாடுமுழுவதும் கண்காணிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம மேலும் குறிப்பிட்டுள்ளார்.

### கொரோனா தொற்றுக்குள்ளானோர் விபரம்

| மொத்த பாதிப்பு | சிகிச்சை பெறுவோர் | குணமடைந்தோர் | புதிதாக அடையாளம் | மரணம் |
|---|---|---|---|---|
| 338162 | 34778 | 298162 | 1992 | 5,340 |

## 60 வயதிற்கு மேற்பட்டோருக்கு வீடுகளுக்கே சென்று தடுப்பூசி

### தகவல்கள் திரட்டும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்

மேல் மாகாணத்தில் இதுவரை தடுப்பூசி பெறாத 60 வயதுக்கு மேற்பட்டவர்களை அடையாளம் கண்டு அவர்களின் வீடுகளுக்கே சென்று தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பிரதேச செயலாளர்கள் ஊடாக கிராம உத்தியோகத்தர்களிடமிருந்து அவர்கள் தொடர்பிலான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் தேடுதல் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தகவல்களை பெற்றுக்கொண்ட பின்னர், தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்களை தடுப்பூசி மத்திய நிலையங்களுக்கு அழைத்துவந்து அல்லது அவர்களது வீடுகளுக்குச் சென்று தடுப்பூசியை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கூறியுள்ளார்.

60 வயதுக்கு மேற்பட்ட பலர் இதுவரை தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவில்லை என சுகாதார அமைச்சுக்கு கிடைத்த தகவலை அடிப்படையாகக்கொண்டு இந்தத் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது.

இதனிடையே, முதலாவது தடுப்பூசியை பெறாத மேல் மாகாணத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்ட மற்றும் கடுமையான நோயினால் பாதிக்கப்பட்டவர்ளுக்கான தடுப்பூசிகளை வழங்குவதற்காக நேற்றுமுதல் விசேட வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

## கொட்டகலையில் 23,444 பேருக்கு நேற்று தடுப்பூசி செலுத்தப்பட்டது






கொட்டகலை பொதுச் சுகாதார அதிகாரப் பிரிவிலுள்ள சுமார் 23 ஆயிரத்து 444 தோட்ட மக்களுக்கு தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாகவும் இன்றைய தினமும் 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாவது டோஸ் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை முன்னெடுத்திருப்பதாகவும் கொட்டகலை பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி கே.சுதர்சன் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்டத்தில் அதிகரித்து வரும் கொரோனா நோயாளர்களை கட்டுப்படுத்துவதற்காக தொடர்ச்சியாக தடுப்பூசி பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்று வருகின்றன.

இந்த தடுப்பூசிகள் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கைக்கமைய கொட்டகலை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கொட்டகலை ஸ்டோனிகிளிப் கிராமசேவகர் பிரிவில் ஸ்டோனிகிளிப் கிளினக் நிலையத்தில் 60 மேற்பட்ட சுமார் 424 பேருக்கும், கூம்வுட் கிராம சேவகர் பிரிவில் தலவாக்கலை பாரதி தமிழ் வித்தியாலயத்தில் சுமார் 508 பேருக்கும் சினோபார்ம் இரண்டாவது டோஸ் பெற்றுக்கொடுக்கப்படுகிறது.

## துளிச் செய்திகள்

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கொரோனா தொற்றுக்குள்ளாகி உயிரிழந்த 70 பேரின் சடலங்கள் பிணவறையில் வைக்கப்பட்டுள்ளன. அங்கு நேற்று முன்தினம் 22 மரணங்கள் பதிவாகியதாகவும் அதில் 12 பேர் கொரோனா தொற்று காரணமாக உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனமடுவ, மஹ உஸ்ஸேவ பகுதியில் குடும்ப நிகழ்வொன்றை நடத்திய உறவினர்கள் 17 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. சுகாதார விதிமுறைகளை மீறி இரகசியமாக இந்த நிகழ்வை அவர்கள் ஏற்பாடு செய்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹோமாகம வைத்தியசாலையில் 204 கட்டில்கள் நோயாளர்களுக்கென காணப்படுகின்றபோதிலும் அங்கு 215 பேர் சிகிச்சைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலி, மக்குலுவ பகுதியில் இடம்பெற்ற திருமண நிகழ்வொன்றில் கலந்துகொண்ட 19 பேருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அந்நிகழ்வில் பங்கேற்ற அனைவரையும் தனிமைப்படுத்த சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஹம்பாந்தோட்டை, ரிதிகம பகுதியிலுள்ள முதியோர் இல்லத்தில் 46 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. அங்கு 170 பேர் இருப்பதாகவும் அவர்களை தனிமைப்படுத்தவும் பொதுச் சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் மாத்திரம் 21 ஆயிரத்து 840 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்களது உடல்நிலையை கருத்திற்கொண்டு அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கம்பஹா மாவட்டத்தில் நேற்றுக்காலை 10 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் ஆயிரத்து 213 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளங்காணப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகபட்சமாக 202 நோயாளர்கள் பியகம சுகாதார அதிகாரி காரியாலயத்துக்குட்பட்ட பகுதியில் பதிவாகியுள்ளனர்.

## புகையிரத சேவை திணைக்களத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோருக்கு தொற்று

இலங்கை புகையிரத சேவை திணைக்களத்தில் பணியாற்றும் நூற்றுக்கும் மேற்பட்டோர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பதாக ரயில் சாரதிகள் சங்கத்தின் தலைவர் இந்திக்க கொடிதுவக்கு தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தொற்றுக்குள்ளானோரில் ரயில் நிலைய பொறுப்பாளர்கள், சாரதிகள் மற்றும் சிற்றூழியர்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் கொரோனா தொற்றுப்பரவல் காரணமாக ரயில்களை இயக்குவதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர், திணைக்களத்துக்கு சுமார் 4.5 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

பயணக்கட்டுப்பாடு தளர்த்தப்பட்டுள்ளபோதிலும் ரயில்களில் பயணிப்போரின் எண்ணிக்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கொரோனாவுக்கு தம்பதிகள் பலி

தலவாக்கலை குணானந்தபுர பகுதியில் வசிக்கும் தம்பதியினர் கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் இருவரும் உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

71 வயதான கணவர் 6ஆம் திகதியும், 71 வயதான மனைவி 8ஆம் திகதியும் உயிரிழந்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.




தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

**2021, ஓகஸ்ட் 11ஆம் திகதி, புதன்கிழமை**

# காவல்துறையின் பொறுப்பு

கொவிட்-19 தொற்றுநோய் நடவடிக்கைகள் மற்றும் போதைப் பொருள் எதிர்ப்புப் போராட்டம் என்ற போர்வையில் இலங்கை பொலிஸார் அதிகளவில் ஆட்களை துஷ்பிரயோகம் செய்வதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஊடகங்களில் வெளியாகியிருந்த சமீபத்திய பொலிஸ் துஷ்பிரயோகங்களில் நீதிவிசாரணைக்குப் புறம்பான கொலைகள், சித்திரவதைகள் மற்றும் தன்னிச்சையாக தடுத்துவைத்தல் ஆகியவை உள்ளடங்குவதால், அரசாங்கம் பொலிஸாரின் சுயாதீனமேற்பார்வையைசீராக்கவேண்டும். அத்துடன் பொலிஸ் துஷ்பிரயோகங்கள் தொடர்பாக, அர்த்தபுஷ்டியான முறையில் விசாரித்து வழக்குத் தொடர வேண்டும். போதைப்பொருள் மற்றும் குற்றம் தொடர்பான ஐ.நா. அலுவலகம் மற்றும் பிரிட்டனின் ஸ்கொட்லாந்து பொலிஸ் போன்ற சர்வதேச பங்காளிகள், பொறுப்புக்கூறல் மற்றும் மறுசீரமைப்பில் முன்னேற்றம் ஏற்படும் வரை உதவித் திட்டங்களை நிறுத்தி வைக்க வேண்டும் எனவும் நியூயோர்க்கைத் தளமாக கொண்ட அந்த அமைப்பு தெரிவித்திருக்கிறது.

“இலங்கையின் பொலிஸார் தங்கள் செயற்பாடுகளை தூய்மைப்படுத்துவதற்கு பதிலாக, தங்களின் கடந்தகால மோசமான துஷ்பிரயோக பதிவுகளை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளனர்'' என்று மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் தெற்காசியாவிற்கான பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கூறியுள்ளார்.

“இலங்கை தரப்பில் மறுசீரமைப்பை மேற்கொள்வதற்கான அரசியல் விருப்பம் இல்லாமலிருப்பதையும், துஷ்பிரயோகமான முகவரமைப்புகளுடன் செயற்படுவது அபாயகரமானதென்பதையும் ஐ.நா. பிரிட்டன், மற்றும் இலங்கையின் சட்ட அமுலாக்கத்துடன் பணிபுரியும் ஏனையவர்கள் அடையாளம் கண்டுகொள்ளவேண்டும்'' என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

2021 மே முதல், கோவிட்-19 நோயாளர்களை அசாதாரணமான விதத்திலும், துஷ்பிரயோகமான முறையிலும் தனிமைப்படுத்துதல் உட்பட தொடர்புடைய சில சட்டவிரோத மரணங்களில் பொலிஸார் சம்பந்தப்பட்டுள்ளனரென சுட்டிக்காட்டப்படுள்ளது.

தற்போதைய பொலிஸ் துஷ்பிரயோகங்கள் ராஜபக்ஷ நிர்வாகத்தின் கீழ் சிவில் மற்றும் ஜனநாயக அரசியல்வெளி சுருங்கும் சூழலில் வருகிறது. ஜூலை மாதத்தில் தனிமைப்படுத்தப்படும் இடமொன்றில் அமைதியான முறையில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்களைத் தடுத்து நிறுத்துவது உட்பட, கருத்து சுதந்திரத்தைத் தடுப்பதற்கு கொவிட்-19 தொற்றுநோயை பொலிஸார் பயன்படுத்துவதற்கு இலங்கை வழக்கறிஞர் சங்கமும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

இலங்கையின் சட்ட அமுலாக்க முகவரமைப்புகள் பல்வேறு நாடுகளிடமிருந்து சர்வதேச ஆதரவைப் பெறுகின்றன. ஸ்கொட்லாந்து பொலிஸ் மூலம் பிரிட்டன் அரசு பொலிஸ் பயிற்சி அளிக்கிறது. போதைப் பொருள் மற்றும் ஏனைய குற்றங்களுக்கான ஐ.நா. அலுவலகம் இலங்கையின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவுகளுக்கு ஆதரவளிக்கிறது. இந்த பிரிவுகள் நீண்டகாலமாக கடுமையான உரிமை மீறல்கள், போதைப் பொருள் எதிர்ப்புத் திட்டங்கள் தொடர்பாக குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டவையாகும்.

இந்த நிலைமைக்கு தீர்வு காண்பதற்கானஅரசியல் விருப்பம் வெளிப்படுத்தப்படும்வரை சர்வதேச பங்காளிகள் இலங்கை சட்ட அமுலாக்க நிறுவனங்களுடன் தங்கள் செயற்பாட்டை இடைநிறுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியுள்ளது. இத்தகைய உதவி மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து மேம்படுத்த விரும்பாத முகவரமைப்புகளுக்கு அங்கீகாரம் அல்லது சட்டபூர்வமான அங்கீகாரத்தை அளிக்கின்றன.

ஐ.நா. முகவரமைப்புகள், இலங்கை பாதுகாப்பு படைகளுடனான எந்தவொரு செயற்பாடும், “மனித உரிமைகள் தொடர்பான விடாமுயற்சி கொள்கையின் அடிப்படையில் ஐ.நா. அல்லாத பாதுகாப்புப் படைகளுக்கான ஐ.நா. ஆதரவு” மற்றும் போதைப்பொருள் கொள்கை பற்றிய ஐ.நா.வின் பொதுவான நிலைப்பாடு என்பனவற்றுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தவேண்டும் .

''ராஜபக்ஷ அரசு பொலிஸ் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றச்சாட்டுகள் முறையாக விசாரிக்கப்பட்டு வழக்குத் தொடரப்படும் என்பதை வெளிப்படுத்தவேண்டிய தேவையுள்ளது. மேலும், சட்டமானது பொறுப்புக்கூறலை மேம்படுத்தவேண்டும். அதை பலவீனப்படுத்தக்கூடாது” என்று கங்குலி கூறியுள்ளார். “அது இடம்பெறும் வரை, சர்வதேச பங்காளிகள் இலங்கையில் மனித உரிமைகள் பற்றி எந்தவித பிரமையும் இல்லாமலிருக்க வேண்டும், என்பதுடன் அவர்கள் சட்ட அமுலாக்க முகவரமைப்புகளுக்கான உதவியை நிறுத்த வேண்டும்'' என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இந்த கருத்து மிகவும் கவனிக்கப்படவேண்டியதொன்றாகும். கொரோனா வைரஸ் பரவல் காலத்தில் மேற்கொள்ளப்படும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் பேரணிகளை பொலிஸாரை கொண்டு அடக்கும் வேலைகள் நடப்பதும், பொலிஸார் அவற்றை செய்வதும் வாடிக்கையாகி இருக்கிறது. அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தின் தலைவரை கைதுசெய்யச் சென்ற பொலிஸார் முகக்கவசம்கூட இல்லாமல் சென்று கைதுசெய்ததை காணமுடிந்தது. கொரோனாகாலத்தை காரணம்காட்டி மக்கள் மீது அடக்குமுறையினை பிரயோகிப்பது தவறான செயற்பாடாகும். மனித உரிமைகளை இந்தக் காலத்திலாவது மீறாமல் இருப்பது காவல்துறையின் பொறுப்பல்லவா?

# அமைச்சரவைத் தீர்மானங்கள்!

**09.08.2021 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள்**

**01.ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் கோவன் பல்கலைக்கழகத்திற்கும் (Edith Cowan University, Australia) இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்ளல்.**

இருதரப்பினர்களிடையே பரஸ்பரமாக உடன்பாடு எட்டப்படும் துறைகளில் ஆராய்ச்சிகளுக்கான ஒத்துழைப்புகளை மேம்படுத்தல், இருதரப்பினரின் தேவைகளுக்கமைய மாணவர் பரிமாற்றல் நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், விருந்தோம்பல் பண்பு தொடர்பான நிர்வாகக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல், பாடவிதானங்கள் மற்றும் பாடநெறிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் கூட்டு முனைவர் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்தும் நோக்கங்களுக்காக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் கோவன் பல்கலைக்கழகத் திற்குமிடையில் ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த புரிந் துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பினரும் கைச்சாத்திடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**02. இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் எசெக்ஸ் பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்.**

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் குறித்த பாடநெறிகளைப் பயின்று தகைமைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்களுக்கு எசெக்ஸ் பல்கலைக்கழகப் பிரவேசத்தைப் பெற்றுக் கொள்ளல், பரஸ்பர விருப்பின் பிரகாரம் பங்கேற்பு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல், மாணவர்கள், பீடங்கள் மற்றும் ஊழியர்கள் பரிமாற்றல் நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்குபடுத்தல் போன்ற நோக்கங்களுக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் எசெக்ஸ் பல்கலைக் கழகத்திற்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் இருதரப்பும் கைச்சாத்திடுவதற்காக கல்வி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**03. அரச வர்த்தகங்களை வலுவூட்டுவதற்காக (Re-Energize) சலுகை முறையிலான நிபந்தனைகளின் கீழ் செயற்பாட்டு மூலதனக் கடன்வசதி முறையை நடைமுறைப்படுத்தல்.**

கொவிட்-19 தொற்று நிலைமையால் சந்தைப் பொறிமுறை சரியான வகையில் இடம்பெறாமையால் தற்போது இயங்கி வரும் அரசாங்கத்திற்குச் சொந்தமான 282 முழுமையான அல்லது பகுதியளவிலான வர்த்தக நடவடிக்கைகள் பின்னடைவைச் சந்தித்துள்ளன. அதனால், குறித்த வர்த்தகங்களின் அன்றாட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான செயற்பாட்டு மூலதனத்தை வழங்குவதில் சிரமங்கள் தோன்றியுள்ளன. 2020 ஆம் ஆண்டு இறுதியில் நாடளாவிய ரீதியில் கொவிட்-19 தொற்று நிலைமை பரவியமையால் சிறிய மற்றும் நடுத்தரத் துறைகளுக்குத் தேவையான செயற்பாட்டு மூலதனத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இலங்கை மத்திய வங்கியின் கண்காணிப்பின் கீழ் அரசாங்கம் கொவிட் -19 இலிருந்து மீண்டெழும் சௌபாக்கிய வசதி எனும் பெயரிலான சலுகை அடிப்படையிலான கடன் வசதி முறையை நடைமுறைப் படுத்தியதுடன், குறித்த கடன்வசதி முறையின் கீழ் 53,200 தொழில் முயற்சியாளர்களுக்கு அண்ணளவாக 156 பில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கடன்வசதி முறையின் கீழ் அரச வர்த்தகங்களுக்கான செயற்பாட்டு மூலதனத்தைப் பூர்த்தி செய்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்காக நிதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.




**04. நிலைபேறான விவசாயத்துறைக்கான நிபுணர்களின் சேவையைப் பெற்றுக்கொள்ளல்.**

சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்தில் குறிப்பிட்டவாறு ஆரோக்கியமானதும், பயனுள்ளதுமான பிரஜைகளை உருவாக்கும் நோக்கில் நஞ்சற்ற உணவுகளை மக்களுக்கு வழங்கும் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக உள்ளூர் விவசாயத்துறையில் முழுமையாக சேதன உரப் பாவனையைப் பயன்படுத்தும் சவாலை வெற்றி கொள்வதற்காக விவசாய அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள நிறுவனங்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இச் செயன்முறையை மேலும் முறையாக மேற்கொள்வதற்காக குறித்த அனைத்துத் தரப்பினரின் பங்களிப்புகளைப் பெற்றுக் கொள்வதற்கும், கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், தேவையான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொள்வதற்காகவும் சப்ரகமுவ பல்கலைக் கழகத்தின் சுற்றாடல் விவசாயம் தொடர்பான பேராசிரியர் பிரியந்த இந்திரலால் யாபாவின் தலைமையில் குறித்த துறைசார் நிபுணர்களுடன் கூடிய குழுவொன்றை நியமிப்பதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**05. மாகாண சபைகள் மற்றும் மாவட்ட மட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் மற்றும் விளையாட்டரங்குகளை மேம்படுத்துதல், தொழிற்படுத்துதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை முறைமைப்படுத்தல்.**

நாடளாவிய ரீதியில் காணப்படும் விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் பலவற்றின் பராமரிப்பு சரியான வகையில் இடம்பெறாமையால் அவற்றைப் பயன்படுத்தும் விளையாட்டு வீர - வீராங்கனைகள் எதிர்பார்க்கின்ற பயிற்சிகளைப் பெற்றுக் கொள்வதற்கு இயலாதுள்ளமை தெரியவந்துள்ளது. விளையாட்டுத்துறையில் எதிர்பார்க் கப்படும் நோக்கங்களை அடைவதற்காக, மாவட்ட மட்டத்திலும், மாகாண மட்டத்திலும் திறமைகளை வெளிப்படுத்தும் வீர - வீராங்கனைகளுக்குத் தேவையான வசதிகளுடன் கூடிய விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்களைப் பேணுவது அவசியமாகும். அதற்கமைய தனியார் துறையினரின் பங்களிப்புடன் அவ்வாறான விளையாட்டரங்குகள் மற்றும் விளையாட்டு மைதானங்களை நடத்திச் செல்வதற்கான முறையான பொறிமுறையை அறிமுகப்படுத்துவதற்காக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**06. 1980 ஆண்டு 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் நிறுவனங்களை (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டத்தைத் திருத்தம் செய்தல்.**

தொண்டர் நிறுவனங்களைப் பதிவுசெய்வதற்காக தற்போது காணப்படும் 1980 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் நிறுவனங்களை (பதிவு செய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டத்தில் காணப்படும் சட்ட ஏற்பாடுகள், சமகாலத் தேவைகளுக்குப் போதுமானதாக இல்லாமை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, பாதுகாப்பு அமைச்சராக ஜனாதிபதி சமர்ப்பித்த யோசனையைக் கருத்தில் கொண்டு, 1980 ஆண்டு 31 ஆம் இலக்க தொண்டர் சமூக சேவைகள் நிறுவனங்களை (பதிவுசெய்தல் மற்றும் கண்காணித்தல்) சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டமொன்றை அறிமுகப் படுத்தக் கூடிய வகையில் சட்டமூலத்தை தயாரிக்குமாறு சட்ட வரைஞருக்கு ஆலோசனைகளை வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

**07. இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தை பட்டம் வழங்கும் நிறுவனமாகத் தரமுயர்த்துவதற்காக 2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் சட்டத்தை திருத்தம் செய்தல்.**

2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனம் அடிப்படைப் பாடநெறிகளையும், முகாமைத்துவப் பாடநெறிகளையும் நடத்தி வருகின்றது. தற்போது குறித்த பாடநெறிகளுக்குச் சமமான மட்டத்திலான பாடநெறிகள் ஒரு சில பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்டாலும், குறித்த பாடநெறிகள் கோட்பாட்டு ரீதியாக மாத்திரம் காணப்படுவதால் துறைசார் ரீதியான போதுமானளவு செயன்முறைப் பயிற்சிகள் குறித்த பாடநெறிகள் மூலம் பெற்றுக் கொள்வதற்கு இயலாது. அதனால், சுற்றுலாத்துறையில் போதுமானளவு துறைசார் களச் செயன்முறைப் பயிற்சிகளுடன் கூடிய பட்டப்படிப்பை இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தால் மேற்கொள்வது பொருத்தமானதென அடையாளங் காணப்பட்டுள்ளது. அதற்கமைய, தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகளை ஆராய்வதற்கும், இலங்கை சுற்றுலா மற்றும் ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தை மூன்றாம் நிலை உயர்கல்வி நிறுவனமாக உருவாக்குவதற்கும் இயலுமான வகையில் 2005 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க சுற்றுலாத்துறை நடவடிக்கைகள் சட்டத்தை திருத்தம் செய்வதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**08. வெளிநாடுகளில் இடம்பெறும் விவாகரத்து, மண நீக்கம் அல்லது சட்ட ரீதியான திருமண முறிவுகளை இலங்கையில் ஏற்றுக்கொள்வதற்கான சட்ட ஏற்பாடுகளை வகுத்தல்.**

இலங்கையில் திருமணம் செய்து பின்னர் வெளிநாடுகளில் வசித்து வரும் இலங்கையர்கள் குறித்த நாடுகளில் திருமண வழக்குகளைப் பதிவுசெய்து பெற்றுக்கொள்ளும் தீர்ப்புக்களை இலங்கையில் அங்கீகரிக்காமையால், அவ்வாறானவர்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர். எமது நாட்டில் அவ்வாறான வழக்குத் தீர்ப்புக்களுக்கமைய நடவடிக்கைகளை மேற்கொள்வதாயின், அவர்கள் மீண்டும் இலங்கையில் விவாகரத்து வழக்குத் தொடர வேண்டியுள்ளது. அதனால், வெளிநாடுகள் இடம்பெறும் விவாகரத்துகள், மண நீக்கங்கள் மற்றும் சட்டரீதியான திருமண முறிவுகளை அங்கீகரிக்கக் கூடிய வகையில் சட்ட ஏற்பாடுகளை வகுத்தல் பொருத்தமானதென நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குடும்பச் சட்டங்கள் தொடர்பான ஆலோசனைக்குழு பரிந்துரைத்துள்ளது. அதற்கமைய, வெளிநாடுகளில் இடம்பெறும் விவாகரத்துகள், மணநீக்கம் மற்றும் சட்ட ரீதியான திருமண முறிவுகளை எமது நாட்டில் அங்கீகரிப்பதற்கான சட்ட ஏற்பாடுகளை விதிப்பதற்கு இயலுமான வகையில் சட்ட மூலமொன்றைத் தயாரிப்பதற்காக சட்ட வரைஞருக்கு ஆலோசனை வழங்குவதற்காக நீதி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**09. 2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தை திருத்தம் செய்தல்.**

2003 ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான அதிகாரசபைச் சட்டத்தின் 60 ஆம் உறுப்புரையின் கீழ் 5 ஆம் உப உறுப்புரையை திருத்தம் செய்வதற்காக 2021 ஜூலை மாதம் 19 ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, அத்தியாவசியப் பொருட்களை ஒரு சில வர்த்தகர்கள் கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலையில் விற்பனை செய்வதைக் கட்டுப்படுத்துவதற்காக இத்திருத்தங்கள் மூலம் தேவையான சட்ட ஏற்பாடுகளை வகுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, சட்ட வரைஞரால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட மூலத்திற்கு சட்டமா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளதுடன், குறித்த சட்டமூலத்தை அரச வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காகவும் வர்த்தக அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**10. 2021/2022 பெரும் போகத்திற்கான சேதன உரம் மற்றும் இயற்கைக் கனிமங்கள் மற்றும் கிலேடட் நுண்தாவர ஊட்டக் கூறுகளை இறக்குமதி செய்தல்**

உள்ளூர் சேதன உர உற்பத்தியாளர்களுக்குப் பூர்த்தி செய்ய முடியாத 2021/2022 பெரும் போகத்திற்குத் தேவையான உரத்தை போட்டித்தன்மையான பெறுகை முறையைப் பின்பற்றி இறக்குமதி செய்வதற்காக 31.05.2021 அன்று அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய, வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட கொழும்பு கொமர்ஷல் உரக் கம்பனிக்கும் தேவையான உரத் தொகையை விநியோகிப்பதற்காக சர்வதேசப் போட்டி விலைமனுக் கோரப்பட்டுள்ளது. அமைச்சரவையால் நியமிக்கப்பட்டுள்ள விசேட பெறுகைக் குழுவின் பரிந்துரைக் கமைய குறித்த பெறுகையை வழங்குவதற்காக விவசாய அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**11. ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடுகள் தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக அமைச்சரவை உபகுழுவை நியமித்தல்.**

ஆசிரியர் - அதிபர் சம்பள முரண்பாடுகள் பற்றி மேலெழுந்துள்ள நிலைமைகள் தொடர்பாக அமைச்சரவை விரிவாகக் கலந்துரையாடியுள்ளது. அதற்கமைய, இவ்விடயத்திற்குரிய அனைத்துக் காரணிகளையும் கருத்தில் கொண்டு இப்பிரச்சினை தொடர்பாக மேலதிக விடயங்களை ஆராய்ந்து அமைச்சரவைக்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக அமைச்சர்களை உள்ளடக்கியதான அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

டலஸ் அழஹப்பெரும - மின்சக்தி அமைச்சர், விமல் வீரவங்ச - கைத்தொழில் அமைச்சர், மஹிந்த அமரவீர - சுற்றாடல் அமைச்சர், பிரசன்ன ரணதுங்க - சுற்றுலாத் துறை அமைச்சர் ஆகியோர் இதன் உறுப்பினர்களாவர்.

**12. சந்தையில் நிலவும் பால்மா தட்டுப்பாடு.**

தற்போது உள்ளூர் சந்தையில் நிலவும் பால்மா தட்டுப்பாடு தொடர்பாக அமைச்சரவை கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பாக விடயங்களை ஆராய்ந்து உள்ளூர் சந்தையில் பால்மா விலையை அதிகரிக்காமல், தற்போதுள்ள பால்மா இறக்குமதிக்கான வரி விகிதத்தைத் திருத்தம் செய்வதன் மூலமோ அல்லது வேறு பொருத்தமான நடைமுறைகளைப் பின்பற்றுவதன் மூலமோ போதியளவு பால்மாவை உள்ளூர் சந்தையில் விநியோகிப்பதை உறுதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நிதி அமைச்சருக்கு அதிகாரம் வழங்குவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

***(அரசாங்க தகவல் திணைக்களத்தின் பிரசாரப் பிரிவினால் சிங்கள மொழியிலான அமைச்சரவைத் தீர்மான ஆவணம் தமிழ் மொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.)***

**மக்கள் கடிதம்**

***வாசகர்களே ,***

***உங்கள் ஊரிலுள்ள குறைநிறைகளை, பிரச்சினைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சலினூடாகவோ எழுத்துமூலம் தெரிவியுங்கள்.***

***பிரதி சனிக்கிழமைகளில் எமது பத்திரிகையில் வெளிவரவுள்ள மக்கள் கடிதம் பகுதியில் அவற்றைப் பிரசுரிப்போம்.***

**thamilaneditor@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அல்லது 0761393805 என்ற தொலைபேசி இலக்கத்தின் வட்ஸப்புக்கு அனுப்பலாம்.**

# எதிர்காலத்தில் கடும் எரிபொருள் தட்டுப்பாடு; எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சுட்டிக்காட்டு





எதிர்காலத்தில் கடுமையான எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவது நிச்சயம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

எரிவாயு, பால்மா வரிசையோடு எரிபொருள் வரிசைக்கு அரசாங்கம் தயாராகிறதா என்று கேள்வியெழுப்பி அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது,

பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களான எரிவாயு மற்றும் பால்மாவுக்கு நாடு முழுவதும் கடுமையான தட்டுப்பாடு உள்ளது. எரிவாயு பெற்றுக்கொள்வதற்காக நீண்ட வரிசையில் கடைகளுக்கு அருகில் மக்கள் நிற்பதைக் காணலாம். அதேபோன்று பால்மா கொள்வனவு செய்ய நீண்ட வரிசையில் நிற்பதைக் காணலாம்.

தோல்வி, இயலாமை, மறுபுறம், அமானுஷ்ய தன்மை மற்றும் துன்மார்க்கம் ஆகியவற்றினை அரசாங்கம் ஒருவருட காலப்பகுதியில் நாட்டுக்கு வழங்கியுள்ளது.

கொரோனா தொற்றுப் பேரழிவினால் கடும் நெருக்கடியில் வாழும் மக்கள் இப்போது உணவுகளை சமைக்கத் தேவையான எரிவாயுவைக் கூட இழந்து விட்டனர். பால்மாவை தற்போது ஆடம்பரப் பொருளாக மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது . குழந்தைகளுக்காகக் கடைகளிலிருந்து பால்மா கொஞ்சம்கூட பெற்றுக்கொடுக்க முடியாத சூழ்நிலை உருவாகியுள்ளது.

குறிப்பாக, எரிவாயு நிறுவனங்கள் நஷ்டத்தால் எரிவாயு வியாபாரத்தை நடத்த முடியாது. அவர்களுக்கு மானியம் வழங்கவும், இழப்பை ஈடு செய்யவும் அரசிடம் பணம் இல்லை. அரசாங்கம் வந்தவுடன் தன்னிச்சையாகப் பணக்காரர்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கியமையால் 600 பில்லியன் ரூபாவை இழந்தது.

அனைத்து நுகர்வோர் பொருட்களின் விலைகளும் தாங்க முடியாத அளவுக்கு உயர்ந்துள்ளன. அரசாங்கம் இது குறித்து எந்தக் கவலையும் படவில்லை எனவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் நாடு முழுவதும் தற்போது கடுமையான எரிபொருள் பற்றாக்குறை உள்ளது என்றும், இறக்குமதி பிரச்சினை தீர்க்கப்படாவிட்டால், எதிர்காலத்தில் கண்டிப்பாக இலங்கை கடுமையான எரிபொருள் பற்றாக்குறையை எதிர்கொள்ளும் எனவும் அவர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# சாவகச்சேரியில் 25 பேருக்கு கொரோனா

யாழ்ப்பாணம் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட எழுமாறான அன்ரிஜன் பரிசோதனைகளில் 25 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், வரணியில் சமுர்த்தி வங்கி ஊழியர் ஒருவர், பனை அபிவிருத்திச் சபை ஊழியர்கள் உட்பட்ட 17 பேருக்கு வரணிப் பகுதியில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதேவேளை, சாவகச்சேரிப் பகுதியில் எண்மருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சிற்றுண்டிச்சாலையின் ஊழியர் ஒருவர், கைதடி முதியோர் இல்லத்தில் பணியாற்றும் ஒருவர், பருத்தித்துறை சுப்பர்மடம் பகுதியில் தேர்த்திருவிழாவில் பங்கேற்றிருந்த நிலையில் அங்கு தொற்றுக்குள்ளானவர் ஒருவர் உயிரிழந்த நிலையில், அங்கிருந்துவந்து கைதடிப்பகுதியில் தங்கியிருந்த இளைஞர் உட்பட்டவர்கள் தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க சிற்றுண்டிச்சாலை நகரின் பெருமளவான வர்த்தகர்களும், மக்களும் சென்று வருகின்ற சிற்றுண்டிச்சாலை என்பதால் அங்கு சென்று வருபவர்களை அவதானமாக செயற்படுமாறு சுகாதாரத் தரப்பினர் அறிவுறுத்தியிருக்கின்றனர். சிற்றுண்டிச்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக அங்கிருந்து பிராந்திய செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

# வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் கைது

வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகநபரொருவர் யாழ்ப்பாணம் மற்றும் தெல்லிப்பழைப் பொலிஸாரால் நேற்று கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் - அளவெட்டி, நாகினாவத்தை பகுதியில் வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ் பிரிவுகளில் பல வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய நபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடமிருந்து 2 வாள்கள் மற்றும் சந்தேகநபரால் கொள்ளையிடப்பட்ட



இலக்கத் தகடற்ற இரண்டு மோட்டார் சைக்கிள்கள் ஆகியனவும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஆமைகளை இறைச்சியாக்கியவர் அக்கரைப்பற்றில் கைது




***(கனகராசா சரவணன்)***

நீண்டகாலமாக அம்பாறை, அக்கரைப்பற்று வாவியிலிருந்த ஆமைகளை சட்டவிரோதமாகப் பிடித்து இறைச்சியாக்கி விற்பனை செய்து வந்த நபரொருவர் நேற்றுக் கைதுசெய்யப்படதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

கண்ணகிபுரத்தைச் சேர்ந்த ஒருவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிளில் நேற்று 16 ஆமைகளை எடுத்துச் சென்ற சந்தர்ப்பத்திலேயே அவர் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய ஆமைகளை கண்ணகிபுரத்துக்கு எடுத்துச்சென்று கொண்டிருக்கும்போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அக்கரைப்பற்று, கண்ணகிபுரத்தைச் சேர்ந்தவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், இவ்வாறு சட்டவிரோதமான பிடிக்கப்பட்ட இந்த ஆமைகளை இறைச்சியாக்கி விற்பனை செய்து வந்துள்ளமை பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. அவரை நீதிமன்றில் ஆஜர் படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# அரசியல், தொழிற்சங்க பேதங்களுக்கப்பால் திறமையானவர்களுக்கு கௌரவமளிக்கப்பட வேண்டும்

## அரவிந்தகுமார் எம்.பி. வலியுறுத்து

***(பதுளை நிருபர்)***

அரசியல் மற்றும் தொழிற்சங்க பேதங்களுக்கப்பால், திறமையானவர்கள் அனைவருக்கும் சமூகத்தில் கௌரவத்தையும், அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுக்கும் விடயத்தில் அதிகூடிய அக்கறையை செலுத்தி வருகின்றேன். அவ்வேலைத்திட்டத்தின் ஓர் அங்கமாகவே, சமாதான நீதவான் நியமனங்களை பெற்றுக்கொடுத்து வருவதாக, பதுளை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் குறிப்பிட்டார்.

பதுளை மாவட்டம் மற்றும் நுவரெலியா, கண்டி போன்ற பகுதிகளில் சமூக முக்கியஸ்தர்கள் பலருக்கு, சமாதான நீதவான் நியமனங்களை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சமாதான நீதவான் நியமனங்கள் எனும் போது, அந்நியமனங்கள் சமூகமட்டத்தில் அங்கீகாரத்தையும், கௌரவத்தையும் ஏற்படுத்தும் மதிக்கத்தக்க பதவிகளாகும். இப்பதவிகள் தத்தமது பெயர்களுக்குப் பின்னால் பொறிக்கப்படும் இரு எழுத்துக்களைக் கொண்ட அங்கீகாரமுமாகும்.



அரச மற்றும் தனியார் துறைகளில் உயர்பதவிகளை வகித்தவர்கள், தாம் அப்பதவிகளிலிருந்து ஓய்வுபெற்றதும், அப்பதவிகள் வகித்தவர்களை எவரும் தேடி வரமாட்டார்கள். அத்துடன், அவர்கள் தனித்தும் போய்விடுவர். ஆனால், சமாதான நீதவான்களானவர்கள் அக்கௌரவப்பட்டம் பெற்றதிலிருந்து, வாழ்க்கையின் இறுதிவரை அவர்களுக்குரிய அங்கீகாரம் தொடர்ந்தும் இருந்து வரும். 'போர்க்களம்' என்ற தமிழ் சினிமா படமொன்றில், சேலைகளைப் பற்றிய புகழாரப் பாடலொன்றின் போது வாழ்க்கையில் கடைசி வரை வருவதும் சேலைதான் என்று குறிப்பிடுகின்றது. அதுபோன்று எமது பெயருடன் இறுதிவரை வருவதும் கல்லறையில் பதிக்கப்படுவதும் சமாதான நீதவான் என்ற கௌரவ நாமம்தான்.

ஓய்வுபெறும் முன் தம்மைச் தேடி பலர் வந்து போவர். ஆனால், ஓய்வுபெற்றதும் எவருமே தன்னைத்தேடி வருவதுமில்லை. தன்னைத் திரும்பிப் பார்ப்பதுமில்லையென்ற ஆதங்கம் இருக்கவே செய்கின்றது. ஆனால், சமாதான நீதவான் நியமனங்கள் கிடைத்ததும், அது முதல் பலர் தேடி வருவார்கள். மதிப்பும், கௌரவமும் மென்மேலும் பெருகும். மனதிற்கு நிம்மதியும், மகிழ்ச்சியும் ஏற்படும். அத்தகைய ஆரோக்கிய நிலை மூலம், நீண்ட காலத்திற்கு மகிழ்ச்சியுடன் வாழக்கூடியதாகவுமிருக்கும்.

எந்தவொரு அரசியல்வாதியும், மேற்கொள்ளாத வகையில், ஆகக்கூடிய சமாதான நீதிவான்களை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றேன். எம்மவர்கள் பலர் தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு, சமாதான நீதவான்களைத் தேடி, பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர். இந்நிலையினைப் போக்கவே, எம்மவர்களில் திறமைமிக்க ஆயிரக்கணக்கானோருக்கு, சமாதான நீதவான் பதவிகளைப் பெற்றுக்கொடுக்க என்னால் முடிந்தது.

சமாதான நீதவான்களாக நியமிக்கப்பட்டவர்கள், நீதிபதி முன்னிலையில், சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட பின்னர், தத்தமது சேவைகளை அர்ப்பணிப்புடன் மேற்கொள்ள வேண்டும். அரசியல், தொழிற்சங்க பேதங்களுக்கு அப்பால் சேவைகளைப் பெற வருவோர் விடயத்தில், கூடிய அக்கறை செலுத்தி செயல்படல் வேண்டும். சுயநலத்தைக் கைவிட்டு, சமூக நலத்தை முன்னிலைப்படுத்தி சேவையாற்ற வேண்டும் என்றார்.

# நிராயுதமயமாக்கலுக்காக அணுசக்திக்கு இலங்கை முக்கிய பங்கு வழங்கும்

## இராஜாங்க அமைச்சர் தாரக்க சுட்டிக்காட்டு

நிராயுதமயமாக்கலுக்கான இடைக்கால சந்திப்பின் இணைத் தலைவராக இலங்கை நியமிக்கப்பட்டது. இந்த முயற்சியில், அமைதியான நோக்கங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவதில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கும் என பிராந்திய ஒத்துழைப்புக்கான இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய தெரிவித்துள்ளார்.

புரூனே வெளிநாட்டு அமைச்சர் டட்டோ எரிவான் யூசொஃப்பின் தலைமையில் இணையவழியாக கடந்த 06ஆம் திகதி நடைபெற்ற 28ஆவது ஆசிய பிராந்திய மன்றத்தில் உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, ஆசியான் பிராந்திய மன்றத்துடனான ஒத்துழைப்புக்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வலியுறுத்தினார்.

இளைஞர்களை மேம்படுத்துவதற்கான முயற்சிகள், கடல் வளங்களின் நிலையான பயன்பாடு மற்றும் வெற்றிகரமான கடல் சார்ந்த வர்த்தக முறையை ஊக்குவித்தல், மற்றும் கூட்டுப் பொறிமுறையொன்றின் மூலம் டிஜிட்டல் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் சூழலில் சைபர் குற்றங்களை எதிர்த்துப் போராடுதல் மற்றும் தடுத்தல் ஆகியவற்றுக்காக இராஜாங்க அமைச்சர் ஆசியான் பிராந்திய மன்றத்தைப் பாராட்டவேண்டும். ஆசியான் பிராந்திய மன்றத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கான தனது அர்ப்பணிப்பை இலங்கை மேலும் வெளிப்படுத்தியதுடன், கருத்துகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை ஊக்குவிப்பதற்காக முனைப்பானதொரு முயற்சியுடன் பங்களித்தது.

வியட்நாம் மற்றும் அமெரிக்கா ஆகியவற்றுடன் இணைந்து, 2022ஆம் ஆண்டு பரவலாக்கலைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிராயுதமயமாக்கலுக்கான இடைக்கால



சந்திப்பின் இணைத் தலைவராக இலங்கை நியமிக்கப்பட்டது. இந்த முயற்சியில், அமைதியான நோக்கங்களுக்காக அணுசக்தியைப் பயன்படுத்துவதில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கும். எதிர்கால செழிப்புக்காக இளைஞர்கள் மீது முதலீடு செய்வதற்கான இலங்கையின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தி, புரூனே தாருஸ்ஸலாம், இந்தோனேஷியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, நியூஸிலாந்து மற்றும் கனடா ஆகியவற்றுடன் இணைந்து, இந்த ஆண்டு ஆசிய பிராந்திய மன்றத்தில் இளைஞர்கள், அமைதி மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சி நிரலை ஊக்குவிக்கும் கூட்டு அறிக்கைக்கு இலங்கை இணை அனுசரணை வழங்கியது. இடர் முகாமைத்துவத்துறையில், குறிப்பாக தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் நிலவும் மாறும் தன்மையிலான பேரிடரில், ஸ்திரமான காலநிலையை வளர்ப்பதற்கான விவாதத்திற்கு பங்களிப்புச் செய்யும் பட்டறையொன்றை இலங்கை மேலும் நடத்தும் என்று சுட்டிக்காட்டினார்.

உறுப்பு நாடுகளைச் சேர்ந்த பங்கேற்கும் அமைச்சர்கள், எதிர்கால சவால்கள் உட்பட இப்பிராந்தியம் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர். கொவிட்-19 தொற்று நோய்க்கான கூட்டான மற்றும் பயனுள்ள பிரதிபலிப்பு மற்றும் உலகளாவிய குணமடைதல் மீட்பு முன்னேற்றம் ஆகியவற்றை நோக்கி, பிராந்திய மற்றும் சர்வதேச ஒற்றுமை மற்றும் ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்தை அனைத்து உறுப்பினர்களும் ஒப்புக்கொண்டனர்.

மியான்மாரின் நிலைமை குறித்த கவலை இந்த சந்திப்பின் போது வெளிப்படுத்தப்பட்டதுடன், ஆசிய நாடுகளின் தலைவர்கள் சந்திப்பில் 2021 ஏப்ரல் 24ஆம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஐந்து அம்ச ஒருமித்த கருத்து மற்றும் தெளிவான காலவரிசை ஆகியவற்றின் மூலம் அதனை விரைவாக செயற்படுத்தி, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு வலியுறுத்தப்பட்டது. மேலும், இராஜதந்திரம் மற்றும் உரையாடல் மூலம் கொரியத் தீபகற்பத்தில் முழுமையாக அணுவாயுதமயமாக்கலை ஒழித்தல் மற்றும் நிரந்தரமான அமைதியை நிலைநாட்டுதல் ஆகியவற்றுக்கு அனைத்து உறுப்பினர்களும் அழைப்பு விடுத்தனர்.

தென் சீனக் கடல் குறித்து குறிப்பிடுகையில், சர்வதேச சட்டத்தின் உலகளாவிய அங்கீகாரம் பெற்ற கொள்கைகளுக்கு அமைய விடயங்களை சமாதானமாகத் தீர்ப்பதன் மூலம் சமாதானம், பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பராமரித்து, ஊக்குவிப்பதன் முக்கியத்துவத்தை இச்சந்திப்பு மீண்டும் வலியுறுத்தியது. பயங்கரவாதம், வன்முறைத் தீவிரவாதம், நாடுகடந்த குற்றங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கான தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விநியோகச் சங்கிலிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதன் முக்கியத்துவம் மற்றும் வேகமாக மாறிவரும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பச் சூழலுக்குள் உரையாற்றுவதற்கான உறுதிப்பாட்டை இந்த சந்திப்பு மேலும் உறுதிப்படுத்தியது. கூட்டான அணுகுமுறையொன்றின் மூலம் பிரச்சினைகளை சமாளிப்பதற்காக பிராந்தியத்தில் பாதுகாப்பு, உரையாடல் மற்றும் ஒத்துழைப்புக்கான உயர் மதிப்பு மிகுந்த தளமாக ஆசியான் பிராந்திய மன்றம் பல ஆண்டுகளாக பங்களிப்புச் செய்துள்ளது.

# 24 மணிநேரத்தில் கேகாலையில் 321 பேருக்கு கொரோனா தொற்று

**(அவிசாவளை நிருபர்)**

**கேகாலை மாவட்டத்தில் இதுவரை இனங்காணப்பட்டுள்ள கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 19 ஆயிரத்து 505ஆக அதிகரித்துள்ளது. அதற்கமைய நேற்று முன்தினம் வரையான 24 மணிநேரத்தில் மாத்திரம் கேகாலை மாவட்டத்தில் 321 நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.**

**கேகாலை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இனங்காணப்பட்ட நோயாளர்களில் கேகாலை சுகாதார அதிகாரி பிரிவில் 36 பேரும், ரம்புக்கன சுகாதார அதிகாரி பிரிவில் 45 பேரும், மாவனல்லை சுகாதார அதிகாரி பிரிவில் 05 பேரும், அரநாயக்க சுகாதார அதிகாரி பிரிவில் 10 பேரும், கலிகமுவ சுகாதார அதிகாரி பிரிவில் 21 பேரும், வரக்காபொல சுகாதார அதிகாரி பிரிவில் 35 பேரும், புளத்கோஹுபிட்டிய சுகாதார அதிகாரி பிரிவில் 40 பேரும், ருவன்வெல்ல சுகாதார அதிகாரி பிரிவில் 75 பேரும், எட்டியாந்தோட்டை சுகாதார அதிகாரி பிரிவில் 26 பேரும், தெஹியோவிட்ட சுகாதார அதிகாரி பிரிவில் 18 பேரும், தெரணியகலை சுகாதார அதிகாரி பிரிவில் 20 பேரும் கொரொனா நோயாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.**

# டிக்கோயாவில் 26 பேருக்கு கொரோனா தொற்று

(நோட்டன் பிரிட்ஜ்)

ஹட்டன் - டிக்கோயா நகரசபைக்குட்பட்ட பகுதியில் 26 பேருக்கு கொரோனா தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொற்றாளர்களோடு தொடர்பைப் பேணிய 46 பேருக்கு கடந்த 07ஆம் திகதி மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கை நேற்று கிடைக்கப்பெற்றபோதே 26 பேருக்கு தொற்று இருப்பது உறுதியானது.

ஹட்டன் டன்பார், தும்புறுகிரிய மற்றும் தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையம் ஆகிய பகுதிகளிலேயே இவ்வாறு தொற்றுக்குள்ளாகியுள்ளதாகவும் இவர்களை சுயதனிமை மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கவுள்ளதாகவும் ஹட்டன் - டிக்கோயா நகரசபை பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

# சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வுக்கு மௌன்ஜீன் தோட்ட மக்கள் எதிர்ப்பு

## அரசாங்கம் தீர்வொன்றை பெற்றுத்தரக் கோரிக்கை







(இரா.யோகேசன், செ.தி.பெருமாள்)

வட்டவளை மௌன்ஜீன் ஆற்றுப்பள்ளத்தாக்கில் மேற்கொள்ளப்படும் மாணிக்கக்கல் அகழ்விற்கு எதிர்ப்புத் தெரிவித்து குறித்த தோட்ட மக்கள் நேற்று தொழிற்சாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் திணைக்களத்தினூடாக முன்னெடுக்கப்படவிருக்கும் குறித்த வேலைத்திட்டத்திற்கான ஆரம்பப் பணிகள் நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே குறித்த தோட்ட மக்கள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருந்த தருணத்தில் குறித்த தோட்டத்திற்கு வருகை தந்த வட்டவளை பொலிஸார் அனுமதியின்றி போராட்டத்தை முன்னெடுக்க முடியாதென அறிவித்தபோதிலும், குறித்த தோட்டத் தொழிற்சாலைக்கு முன் கூடிய தோட்ட மக்கள் மாணிக்கக்கல் அகழ்விற்கு எதிராக தமது எதிர்ப்பை வெளியிட்டனர்.

குறித்த பகுதியானது மண்சரிவு ஏற்படும் பகுதி என்பதையும் கூட கருத்திற்கொள்ளாமல் மாணிக்கக்கல் அகழ்வு முன்னெடுக்கப்படுகின்றது. குறித்த மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளும் பகுதியிலேயே பிரதான வீதியும் புகையிரத நிலையமும் அமைந்துள்ளது. எனவே, நாம் இவ்வழியினூடாகவே சென்று எமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்கின்றோம்.

மேலும், இப்பாதையூடாகவே மாணவர்கள் பாடசாலைக்கு செல்கின்றனர். நாட்டில் சிறுவர்களுக்கு எதிராக பல்வேறு துன்புறுத்தல்கள் இடம்பெறுகின்றன. இந்நிலையில், எதிர்வரும் காலங்களில் வேலை ஆரம்பிக்கப்பட்ட பின்னர் எமது பிள்ளைகளை எவ்வாறு அப்பாதையூடாக அனுப்புவது? மேலும் அப்பாதையூடாகவே ஆசிரியர்களும் பாடசாலைக்கு வருகின்றனர். அதுமாத்திரமன்றி, இங்கு காணப்படும் புகையிரத நிலையத்திற்கும் இந்த பிரதான பாதையூடாகவே வழி காணப்படுகின்றது. மேலும் நோயாளர்களையும் அப்பாதையூடாகவே கொண்டுசெல்கின்றோம். இப்பாதை எவ்வித பாதிப்புமின்றி எமக்கு வேண்டும் என ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மக்கள் கேட்டுக்கொண்டனர்.

அரசாங்கம் குறித்த வேலைத்திட்டத்திற்கு எவ்வாறு அனுமதி வழங்கியதென்பது எங்களுக்கு தெரியாது. எனவே, இந்த மாணிக்கக்கல் அகழ்வு விடயத்தில் அரசாங்கம் எடுத்த தீர்மானம் பிழையான விடயமாகும் என்றுதான் சொல்ல வேண்டும் எனவும் குறித்த ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பாக நாம் பல்வேறு நபர்களுக்கு தெரிவித்திருக்கின்றோம். குறிப்பாக, இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் அமைச்சர், ஜனாதிபதி செயலகம், சுற்றாடல் அமைச்சு ஆகிய தரப்பினருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் குறித்த தோட்ட மக்கள் தெரிவித்தனர்.

குறித்த வீதியூடாக இன்னும் சிறிய மண்சரிவுகள் ஏற்பட்டவண்ணமே காணப்படுகின்றன. தற்போது பெய்யும் மழை காரணமாக தொடர்ச்சியாக மண்சரிவு ஏற்பட்ட வண்ணமே காணப்படுகின்றது. மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளும்போது இப்பாதை மேலும் சரியக்கூடிய வாய்ப்புகள் காணப்படுகின்றன.

நாங்கள் ஜனாதிபதியை தெரிவுசெய்திருந்தது எங்களை பாதுகாப்பதற்காகவே. எனவே, தற்போது காணப்படும் குறித்த பிரச்சினைக்கு அரசாங்கம் தீர்வொன்றை பெற்றுத்தர வேண்டும் எனவும் குறித்த வேலைத்திட்டத்தை நிறுத்தித்தரக் கோரியும் குறித்த தோட்ட மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# அறநெறி பாடசாலை அமைப்பதற்கான ஒன்றுகூடல்

''கல்விச்சாலை ஒன்றை திறப்பவன் சிறைச்சாலை ஒன்றை மூடுபவன்'' என்ற கருத்துக்கமைய தலவாக்கலை ஸ்ரேலிங் தோட்ட பாடசாலை மாணவர்களின் கல்வி நிலையை கருத்திற்கொண்டு அறநெறி பாடசாலை ஒன்றை அமைக்கும் நோக்குடன் எதிர்வரும் 15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கலந்துரையாடலொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலானது தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய முன்றலில் பகல் 2 மணியளவில் நடைபெறவுள்ளதுடன் பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஸ்ரேலிங் இளைஞர்கள் அமைப்பு கேட்டுக்கொள்கின்றது. மேலும் நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையைக் கருத்திற்கொண்டு சுகாதார வழிகாட்டலுக்கமைய இந்த ஒன்றுகூடலில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மலையக செய்திகள்

thamilanmalayagam@gmail.com

# கடைசி மூச்சுவரை எழுத்துத்துறைக்கு அர்ப்பணித்து செயற்பட்டவர் மாத்தளை கார்த்திகேசு

## இ.தொ.காவின் மாத்தளை மாவட்ட அமைப்பாளர் முத்து சிவஞானம்



(மாத்தளை நிருபர்)

மாத்தளை மண்ணை முதன்மைப்படுத்தி மலையக கலை, இலக்கிய, எழுத்துத்துறைக்கும் கலைத்துறைக்கும் மெருகூட்டி தனது கடைசி மூச்சுவரையும் எழுத்துத்துறைக்கு தன்னை அர்ப்பணித்து செயற்பட்டவர் அமரர் மாத்தளை கார்த்திகேசு - என மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் இ.தொ.காவின் மாத்தளை மாவட்ட அமைப்பாளருமான முத்து சிவஞானம் தெரிவித்துள்ளார்.

அமரர் மாத்தளை கார்த்திகேசுவின் திடீர் இழப்பு குறித்து தனது இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மலையகத்தின் எழுத்துத்துறையின், இலக்கியத்துறையின் விசாலமான ஆலமரம் சரிந்துவிட்டது. சரிந்துபோன மாத்தளை கார்த்திகேசு எனும் இந்த மூத்த எழுத்தாளனின், இலக்கிய வாதியின் பேரிழப்பு மாத்தளை மண்ணுக்கு மாத்திரமல்லாமல் - நம் இலங்கைத் தீவுக்கு மாத்திரமல்லாமல் கடல் கடந்த நாடுகளில் தமிழ் எழுத்துத்துறையையும் இலக்கியத்துறையையும் கால்பதித்திட காத்திரமாக செயல்பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு எழுத்தாளனுக்கும் சொற்களால் எழுத்துக்களால் மட்டும் ஈடுகட்ட முடியாது.

மாத்தளை கிறிஸ்துதேவ மற்றும் விஜயா கல்லூரியின் பழைய மாணவரான இவர், மாத்தளை மண்ணின் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் உறவுப்பாலத்தின் உச்ச ஸ்தானமாக திகழ்ந்தவர். தனது கடைசி மூச்சுவரை இலங்கையின் தமிழ் இலக்கிய கலைத்துறைக்கு நேர்மையாக நிலை தளராத நிலையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கலாபூஷணம் மாத்தளை கார்த்திகேசு, தனது மறைவோடு மாத்தளை மண்ணுக்கும் கலை, இலக்கிய எழுத்துத்துறைக்கும் பெருமைத்தேடி தந்துகொண்டிருக்கும் முன்னோடி எழுத்தாளர்களான மாத்தளை சோமு, மாத்தளை மலரன்பன், மாத்தளை வடிவேலன், மாத்தளை புவாஜி, மாத்தளை டாக்டர் மகேந்திர ராஜா, மாத்தளை ஜெசிமா, மாத்தளை நஜிமுகின் (முதலியார்), மாத்தளை ரோகிணி, மாத்தளை செல்வா, மாத்தளை சந்திரசேகரன், மாத்தளை பாரரஞ்சனி மற்றும் அமரர்களான மாத்தளை கோமஸ், மாத்தளை எஸ்.எம். பாரூக் (பண்ணமத்து கவராயர்), மாத்தளை துறவி, மாத்தளை மலைமதி சந்திரசேகரன் ஆகிய முன்னோடி எழுத்தாளர்களின் வரிசையில் கோடிட்டு காட்டப்படவேண்டிய ஒரு மூத்த எழுத்தாளர் என்பதை அடியேன் ஆணித்தரமாக கூறுகிறேன்.

மலையக மக்களின் அன்றாட வாழ்வியலை மேடை நாடகமாக - தொலைக்காட்சி நாடகமாக இயக்கி வெளிக்கொண்டுவந்த பெருமை அமரர் மாத்தளை கார்த்திகேசுவையே சாரும். இலங்கை தமிழ் சினிமாவை வளர்ச்சிப் பாதையில் கொண்டு செல்ல வேண்டுமென்ற உன்னத நோக்கில் 'அவள் ஒரு ஜீவநதி' எனும் தமிழ் சினிமாவில் தானே கதாநாயகராக நடித்து முத்திரை பதித்தவர். 'வாழப்பிறந்தவர்கள்' என்ற நாவலை எழுதி வெளியிட்டதோடு ஏனைய எழுத்தாளர்களின் ஆக்கங்களும் வெளிவர முனைப்புடன் செயற்பட்டவர்.

இந்து மக்களின் இறுதிச் சடங்குகளின்போது காணப்படுகின்ற அவலங்களை நீக்கி இந்து சமூகத்தினரின் இறுதிச் சடங்குகள் இப்படித்தான் நடக்கவேண்டுமென்று முறையாக செய்வதற்காக கைநூல் ஒன்றையும் வெளியிட்டு அதனை தானே முன்னின்று செய்து காட்டி இந்து சமூகத்தின் கலாசாரத்துக்கு ஒரு முன்னோடி செயற்பாட்டாளர் என்பதையும் கூறியாக வேண்டும்.

தனக்கு தெரிந்த தனவந்தர்களை நெருங்கி அவர்களை தமது சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காகவும் சமய பணிகளுக்காகவும் ஈடுபாடு செய்திட ஓர் இணைப்புப் பாலமாக செயற்பட்டவர் அமரர் மாத்தளை கார்த்திகேசு.

சரித்திரப் புகழ்பெற்ற மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் வரலாற்றை இரத்தின சுருக்கமாக எழுதி அதன் அச்சுப்பதிவுகளை முற்றுப்பெறச் செய்யும் இறுதித் தறுவாயில், மாத்தளை கார்த்திகேசு இறையடி சேர்ந்துள்ளார். மலையக தமிழர்களுக்கு மாத்திரமன்றி தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் வாழும் தமிழர்களுக்கும் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியின் அடியார்களுக்கும் மாத்தளை கார்த்திகேசுவின் இழப்பு இடைவெளி நிரப்பப்பட முடியாத ஒரு பேரிழப்பாகும் எனவும் முத்து சிவஞானம் தனது இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாத்தளை நகரில் பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு

## துர்ப்பாக்கிய நிலைக்கு நாடு சென்றுவிட்டதாக பொதுமக்கள் விசனம்

(மாத்தளை நிருபர்)

மாத்தளை நகரை அண்மித்துள்ள சகல பகுதிகளிலும் பால்மாவுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் பால்மா தட்டுப்பாடு காரணமாக பொதுமக்கள் மிகவும் இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் நுகர்வோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

பால்மாவுக்கு எந்தவித தட்டுப்பாடுகளும் கிடையாது எனவும் போதுமான பால்மா கையிருப்பில் உள்ளதாகவும் மேலும் சதொச வர்த்தக நிலையங்களில் பால்மாவை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அமைச்சர் பந்துல குணவர்தன அடிக்கடி ஊடகங்களில் கருத்து தெரிவித்தபோதிலும் நாட்டில் பால்மாவிற்கு தட்டுப்பாடு இல்லை என எவ்வளவுதான் கூறினாலும் அமைச்சர் கூறுவதைபோன்று பால்மாவை எங்கும் பெற்றுக்கொள்ள முடியவில்லையென நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

பால்மா தட்டுப்பாடு காரணமாக மாத்தளை மாவட்டத்தில் ஹோட்டல் உரிமையாளர்கள் பலரும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாகவும் நோயாளர்களுக்கோ அன்றி சிறு குழந்தைகளுக்கோ ஒரு கப் பால் கூட வழங்க முடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு நாடு தலைகீழாக மாறிவிட்டதாகவும் பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# ஆசிரிய குடும்பத்துக்கு கொரோனா

(பதுளை நிருபர்)

பதுளை பாடசாலையொன்றில் ஆசிரியர்களாக பணிபுரியும் தமிழ் ஆசிரிய தம்பதிகள் இருவருக்கும் அவர்களது ஆறு வயதான மகனுக்கும் நேற்று கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பதுளை பொது வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

பதுளை பகுதியின் பாடசாலையொன்றில் இவர்கள் ஆசிரியர்களாக இருந்துவருகின்றனர். இந்நிலையில் ஆசிரியைக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக அவர் பதுளை அரசினர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்ரிஜன் பரிசோதனையிலேயே தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து அந்த ஆசிரியையின் கணவரான ஆசிரியருக்கும் அவர்களது ஆறு வயது மகனுக்கும் ரெபிட் அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதனடிப்படையில் அவர்கள் இருவரும் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதையடுத்து, ஆசிரியையும் அவரது மகனும் பதுளை - ஹிந்தகொடை கொவிட் தொற்று சிகிச்சை நிலையத்திற்கும் ஆசிரியர் பிந்துனுவெள கொவிட் தொற்று சிகிச்சை நிலையத்திற்கும் அனுப்பப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் பதுளை பகுதி பாடசாலையொன்றில் ஆசிரியர்களாக இருந்த போதிலும் ஹாலிஎலவை வசிப்பிடமாகக் கொண்டவர்களென்பது குறிப்பிடத்தக்கது.-




# கினிகத்தேனையில் பாதுகாப்பற்ற மின்கம்பங்கள்



(கினிகத்தேனை)

கினிகத்தேனை பிளாக்வாட்டர் மேல்பிரிவு தொடர் குடியிருப்புகளில் அமைந்துள்ள சுமார் 24 வீடுகளுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள மின்கம்பம் சரிந்து விழும் அபாயம் காணப்படுவதால் அதனை சீரமைத்துத் தருமாறு தோட்ட மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

குறித்த மின்கம்பத்தை மாற்றித் தருமாறு பலமுறை நோட்டன் மின்சார சபை மற்றும் கினிகத்தேனை மின்சார சபைக்கு மக்கள் அறிவித்திருந்தபோதிலும் இதுதொடர்பில் எந்தவொரு பதிலும் இதுவரை கிடைக்கவில்லை எனவும் கடும் காற்று வீசும் இந்நிலையில், காற்றின் வேகம் அதிகரித்தால் எந்நேரத்திலும் மின்கம்பம் குடைசாய்ந்து விழும் அபாயம் காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் மக்கள் இரவு நேரங்களில் பயத்துடனும் அச்சத்துடனுமே வாழ்ந்து வருகின்றனர்.

எனவே, பாதுகாப்பற்ற நிலையில் அமைந்துள்ள மின்கம்பங்களை சீரமைக்க எவரும் முன்வராத நிலையில் பத்திரிகை ஊடாக பிளக்வாட்டர் மேல்பிரிவு மக்கள் கோரிக்கை முன்வைக்கின்றனர்.

# நுவரெலியாவில் 187 கொரோனா மரணங்கள்; 5,445 குடும்பங்கள் தனிமைப்படுத்தலில்

(தலவாக்கலை நிருபர்)

நுவரெலியா மாவட்டத்தில் இதுவரையில் 9 ஆயிரத்து 96 பேர் தொற்றாளர்களாக இனங் காணப்பட்டுள்ளதுடன், 187 பேர் உயிரிழந்துள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் 57 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டு 5 ஆயிரத்து 445 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

அம்பகமுவ பகுதியில் 2 ஆயிரத்து 58 குடும்பங்களும் கொத்மலையில் ஆயிரத்து 242 குடும்பங்களும் ஹங்குரன்கெத்தயில் 244 குடும்பங்களும் வலப்பனையில் ஆயிரத்து 90 குடும்பங்களும் நுவரெலியாவில் 811 குடும்பங்களுமாக மொத்தமாக 5 ஆயிரத்து 445 குடும்பங்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

கொரோனா தொற்று உறுதியானவர்களில் அதிகமானவர்கள் அம்பகமுவ பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தவகையில் அம்பகமுவ பகுதியில் ஆயிரத்து 650 பேரும் பொகவந்தலாவ பகுதியில் ஆயிரத்து 68 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 425 பேரும் கொட்டகலை பகுதியில் 663 பேரும் கொத்மலையில் 721 பேரும் லிந்துலையில் 749 பேரும் மஸ்கெலியாவில் 631 பேரும் மதுரட்ட பகுதியில் 173 பேரும் நுவரெலியா மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்களில் 518 பேரும் புதிய திஸ்பனை பகுதியில் 819 பேரும் நுவரெலியாவில் 722 பேரும் ராகலையில் 579 பேரும் வலப்பனை பகுதியில் 378 பேருமாக மொத்தமாக 9 ஆயிரத்து 96 பேர் பி.சி.ஆர். பரிசோதனையின் மூலமாக தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்ட பிரதேசமாக அம்பகமுவ பிரதேசம் காணப்படுகின்றது. இங்கு ஆயிரத்து 650 பேர் இனங்காணப்பட்டுள்ளதுடன் இதுவரையில் நுவரெலியா மாவட்டத்தில் 187 பேர் உயிரிழந்துள்ளதுடன், நுவரெலியா பகுதியிலேயே அதிகமாக 80 பேர் உயிரிழந்துள்ளனர்.

இது தவிர, அம்பகமுவ பகுதியில் 56 பேரும் வலப்பனை பகுதியில் 25 பேரும் கொத்மலையில் 22 பேரும் ஹங்குரன்கெத்த பகுதியில் 4 பேருமாக 187 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம் Business world
www.thamilan.lk

# HCL, சர்வதேச தொழில்நுட்ப நிறுவனம் தனது இலங்கை அலுவலகத்துக்காக Cinnamon Life இன் 'The Offices'இல் 80 வீதமான பகுதியை பெற்றுள்ளது



*JKH நிறைவேற்று உப தலைவர்/துறை தலைமை அதிகாரி - சொத்துகள் குழுமம் நயன மாவில்மட உடன் HCL டெக்னொலஜிஸ் லங்கா வதிவிட பணிப்பாளர் தோதாந்திரி வைகுந்தனர் ஆகியோர் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுகின்றனர்.*

கொழும்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நவீன வசதிகள் படைத்த அலுவலகத் தொகுதியான Cinnamon Lifeஇன் The Officesஇல், சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமான HCL Technologies இலங்கையில் தனது பிரதான அலுவலகத்தை நிறுவுவதற்காக மொத்த அலுவலகத் தொகுதியின் 80 வீதமான பகுதியை தெரிவுசெய்துள்ளது. கொழும்பில் அமைந்துள்ள முதல் தர அலுவலக கோபுரத் தொகுதியாக Cinnamon Life அமைந்துள்ளதுடன், தனது வளாகத்தில் பெரும்பாலான சர்வதேச பல்தேசிய நிறுவனங்களுக்கு தமது அலுவலகங்களை நிறுவுவதற்கு கவர்ந்திழுப்பதாகவும் அமைந்துள்ளது.

30 அடுக்குகளைக்கொண்ட முதல் தர அலுவலகத் தொகுதியில் தமது அலுவலகத்தை நிறுவுவதற்கான உடன்படிக்கையில் John Keells Holding (JKH) உடன் HCL டெக்னொலஜிஸ் கைச்சாத்திட்டிருந்தது. ஒட்டுமொத்தமாக ஒன்றிணைக்கப்பட்ட கலப்பு அபிவிருத்தித் திட்டமான Cinnamon Lifeஇற்கு, தனது அலுவலகத் தொகுதியை நிறுவுவதற்கான HCL இன் அர்ப்பணிப்பு என்பதனூடாக, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பணியாளர்களை கவர்ந்திழுப்பதாக அமைந்திருக்கும். தெற்காசிய பிராந்தியத்தில் வணிக மையமாக கொழும்பை திகழச் செய்வதன் நீண்டகால வியாபார மீண்டெழல் பிரதிபலிப்பாக இது அமைந்துள்ளது.

Cinnamon Life இன் பிரதான அமைவிடம், பரந்தளவு வசதிகள் மற்றும் உயர் தரத்துக்கான அதிகளவு முக்கியத்துவம் போன்றன HCLஇற்கு வெற்றியீட்டும் ஒன்றிணைவாக அமைந்துள்ளன.

HCL டெக்னொலஜிஸ் கூட்டாண்மை உப தலைவர் ஸ்ரீமதி சிவசங்கர் கருத்துத் தெரிவிக்கையில், "Cinnamon Lifeஇன் நவீன வசதிகள் படைத்த அலுவலகத் தொகுதி என்பது, இலங்கையில் HCLஇன் வளர்ச்சித் திட்டத்துக்கு சிறந்த ஒன்றிணைவாக அமைந்துள்ளது. கொழும்பின் மையப்பகுதியில் அமைந்திருப்பதுடன், HCLஐ அடுத்த தலைமுறை சர்வதேச தொழில்நுட்ப நிறுவனமாக பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது" - என்றார்.

2020 செப்டெம்பர் மாதம் இலங்கையின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் இணைந்து, இலங்கையில் HCL டெக்னொலஜிஸ் சர்வதேச அபிவிருத்தி நிலையத்தை உத்தியோகபூர்வமாக திறந்து வைத்தனர். அப்போது முதல், பரந்தளவு தொழிற்றுறைகளைச் சேர்ந்த Fortune 500 வாடிக்கையாளர்களுக்கான சேவை வழங்கலுக்கான நிலையங்களில் ஒன்றாக உலக தேசப்படத்தில் இலங்கையை நிலைநிறுத்துவதற்கான பணிகளை தொடர்ந்தும் முன்னெடுக்கின்றது.

JKHஇன் அதிகளவு எதிர்பார்ப்புகள் நிறைந்த கலப்பு அபிவிருத்தித் திட்டமான Cinnamon Life, நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்ததன் பின்னர், கொழும்பில் பிரம்மாண்டமாக அமைந்திருக்கும். 800 அறைகளைக்கொண்ட ஐந்து நட்சத்திர சினமன் ஹோட்டல், விற்பனை மற்றும் களிப்பூட்டும் தொகுதி, ஒப்பற்ற மாநாட்டுப் பகுதிகள், சகல வசதிகளையும்கொண்ட அலுவலகத் தொகுதி மற்றும் இரு வேறான சொகுசு வதிவிட டவர்கள் (Cinnamon Lifeஇல் The Residence மற்றும் The Suites போன்றவற்றைக் கொண்டிருக்கும்.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் தவிசாளர் கிரிஷான் பாலேந்திரா கருத்துத் தெரிவிக்கையில், "உலகின் முன்னணி தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான HCLஐ நாம் Cinnamon Lifeஇல் கொண்டிருக்க எதிர்பார்க்கின்றோம். எதிர்வரும் ஆண்டுகளில் அந்நிறுவனத்துக்கு மேலும் வளர்ச்சிகளைப் பதிவு செய்வதற்கான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடியதாக இருக்கும். Cinnamon Lifeஇலுள்ள தனது அலுவலகங்களை வழிநடத்துவதில் HCL காண்பிக்கும் அர்ப்பணிப்பு என்பதனூடாக இந்தத் திட்டத்தை நாம் ஆரம்பிக்கும்போது கொண்டிருந்த நீண்டகால நோக்குக்கு சிறந்த ஆதாரமாகும். அடுத்த ஆண்டில் ஹோட்டல் மற்றும் ஷொப்பிங் மோல் ஆகியன திறக்கப்படவுள்ள நிலையில், தெற்காசிய பிராந்தியத்தில் கொழும்பை ஓய்வு, களிப்பூட்டல் மற்றும் விற்பனை நிலையங்களுக்கான மையமாக திகழச் செய்வதற்கு ஏதுவாக அமைந்திருக்கும்" - என்றார்.

'city within a city' என்பதற்கமைய,



Cinnamon Lifeஇனால் கொழும்பில் வாழ்வாதாரத்தின் தலைமையகமாக அமைந்திருப்பதுடன், விறுவிறுப்பான வாழ்க்கைமுறை அனுபவங்களை வழங்குவதற்கான உறுதிமொழியை வழங்குகின்றது.

புகழ்பெற்ற இலங்கை - பிரித்தானிய வடிவமைப்பாளரும், கலைஞர் மற்றும் எழுத்தாளருமான சிசில் பல்மொன்ட் Cinnamon Life ஐ வடிவமைத்துள்ளதுடன், 4.5 மில்லியன் சதுர அடிப்பரப்பில் பரந்துள்ளதுடன், கொழும்பின் மாத்திரமன்றி, முழு உபகண்டத்தினதும் ஒப்பற்ற வாழ்க்கை முறை மற்றும் களிப்பூட்டும் மையமாகத் திகழும்.

மேலதிக தகவல்களுக்கு www.cinnamonlife.com எனும் இணையத்தளத்தைப் பார்க்கவும்.

## தவறுக்கு வருந்துகிறோம்

எமது வணிகப் பகுதியில் நேற்றைய தினம் வெளியாகிய செலிங்கோ லைவ் காப்புறுதியை கொண்டுள்ள குடும்பங்கள் சீனாவில் பெமிலி சவாரிக்குச் சென்றன என்ற தலைப்பிலான கட்டுரை, கொரோனா பரவலுக்கு முன்னர் 2019ஆம் ஆண்டு இடம்பெற்ற நிகழ்வின் தொகுப்பாகும்.

அது கொரோனா காலத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட புதிய நிகழ்வல்ல என்பதை செலிங்கோ லைவ் நிறுவனம் எம்மிடம் சுட்டிக் காட்டியுள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

# 'குடும்ப சவாரி' மெகா ஊக்குவிப்புத் திட்டத்தின்கீழ் 5ஆவது தங்கச் சீட்டிழுப்பை நடத்தியது செலிங்கோ லைப்



ஆயுள் காப்புறுதியின் முன்னிலை நிறுவனமான செலிங்கோ லைப் நடத்தும் 14ஆவது 'குடும்ப சவாரி' மெகா ஊக்குவிப்புத் திட்டம் அதனது இறுதிச் சீட்டிழுப்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கையில், அந்நிறுவனத்தின் காப்புறுதிக்கு ஒப்பந்தம் கொண்டிருக்கும் வாடிக்கையாளர்கள் அதிர்ஷ்டங்களைத் தொடர்ந்து பெற்று கொண்டாடி வருகிறார்கள். ஓராண்டு நீண்டதாக இரு மாதங்களுக்கொருமுறை செலிங்கோ லைப் நடத்தும் சீட்டிழுப்பின் இறுதிக்கு முந்தைய அதிர்ஷ்டச் சீட்டிழுப்பில், 5 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கங்களை வெல்லும் 100இற்கும் மேற்பட்ட வெற்றியாளர்கள் அடையாளங்காணப்பட்டனர்.

இவ்வெற்றியாளர்களில் ஒருவருக்கு ஒரு மில்லியன் ரூபாபெறுமதியான தங்கமும், இரு வெற்றியாளர்களுக்குத் தலா 2,50,000 ரூபா, ஐந்து பேருக்குத் தலா 1,00,000 ரூபா, 25 பேருக்குத் தலா 50,000 ரூபா, மேலும் 70 பேருக்கு 25,000 ரூபா பெறுமதியான தங்கங்கள் வழங்கப்பட்டன. இந்த ஐந்தாவது சீட்டிழுப்பில் பெரிய பரிசுத்தொகையை வென்ற காப்புறுதி வாடிக்கையாளர் தம்புள்ளையைச் சேர்ந்தவர் என்பதோடு, ஏனைய அதிக பெறுமதிவாய்ந்த பரிசுகளை வென்றோர் வெலிவேரிய, கண்டி, நெல்லியடி, நொச்சியாகம, காலி ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

இதற்கு முன்னர் நடந்த நான்கு சீட்டிழுப்புகளில் மொத்தமாக 412 வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு, 20 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தை அவர்கள் வென்றிருந்தனர். இந்த ஊக்குவிப்புத் திட்டமானது இவ்வாண்டு செப்டெம்பர் மாதத்தில் இடம்பெறவுள்ள ஆறாவதும் இறுதியுமான சீட்டிழுப்போடு முடிவை எட்டும்போது, மொத்தமாக 618 செலிங்கோ லைப் காப்புறுதி வாடிக்கையாளர்கள் 30 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தை, செலிங்கோ லைப் மீதான தமது விசுவாசத்தின் காரணமாக வென்றிருப்பர்.

செலிங்கோ லைப் நிறுவனத்தின் தலைவர் ஆர்.ரெங்கநாதன், முகாமைத்துவப் பணிப்பாளர் துஷார ரணசிங்க (இடமிருந்து 3ஆவது, 4ஆவது), பணிப்பாளர்களான பாலித ஜயவர்தன, டெவான் குரே, ரங்க அபேநாயக்க ஆகியோர் சீட்டிழுப்பின் முடிவுகளை உறுதிப்படுத்துவதைப் படத்தில் காணலாம்.


## தன நிதானய

உத்தியோகபூர்வ முடிவுகள்

ஆங்கில எழுத்து: L
வெற்றி இலக்கங்கள்: 35 45 73 74
திகதி: 10.08.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 0562

| | கட்டமைப்பு | பரிசுகள் | வெற்றியாளர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 3,000.00 | 76 |
| 4 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 1,000.00 | 178 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூபா 100.00 | 3918 |
| 6 ஆம் பரிசு | ஆங்கில எழுத்துடன் 1 இலக்கம் சரியாயின் | ரூபா 60.00 | 2639 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூபா 20.00 | 66612 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூபா 20.00 | 12303 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூபா. 3,834.440.00
பரிசுகளை வென்ற வெற்றியாளர்களின் எண்ணிக்கை. 85,730

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசுத் தொகை
ரூ. 80,611,940.40

- ரூபா. 5 இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசின் வரி சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது.
- பரிசுத்தொகையை பெற்றுக்கொள்ளும் போது தேசிய அடையாள அட்டை கட்டாயமானது.
- சீட்டிழுப்பு தினத்திலிருந்து 6 மாதகாலத்திற்கு மாத்திரமே வெற்றி லொத்தர் செல்லுபடியாகும்.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Web: www.nlb.lk

## கொவிசெத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம்: 2827 சீட்டிழுப்பு திகதி: 10.08.2021
ஆங்கில எழுத்து: D
வெற்றி இலக்கங்கள்: 08 57 59 65

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 1 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 4 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 2,000.00 | 139 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 1,000.00 | 311 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 7651 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 5063 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 127378 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 23069 |

இந்த சீட்டிழுப்பில் உருவாகிய வெற்றியாளர்களின் எண்ணிக்கை 163,616

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 5,965,560.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 64,396,679.60

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

## சுபிரி வாசனா சம்பத

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி: 10.08.2021
சீட்டிழுப்பு இலக்கம்: 1610
சுப்பர் இலக்கம்: 14
வெற்றி இலக்கங்கள்: 09 14 29 40

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 பரிசு | 4 இலக்கங்களும் பொருந்துமாயின் | ரூ. 500,000.00 | 1 |
| 2 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 20,000.00 | 5 |
| 3 பரிசு | 3 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 1,000.00 | 106 |
| 4 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 200.00 | 284 |
| 5 பரிசு | 2 இலக்கங்கள் பொருந்துமாயின் | ரூ. 100.00 | 4080 |
| 6 பரிசு | சுப்பர் இலக்கத்துடன் 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 60.00 | 3622 |
| 7 பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 50694 |
| 8 பரிசு | சுப்பர் இலக்கம் மாத்திரம் பொருந்துமாயின் | ரூ. 20.00 | 12191 |

இம்முறை வெற்றியீட்டிய பரிசுகளின் மொத்தத் தொகை
ரூ. 2,645,820.00

வெற்றி பெறும் சீட்டுகள் சீட்டிழுக்கப்பட்ட திகதியிலிருந்து 6 மாதங்களுக்கு மாத்திரமே செல்லுபடியாகும். ஐந்து இலட்சமோ அதற்கு கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரி சட்டத்திட்டங்களுக்கு உட்பட்டது. பரிசை பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 3,581,581.20

தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD
இல 32 தேசமான்ய N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி: 0112-324324, 0114 607000 Fax: 0114 663416 Web: www.nlb.lk

## Mega POWER மெகா பவர்

சீட்டிழுப்பு இலக்கம்: 0880
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 10.08.2021
ஆங்கில எழுத்து: W
சுப்பர் இலக்கம்: 24
வெற்றி இலக்கங்கள்: 06 17 18 44

| | பரிசுக் கட்டமைப்பு | பரிசுத் தொகை ரூ. | வெற்றி பெற்றோர் |
|---|---|---|---|
| 1 ஆம் பரிசு | 4 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000,000.00 | 0 |
| 2 ஆம் பரிசு | 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 100,000.00 | 3 |
| 3 ஆம் பரிசு | இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 1,000.00 | 65 |
| 4 ஆம் பரிசு | 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 500.00 | 160 |
| 5 ஆம் பரிசு | 2 இலக்கங்கள் மாத்திரம் பொருந்துமாயின் | 100.00 | 4243 |
| 6 ஆம் பரிசு | 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 40.00 | 2773 |
| 7 ஆம் பரிசு | 1 இலக்கம் பொருந்துமாயின் | 20.00 | 70708 |
| 8 ஆம் பரிசு | ஆங்கில எழுத்து பொருந்துமாயின் | 20.00 | 12539 |

இலங்கையின் அதிகூடிய சுப்பர் பரிசு
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 142,479,196.40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத் தொகை
ரூ. 2,645,160.00

N.W.J. முதலிகே மாவத்தை, கொழும்பு 01, தொலைபேசி 0112-470662, 0114 607000 இணையம்: www.nlb.lk
தேசிய லொத்தர் சபை NATIONAL LOTTERIES BOARD

## மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 4532
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி: 10.08.2021
வெற்றி எழுத்து: W
வெற்றி இலக்கங்கள்: 9 5 8 4 5 9

பரிசு அமைப்பு - வலமிருந்து இடமாக

| | இலக்கங்கள் | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1ஆம் பரிசு | 9 5 8 4 5 9 | ரூபா 2,000,000/- | 3 |
| 2ஆம் பரிசு | 5 8 4 5 9 | ரூபா 100,000/- | 22 |
| 3ஆம் பரிசு | 8 4 5 9 | ரூபா 10,000/- | 201 |
| 4ஆம் பரிசு | 4 5 9 | ரூபா 1,000/- | 1972 |
| 5ஆம் பரிசு | 5 9 | ரூபா 100/- | 19786 |
| 6ஆம் பரிசு | 9 | ரூபா 20/- | 195407 |

பரிசு அமைப்பு - இடமிருந்து வலமாக

| | இலக்கங்கள் | பரிசுத் தொகை | வெற்றியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 7ஆம் பரிசு | 9 5 8 4 5 | ரூபா 10,000/- | 22 |
| 8ஆம் பரிசு | 9 5 8 4 | ரூபா 1,000/- | 202 |
| 9ஆம் பரிசு | 9 5 8 | ரூபா 100/- | 1969 |
| 10ஆம் பரிசு | 9 5 | ரூபா 50/- | 19515 |
| 11ஆம் பரிசு | W | ரூபா 20/- | 78282 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை – ரூ. 21,229,030.00

அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 21,516,337.20

NLB வாழ்வின் கனவிற்கு அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம்
தேசிய லொத்தர் சபை
32, தேசமான்ய N. W. J. முதலிகே மாவத்தை, கொழும்பு - 01. தொலைபேசி: 011-4607000, 011-2324324. Fax: 011-4669416.
www.nlb.lk

# கல்முனை பிராந்தியத்தில் கொரோனா தீவிரம்; 24 மணி நேரத்தில் 106 பேருக்கு தொற்று

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணன்



(அட்டாளைச்சேனை நிருபர்)

கல்முனைப் பிராந்தியத்தில் தற்போது அதிகமான கொவிட் நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றனர். இந்நோய்த் தொற்றுப் பரவலானது ஒரு தினத்தில் மாத்திரம் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் மத்தியில் பரவியிருப்பதுடன், இரு மரணங்களும் இப்பிராந்தியத்தில் நிகழ்ந்துள்ளமை அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாமல் மக்கள் செயற்படுவதனாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது - என கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் தெரிவித்தார்.

எமது சுகாதாரத் தரப்பினர் தமது சேவை நிமித்தம் பிரதான வீதி வழியாக பயணிக்கும் போது, சுமார் ஒரு கிலோமீற்றர் குறுகிய தொலைவில் முகக்கவசம் அணியாமல் நூற்றுக்கு மேற்பட்டவர்களை அவதானித்தனர்.

இந்நிலைமை இவ்வாறிருந்தால் எமது பிராந்தியத்தில் கொவிட் தொற்றின் பரம்பல் எல்லை மீறிச் செல்வதை யாராலும் தடுக்கமுடியாது. சுகாதார நடைமுறைகளை மக்கள் உண்மைக்குண்மையாக மனதால் ஏற்று செயற்படாமலிருந்தால் கொவிட் மரணங்களின் எண்ணிக்கையை நாம் கட்டுப்படுத்த முடியாமலேயே போய்விடும்.

இப்பிராந்தியத்தில் இனிவரும் காலங்களில் இறுக்கமான சுகாதார நடைமுறைகளை அமுல்படுத்த திட்டமிட்டுள்ளோம். மக்கள் ஒன்றுகூடுவதை முற்றுமுழுதாக தவிர்க்க வேண்டும். மைதானங்களில் மாலை வேளைகளில் இளைஞர்கள் ஒன்றுகூடி விளையாடுவதை தவிர்க்கவேண்டும். மதஸ்தலங்கள், பொதுச் சந்தைகள் போன்றவற்றில் கண்டிப்பான சமூக இடைவெளி பின்பற்றப்பட வேண்டியுள்ளது. இதனைக் கண்காணிப்பதற்கான விசேட ஏற்பாடுகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம்.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை எல்லைக்குட்பட்ட 13 பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இதுவரை 96 மரணங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த 24 மணிநேரத்தினுள் 106 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இப்பிராந்தியத்தில் அக்கரைப்பற்று மற்றும் காரைதீவு ஆகிய பிரதேசங்களில் கடந்த 24 மணிநேரத்தினுள் இரு மரணங்களும் பதிவாகியுள்ளதுடன், இப்பிராந்தியத்தில் 4596 பேர் இதுவரை கொவிட் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளனர்.

நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 24 பேரும், கல்முனை வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேரும், ஆலையடிவேம்பு பிரதேசத்தில் 17 பேரும் கடந்த 24 மணிநேரத்தில் கொரோனா தொற்றுடன் பதிவாகியுள்ளனர்.

நாவிதன்வெளி பிரதேசத்தில் 12 பேரும், அட்டாளைச்சேனை மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேசங்களில் தலா அறுவரும், திருக்கோவில் பிரதேசத்தில் ஐவரும், காரைதீவு, சம்மாந்துறை மற்றும் சாய்ந்தமருது ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் தலா நால்வரும், அக்கரைப்பற்று பிரதேசத்தில் மூவரும், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருவரும் இறக்காமம் பிரதேசத்தில் ஒருவரும் கடந்த 24 மணி நேரத்தினுள் பதிவாகியுள்ளதாக கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஜீ.சுகுணன் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# தங்கச்சங்கிலியை கொடுக்க மறுத்த தாயாரின் கழுத்தை வெட்டிக் கொலைசெய்த மகன் கைது

## ஏறாவூரில் கொடூரம்



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஏறாவூர் பொலிஸ் பிரிவிலுள்ள குமாரவேலியர் கிராமத்தில் தனது தாயாரின் கழுத்தை கத்தியால் வெட்டிக் கொலைசெய்த 45 வயதுடைய மகனை கைதுசெய்துள்ள சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளதாக ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

குமாரவேலிய கிராமத்தைச் சேர்ந்த 65 வயதுடைய பொன்னுத்துரை தவமணி என்பவரே இவ்வாறு வெட்டிக் கொலைசெய்யப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த தாயார் அவரது மகளுடன் வாழ்ந்துவரும் நிலையில், நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் குறித்த தாயாரின் வீட்டுக்குச் சென்ற மகன், தாயாரின் கழுத்திலிருந்த தங்கச்சங்கிலியை கேட்டு சண்டை பிடித்த நிலையில், தாயார் சங்கிலியை கொடுக்க மறுத்துள்ளார்.

இதனையடுத்து மகனுக்கும் தாயாருக்கும் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து அங்கிருந்த கத்தியால் தாயாரின் கழுத்தை வெட்டிக் கொலைசெய்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து தாயாரை வெட்டிக் கொலைசெய்த 45 வயதுடைய மகனை கைதுசெய்ததுடன், சம்பவ இடத்திற்கு நீதவான் சென்று சடலத்தை பார்வையிட்டதன் பின்னர் வைத்தியசாலையில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஏறாவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# மட்டு. மாநகர சபையின் பொதுமக்களுக்கான சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## மாநகர ஆணையாளர் தயாபரன்

(அட்டாளைச்சேனை)

மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவுக்குட்பட்ட பொதுச் சுகாதார பிரிவுகளில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் அதிகரித்துள்ள நிலையில் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து பொதுமக்களை பாதுகாக்கும் வகையில் தொடர்ச்சியாக பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் மட்டக்களப்பு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பொதுச் சுகாதார பரிசோதகர்களினால் மட்டக்களப்பு மாநகர சபை ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் பல ஊழியர்கள் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்கள் என இனங்காணப்பட்டதை தொடர்ந்து பொதுமக்களின் பாதுகாப்பு நலன்கருதி



மாநகர சபையின் பொதுமக்களுக்கான சேவைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக மாநகர ஆணையாளர் எம்.தயாபரன் தெரிவித்துள்ளார்.

மேலும் பொதுமக்களின் அத்தியாவசிய தேவைகள் நிமித்தம் 065 22 22 275 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும் என மாநகர ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# 30 வருட கல்விச்சேவையிலிருந்து ஓய்வு



(பாண்டிருப்பு நிருபர்)

பட்டிருப்பு கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றும் சற்குணம் கணேஸ்வரன் தனது 30 வருட கல்விச் சேவையை நிறைவுசெய்து 11-08-2021இலிருந்து தனது 60ஆவது வயதில் ஓய்வுபெற்றுச் செல்கின்றார்.

கோட்டைக்கல்லாறு கிராமத்தைச் சேர்ந்த அதிபர் ச.கணேஸ்வரன் தனது ஆரம்பக் கல்வியை கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் கற்றதுடன், உயர் கல்வியை கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் கற்றுள்ளார். 1992ஆம் ஆண்டு ஆசிரியர் சேவையில் இணைந்துகொண்டார் முதல் நியமனத்தை தான் ஆரம்பக்கல்வியைக் கற்ற கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் பெற்றுக்கொண்டார். அங்கு 10 வருடங்கள் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார். கணிதப் பிரிவில் விசேட பயிற்சிபெற்றவர். தேசிய கல்வி நிறுவகத்தால் பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா பயிற்சியையும் பெற்றுள்ளார்.

அதிபர் ச.கணேஸ்வரன் துறைநீலாவணை மகா வித்தியாலயம், பழுகாமம் கண்டுமணி வித்தியாலயம், பெரியபோரதீவு பாரதி வித்தியாலயம், தும்பங்கேணி கண்ணகி மகா வித்தியலாயம், மகிழுர் சரஸ்வதி மகா வித்தியாலயம் ஆகியவற்றில் ஆசிரியராகவும் கடமைபுரிந்துள்ளார்.

மகிழுர் சரஸ்வதி வித்தியாலயத்தில் ஆசிரியர் சேவையில் இருந்தவாறே 2009 இல் நடைபெற்ற அதிபர் சேவை போட்டிப் பரீட்சைக்கு தோற்றி சித்திபெற்றார். மகிழுர் சரஸ்வதி மகா வித்தியாலயத்தில் மூன்று வருடங்கள் பிரதி அதிபராக கடமைபுரிந்துள்ளார்.

அதனையடுத்து 2013 இலிருந்து 2019 வரை பாலமுனை பாலமுருகன் வித்தியாலயத்தின் அதிபராக இருந்து அங்கு பல்வேறு சேவைகளை ஆற்றியுள்ளார். அதன்பின்பு 2019இலிருந்து தற்போது 2021இல் ஓய்வுபெறும் வரை கோட்டைக்கல்லாறு மகா வித்தியாலயத்தில் அதிபராக இருந்து ஓய்வுபெற்றுச் செல்கின்றார்.

அதிபர் சற்குணம் கணேஸ்வரன் அகில இலங்கை சமாதான நீதிவானாகவும், பல்வேறு பொதுநல அமைப்புகளின் பிரதிநிதியாகவும் இருந்து சமய, சமூக தொண்டுகளை ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியில் வீசப்படும் கொரோனா பாதுகாப்பு ஆடைகளும் முகக்கவசங்களும்!





(மீராவோடை நிருபர்)

கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டுவரும் நிலையில் சிலர் தொற்றுகளை பரவச்செய்யும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகிறது.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யும் ஓட்டமாவடி - மஜ்மா நகர் பகுதிக்குச் செல்லும் மட்டக்களப்பு – கொழும்பு பிரதான வீதியோரத்தில் இவ்வாறு பயன்படுத்திய கொரோனா பாதுகாப்பு ஆடைகளும், முகக்கவசங்களும் முறையற்ற விதத்தில் வீசப்பட்டுள்ளன.

இதனால் அவ்வீதியைப் பயன்படுத்துவோர் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். அத்துடன், குறித்த பகுதியில் கூடுதலான கால்நடைகள் மேய்ந்து திரிவதால் ஒருவேளை முகக்கவசங்களிலுள்ள கிருமித் தொற்றுகள் கால்நடைகளையும் பாதித்துவிடுமோ என்று கால்நடைகள் உரிமையாளர்கள் அச்சம் கொள்கின்றனர்.

இவ்வாறு குறித்த இடத்தில் மொத்தமாக முகக்கவசங்களை வீசிச் சென்றுள்ளமை சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி கொரோனா ஆடைகளையும், முகக்கவசங்களையும் அப்புறப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும் என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் 24 மணிநேரத்தில் 189 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா தொற்றுடன் 189 பேர் இனங்காணப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் முத்துலிங்கம் அச்சுதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்றாவது அலை காரணமாக கொரோனா தொற்றுடன் 9626 பேர் இனங்காணப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கொவிட் தாக்கத்தினால் இதுவரையில் 137 பேர் மரணமடைந்துள்ளதுடன், மூன்றாவது அலையில் மாத்திரம் 128 பேர் மரணமடைந்துள்ளனர். கடந்த 24 மணிநேரத்தில் எந்தவிதமான மரணங்களும் பதிவாகாதபோதிலும் இதற்கு முன்னர் 3 மரணங்களும், அதற்கு முதல் நாள் 6 மரணங்களும் பதிவாகியுள்ளன.

மொத்தமாக இதுவரைக்கும் 32,187 பி.சி.ஆர். பரிசோதனைகளும், 44,656 அன்ரிஜன் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் 2 இலட்சத்து 75 ஆயிரம் தடுப்பூசிகள் முதலாம் கட்டமாக வழங்கப்பட்டிருக்கின்றன, இதற்கு மேலதிகமாக இரண்டாம் கட்ட தடுப்பூசிகளாக 75 ஆயிரம் தடுப்பூசிகள் ஏற்றும் நடவடிக்கைகள் முடிவுறுகின்ற கட்டமாக அமைகின்றது. ஆரம்பத்தில் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்பவர்களது எண்ணிக்கை அதிகமாக காணப்பட்டபோதிலும் தற்போது குறைவாக கணப்படுகின்றது. இதற்குக் காரணம் மக்கள் முன்வராமையே, மக்களை தேடி தடுப்பூசிகளை ஏற்றுமளவிற்கு எம்மை தள்ளாமல், மக்களாகவே முன்வந்து தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ள வேண்டும்.

அரசினால் மிகவும் செலவு செய்யப்பட்டு மக்களுக்கு கொடுக்கப்படுகின்ற மிகவும் பாதுகாப்பான செயற்பாடு இதுவாகும். மக்கள் இதனைக் கருத்திற்கொண்டு தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ளக்கூடிய அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள வயதெல்லைகளை உடையவர்கள் தாமாகவே முன்வந்து பெற்றுக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, அனைவரும் சமூகப் பொறுப்புடன் நோய் பரவாதவண்ணம் தமது சுகாதார வழிமுறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலமே இவ்வாறான தொற்றுகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார்.

அரச திணைக்களங்கள் மற்றும் ஏனைய வேலைத்தளங்கள் ஆகியவற்றில் கொவிட் தொற்கு அதிகரித்து வருவதைக் காண முடிகின்றது. இதற்குக் காரணம் பொறுப்பற்ற செயல் எனக் கூறமுடியாது, கவனமற்ற நிலை என்றே சொல்லலாம்.

அவ்வாறாக தொற்றுகள் ஏற்படும்போது சில சந்தர்ப்பங்களில் முற்றுமுழுதாக உரிய கிளையை அல்லது அந்த நிறுவனத்தை 14 நாட்களுக்கு மூடவேண்டிய நிலை ஏற்படலாம். தொற்றினை மேலும் பரவாமல் தடுப்பதற்காக இதனை கருத்திற்கொண்டு காரியாலயங்கள் மற்றும் வேலைத்தளங்களில் ஏற்படுகின்ற தொற்றும் பரவலை தடுப்பதற்கு முன்வரவேண்டுமென்று தெரிவித்துள்ளார்.

# வாகரை பிரதேச செயலக உத்தியோகத்தர் மோட்டார் சைக்கிள் விபத்தில் உயிரிழப்பு

(க.விஜயரெத்தினம்)

வாகன விபத்தில் சிக்குண்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிசிச்சை பெற்றுவந்த வாகரை பிரதேச செயலகத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் சிசிச்சை பலனின்றி கடந்த ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றது.

மட்டக்களப்பு வாகரை பிரதேச செயலகத்தில் பொருளாதார உத்தியோகத்தராக கடமையாற்றிய ஜெகநாதன் காண்டீபன் (வயது 44) கடந்த 2ஆம் திகதி வாகரை காயன்கேணியில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில், வாகரை வைத்தியசாலையில் அனுமதித்து பின்னர் அங்கிருந்து மேலதிக சிசிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிசிச்சைபெற்றுவந்த நிலையில் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த உத்தியோகத்தர் வாகரை பிரதேச செயலகத்தில் தமது கடமையை ஆற்றிவிட்டு தனது சொந்த ஊரான ஆரையம்பதிக்கு மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருக்கையில் இடம்பெற்ற வாகன விபத்தில் சிக்குண்டு படுகாயமடைந்துள்ளார்.



இவ்வாறு உயிரிழந்த நபர் மட்டக்களப்பு ஆரையம்பதியை வசிப்பிடமாகக்கொண்டவர் என தெரியவருகின்றது. மட்டக்களப்பு செங்கலடி மற்றும் வவுணதீவு பிரதேச செயலகங்களில் கடமையாற்றியுள்ளார். அரச திணைக்களங்களினால் முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சிகளில் ஒரு வளவாளராகவும் செயற்பட்டதோடு, இசைத்துறையில் ஒரு கலைஞராகவும் இருந்து பல நிகழ்வுகளில் தமது ஆளுமையையும், கலையையும் வளர்த்த இளம் கலைஞருமாவார். இவ்வாறு உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தையே ஆவார்.

இவ்விபத்து சம்பந்தமாக வாகரை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றார்கள்.

# ஓட்டமாவடி ஆற்றில் மீன் பிடிக்கும் மீனவர்கள் மீது இனந்தெரியாதோரால் கல்வீச்சு தாக்குதல்

## வலைகளை சேதப்படுத்த முட்கம்பிகளும் உபயோகம்



(மீராவோடை நிருபர்)

கோறளைப்பற்று மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட ஓட்டமாவடி ஆற்றில் மீன் பிடிக்கும் மீனவர்களுக்கு சதிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஓட்டமாவடி மூன்றாம் வட்டார மின்னத் மீன்பிடி சங்கத் தலைவர் ஏ.ஏ.சலீம் தெரிவித்தார்.

எமது மீனவர்கள் ஓட்டமாவடி பாலத்தை தாண்டி தியாவட்டவான் பகுதிக்கு மீன்பிடிக்கச் செல்லும்போது அந்த பகுதியிலுள்ள ஆற்றில் சிலர் முட்கம்பிகளை போட்டு எங்களது மீன்பிடித் தொழிலுக்கு சதிகளை ஏற்படுத்துகின்றனர்.

எமது மீனவர்கள் வலை வீசும்போது முட் கம்பிகளில் வலைகள் சிக்கி பெறுமதியான வலைகள் சேதமடைந்துள்ளன.

அத்தோடு, வலைகளை மீட்கும்போது மீனவர்களுக்கு கம்பிகள் கிழித்து காயங்கள் ஏற்பட்டுள்ளன - என்று சங்கத் தலைவர் ஏ.ஏ.சலீம் மேலும் தெரிவித்தார்.

இரவு நேரங்களில் தாம் குறித்த பகுதியில் மீன்பிடித்துக்கொண்டிருக்கும்போது கரைகளில் நின்று தங்கள் மீது கல்வீச்சு தாக்குதல்கள் மேற்கொள்வதாகவும், தகாத வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டு ஏசுவதாகவும் மின்னத் மீன்பிடி சங்கத் தலைவர் ஏ.ஏ.சலீம் தெரிவித்தார்.

வலைகள் சேதமடைந்த நிலையில், தமது தொழில்களை தொடர்ந்தும் மேற்கொள்ள முடியாத சூழ்நிலையில் தாம் தொழிலின்றி பாதிப்படைந்துள்ளதோடு, இந்த நாசகார செயல்களை செய்யும் நபர்களைக் கண்டுபிடித்து தாம் தொடர்ந்தும் தொழிலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கடற்றொழில் பரிசோதகரிடம் முறைப்பாடொன்றை பதிவுசெய்துள்ளதாகவும் சங்கத் தலைவர் தெரிவித்தார்.



# பாலமுனையில் பொதுக் கிணறுகள் புனரமைப்பு



(சாய்ந்தமருது நிருபர்)

பாலமுனை பிரதேசத்தில் சில இடங்களில் நீண்டகாலத் தேவையாக இருந்துவந்த குடிநீர் வசதி ரஹ்மத் பவுண்டேஷன் எனும் சமூகசேவை அமைப்பினால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இத்தேவையை நிவர்த்திசெய்து தருமாறு ரஹ்மத் பவுண்டேசனிடம் விடுக்கப்பட்ட வேண்டுகோளையேற்று அதன் ஸ்தாபகத் தலைவரும் கல்முனை மாநகர சபை பிரதி முதல்வருமான ரஹ்மத் மன்சூரின் துரித நடவடிக்கையினால் குறுகிய காலப்பகுதியில் குறித்த இடங்களில் பொதுக் கிணறுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இவற்றை மக்கள் பாவனைக்காக கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் ரஹ்மத் மன்சூர் அதிதியாகக் கலந்துகொண்டதுடன் பவுண்டேசன் உறுப்பினர்கள், ஊர்ப் பிரமுகர்கள், உலமாக்கள் பலரும் கலந்துகொண்டனர்.

இந்த உயரிய சேவையை செய்வதற்கு பூரண அனுசரணை வழங்கிய வை.டபிள்யூ.எம்.ஏ. (YWMA) பேரவைக்கு இதன்போது ரஹ்மத் மன்சூர் தனது விசேட நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்.

ரஹ்மத் சமூகசேவை அமைப்பினால் அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பள்ளிவாசல்கள், கோவில்கள், விகாரைகள் மற்றும் கிறிஸ்தவ ஆலயங்கள் உட்பட பல்வேறு இடங்களிலும் பொதுக்கிணறுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டு வருவதுடன், வசதி குறைந்த குடும்பங்களுக்கு குழாய்நீர் இணைப்பு, நிலக்கீழ் அடி தண்ணீர் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சத்துருக்கொண்டான் விவசாய பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்ட 22 பேருக்கு கொரோனா தொற்று



(பாண்டிருப்பு நிருபர்)

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனையினால் 49 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 12 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியிருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது. இதில் களுவாஞ்சிக்குடி பிராந்தியத்திலிருந்து கடந்தவாரம் சத்துருக்கொண்டான் விவசாய பயிற்சிக் கருத்தரங்கில் கலந்துகொண்ட 22 பேர் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர் என பிராந்திய சுகாதாரப் பணிமனை தெரிவித்துள்ளது.

களுவாஞ்சிக்குடி பிராந்திய சுகாதாரப் பணிமனையின் சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் எஸ்.இராஜேந்திரன், மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.யோகேஸ்வரன் ஆகியோரின் வழிகாட்டலில் பிராந்தியத்தில் கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதற்கான பல்வேறு விழிப்புணர்வு செயற்பாடுகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைய இங்குள்ள கிராமங்களில் கொரோனா நோயாளர்களை அடையாளம் காண்பதற்கான அன்ரிஜன், பி.சி.ஆர். பரிசோதனைகள் மற்றும் அத்துடன், 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு நாட்களில் 33 பேருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதுடன் இருவர் கொரோனா தொற்றினால் உயிரிழந்தும் உள்ளனர். இந்நிலையில் பிராந்தியத்தில் பொதுமக்கள் அனைவரும் இறுக்கமான சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றுமாறும், தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளாதவர்கள் பிராந்திய சுகாதாரப் பணிமனைக்கு வருகை தந்து தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளுமாறும் சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# அரசியல்வாதிகள் குறுகியகால இலாபத்திற்காக இன ரீதியாக செயற்படாமல் சகலருக்கும் பொதுவாக நடந்துகொள்ள வேண்டும்

## மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன்

(வீரமுனை நிருபர்)

இன, மத பாரபட்சங்கள் உட்பட மனிதகுல மேம்பாட்டுக்கு எதிரியான வாதங்களை வெற்றிகொள்வதுடன், இன, மத வாதங்களுக்கெதிராக சாத்விக வழியில் போராட அனைத்து மக்களும் ஒன்றுபட வேண்டும் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

இனவாத சவால்களை எதிர்கொள்ள ஐ.நா. சபை உருவாக்கும் நிரந்தர அமைப்பு தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

அரசியல் செய்வதற்கு அடிப்படை இனவாத இனத்துவேசம் இருக்கவேண்டும் என்பதை இலங்கை நாட்டின் ஆட்சியாளர்கள் விரும்புகிறார்கள். அன்றுதொட்டு இன்றுவரை அரசியல் நகர்வுகளில் முற்போக்கான சிந்தனைகள், தேசிய பிரச்சினையினை தீர்க்கக்கூடிய தூரநோக்கு என்பன அரசியல் தலைவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. விட்ட பிழைகளையே தொட்ட அரசியலையே தொடர்ந்தும் செய்கிறார்கள்.

ஆட்சியை கையகப்படுத்துவதற்கு எந்த இனவாத, மதவாத, பேரினவாதத்தை பயன்படுத்தலாம், எவ்வாறு இனங்களை பிரித்து ஆளலாம், எவ்வாறு இனங்களுக்கிடையே மோதலை ஏற்படுத்தலாம், எவ்வாறு ஒரு இனத்தின் சொத்துகளை அபகரிக்கலாம், அழிக்கலாம், எரிக்கலாம், கபளீகரம் செய்யலாம் என்கின்ற நாசகார சிந்தனைகளோடு செயற்படுகிறார்களேயொழிய சிறுபான்மை மக்கள் மத்தியில் புரையோடிப்போயுள்ள தேசிய இனப்பிரச்சினையினை தீர்த்துக்கொள்ளக்கூடிய ஆளுமை, பலம், சக்தி என்பன ஆட்சியாளர்களிடம் இருப்பதாக தெரியவில்லை.

சிங்கள பௌத்த மேலாதிக்கம் சிறுபான்மை மக்களை அடக்கி ஒடுக்கி ஆட்சிசெய்ய வேண்டும் என்று தொடர்ச்சியாக கனவு காணுகிறது. ஆனால், இந்தக் கனவு நீண்ட நாட்களுக்கு பலிக்கப்போவதில்லை. இந்த நிலைமையிருந்தால் நாடு அபிவிருத்தியடையப் போவதும் இல்லை. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டால் மாத்திரமே செல்வச் செழிப்பான வளம்பெருந்திய நாடாக



இந்த நாடு மாற்றமடையும்.

தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாததனால் எத்தனையோ புத்திஜீவிகள், நாட்டின் மனித வளங்கள், சொத்துகள், உடைமைகள் உட்பட அனைத்தும் நாசமாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, பிரச்சினைகள் தீர்க்கப்படுமாக இருந்தால் எல்லாம் நன்றாக முடியும். நாடும் மக்களும் அபிவிருத்தியடைவார்கள், தேசிய ஒற்றுமையும் உருவாகும். அரசியல்வாதிகள் குறுகிய கட்சி அரசியல் இலாபத்திற்காக இனவாத ரீதியில் செயற்படாமல் சகல மக்களுக்கும் பொதுவான கொள்கைகளோடு செயற்பட வேண்டும் - என்றார்.

# பொத்துவில் பிரதேச சபையின் பொது நூலகம் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் அபிவிருத்தி

(அட்டாளைச்சேனை)

பொத்துவில் பிரதேச சபைக்குட்பட்ட பொத்துவில் பொது நூலகம் நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடியதாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் எடுத்துக் கொண்ட நடவடிக்கையின் பயனாக கடந்த காலங்களில் கவனிப்பாரற்றுக் கிடந்த பொத்துவில் பொது நூலகம் தற்காலத்தின் நவின தொழில்நுட்பத்திற்கேற்ப மாணவர்களையும் சமூகத்தையும் சிறந்ததொரு ஒழுக்கமான ஆளுமையுள்ள கல்விச் சமூகமாக உருவாக்க வேண்டும் என்ற நன்னோக்குடன் E-Library System ஆக தரமுயர்த்தப்பட்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளது.

இதற்கென நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப்பின் முயற்சியால் முதற்கட்டமாக முப்பது இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம் தெரிவித்துள்ளார்.

# நீரோட்டுமுனை பொதுக்கிணறு புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்





(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை பகுதியிலுள்ள நீரோட்டுமுனை பொதுக் கிணறு திருத்தப் பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை பட்டினமும், சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர் மற்றும் உறுப்பினர்களின் வேண்டுகோளின்பேரில் பிரதேச சபையினால் இந்த திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நாட்டில் தற்போது நிலவும் வரட்சியான காலநிலையால் நீர்த் தட்டுப்பாட்டை எதிர்நோக்கும் இக்கிராம மக்கள் இந்த பொதுக்கிணறு புனர்நிர்மாணம் செய்யப்படுவதால் பெரிதும் பயனடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நீரோட்டுமுனை பொதுக்கிணற்றின் புனர்நிர்மாணப் பணிகளை உப தவிசாளர் ஏ.எல்.எம்.நௌபர் உள்ளிட்ட குழுவினர் நேரில் சென்று கண்காணித்து உரிய பணியை முன்னெடுத்து வருகின்றனர்.

# கொரோனா சுகாதார விதிமுறைகளை மீறியோருக்கு அக்கரைப்பற்றில் அன்ரிஜன் பரிசோதனை முன்னெடுப்பு

(அக்கரைப்பற்று நிருபர்)

அக்கரைப்பற்று மற்றும் அட்டாளைச்சேனை பிரதேச செயலகங்களுக்கு உட்பட்ட சங்கணிச்சீமை, சம்பு நகர், ஆலம்குளம், ஆலிம் நகர் போன்ற கிராமங்களில் வாய்க்கால் கரையோரங்கள், வயல்வெளிகளில் குடும்ப சகிதம் சுகாதாரத்துறையில் கட்டளையை மீறி நடந்துகொள்பவர்களுக்கு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரியினால் அதிரடியாக அன்ரிஜன் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.

சுகாதாரத்துறையினரின் கட்டளைகளை செவிமடுக்காது குடும்ப சகிதமாக சுகாதார வழிமுறைகளை மீறி பொதுமக்கள் நடந்து கொள்கின்றனர். அவ்வாறானவர்களுக்கு அன்ரிஜன் பரிசோதிக்கப்பட்டதுடன், சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது. நமது பிராந்தியத்தில் கொரோனா வைரஸி னால் அதிகமானவர்கள் மரணித்துக் கொண் டிருக்கின்றார்கள். எனவே, நாம் நம்மை பாதுகாக்க தவறினால் நமது வீடுகளில் இருக்கும் முதியோர்கள், குழந்தைகளின் நிலையினை சிந்தித்துப் பார்க்கவேண்டும். களியாட்ட நிகழ்வுகள், விருந்தோம்பல்,



ஒன்றுகூடல்களிலிருந்து தவிர்ந்துகொண்டு சுகாதார வழிமுறையைப் பின்பற்றி நடந்துகொள்ள வேண்டும். மக்களைப் பாதுகாப்பதற்காக இரவு பகலாக களத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கும் சுகாதாரத்துறையினரின் வேண்டுகோளை மக்கள் மதித்து சுகாதார வழிகளுடன் நடந்துகொள்ளுமாறு அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எவ்.எம்.ஏ.காதர் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஆலையடிவேம்பில் 90 வீதமானோருக்கு கொரோனா தடுப்பூசி ஏற்றப்பட்டது

## பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரி அகிலன்



(அக்கரைப்பற்று நிருபர்)

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் நிலை யில் 30 வயதுக்கு மேற்பட்ட 90 வீதத் திற்கும் அதிகமானவர்கள் தடுப்பூசியை ஏற்றிக் கொண்டுள்ளதாக பிரதேச சுகாதார பதில் வைத்திய அதிகாரி எஸ்.அகிலன் தெரிவித்தார்.

கொரோனா தாக்கம் ஏற்பட்டதன் பின்னர் இதுவரையில் 181 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டதாகவும் 5 மரணங்கள் நிகழ்ந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்நிலையில், கொரோனா மூன்றாவது அலையின் பின்னரே அதிக தொற்றும் அதிக மரணங்களும் ஏற்பட்டுள்ளதாகவும் இதன்படி 129 பேர் அடையாளம் காணப்பட்டதுடன் 4 மரணங்களும் நிகழ்ந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேநேரம் ஆலையடிவேம்பு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் கொரோனா மரணமொன்று பதிவானதுடன், நேற்று முன்தினம் 17 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

ஆனாலும் மக்களது பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாகவே தொற்று மிகவும் வேகமாக பரவி வருகின்றது. ஆகவே, இக்காலகட்டத்தில் மக்கள் மிகவும் அவதானத்துடனும் பொறுப்புடனும் செயற்படுமாறு சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக்கொண்டார்.

இது இவ்வாறிருக்க, ஆலையடிவேம்பில் தொடர்ந்தும் அன்ரிஜன் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேநேரம், தடுப்பூசி ஏற்றப்படும் நடவடிக்கையும் சமகாலத்தில் இடம்பெறுகின்றன. ஆகவே, இதுவரையில் தடுப்பூசிகள் ஏற்றிக்கொள்ளாத 30 வயதிற்கு மேற்பட்டவர்கள் சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திற்கு சென்று தடுப்பூசியை பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# கிழக்கு மாகாண ஆயுர்வேத பொது மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க ஏற்பாடு

## ஆளுநர் அனுராதா யஹம்பத் பணிப்பு



(கிண்ணியா நிருபர்)

கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் நேற்றுக் காலை உள்ளூர் மருத்துவம் மூலம் ஆயுர்வேத பொது மருத்துவமனைகளில் கொரோனா நோயாளிகளுக்கு உடனடியாக சிகிச்சையளிக்க உத்தரவிட்டார்.

அதன்படி, கிழக்கு மாகாணத்திலுள்ள கப்பல்துறை, கிண்ணியா, புதுக்குடியிருப்பு ஆயுர்வேத பொது மருத்துவமனைகளில் இந்த சிகிச்சைகள் வழங்கப்படும்.

திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் நேற்றுக் காலை மாகாண ஆயுர்வேத ஆணையாளர் டாக்டர் ஆர்.ஸ்ரீதர் மற்றும் ஆளுநருக்கு இடையிலான கலந்துரையாடலின் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஆயுர்வேத பொது மருத்துவமனைகளில் இருக்கும் குறைபாடுகளை ஆராய்ந்து, அந்த குறைபாடுகளை விரைவாக நிவர்த்திசெய்ய தேவையான நடவடிக்கைகளை எடுக்கவும் ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதன்படி, இந்த மருத்துவமனைகளில் 270 கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தேவையான வசதிகள் உள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திண்மக்கழிவுகளை பிரித்தறிய உரப்பைகள் வழங்கிவைப்பு



(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் முன்மொழியப்பட்ட சேதனப்பசளை உற்பத்தியை மேம்படுத்துவதற்காக அக்கரைப்பற்று பிரதேச சபையின் திண்மக் கழிவுகளை உக்கும் குப்பைகள், உக்காத குப்பைகள் என்று பிரித்து சேகரிப்பதற்காக உரப்பை பாவனை அறிமுக நிகழ்வு நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் உரப்பைகள் அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ.ராசிக் தலைமையில் சபை உறுப்பினர்களின் பங்குபற்றலுடன் செயலாளர் எல்.எம்.இர்பானிடம் கையளிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் கருத்துத் தெரிவித்த பிரதேச சபைத் தவிசாளர்,

எமது பிராந்தியத்தில் சேதனப் பசளை உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக குப்பைகளை இரண்டு வகைப்படுத்துவதற்காக இரண்டு நிறங்களில் உரப்பைகள் தற்போது மக்களின் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. இந்த உரப்பைகளை மக்கள் நேரடியாக பிரதேச சபை நிர்வாகத்தினரிடம் ஒரு உரப்பைக்கான நிர்ணய விலையான 50 ரூபா கொடுத்து பெற்றுக்கொள்ள முடியும். அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து மக்களும் உரப்பைகளில் குப்பைகளைப் பிரித்து வழங்கவேண்டும். இல்லாத பட்சத்தில் குப்பைகளை எமது வாகனத்தில் ஏற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

உலகளாவிய ரீதியில் உள்ளூராட்சி மன்றங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளில் திண்மக்கழிவகற்றல் மிக முக்கியமான ஒரு பிரச்சினையாகக் காணப்படுவதால் எமது பிராந்திய மக்கள் அக்கரைப்பற்று பிரதேச சபையுடன் ஒருமித்துப் பயணிக்கக்கூடிய மக்கள். எனவே, எங்களுடைய அறிவுறுத்தல்களைப் பின்பற்றி சிறப்பாக ஒரு முன்மாதிரியான மக்களாக திகழ்வார்கள் என்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்டினார்.

# கிழக்கு மாகாணத்தில் பிளாஸ்ரிக் கழிவைப் பயன்படுத்தி போக்குவரத்து வீதிகள் அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தம்

## ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் கைச்சாத்து





(கிண்ணியா நிருபர்)

மீள்சுழற்சி செய்ய முடியாத பிளாஸ்ரிக் கழிவுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கொங்கிறீட்டைப் பயன்படுத்தி கிழக்கு மாகாண சபையின் கீழ் சாலைகள் அமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் திருகோணமலையிமுலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நேற்று முன்தினம் (09) கையெழுத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் ஏ.ஜி.சி. இன்னோவேட் பிரைவேட் நிறுவனத்தின் தலைவர் டொக்டர் ஜூடித் சமரநாயக்க கையெழுத்திட்டார்.

இதன்படி மட்டக்களப்பு மாநகர சபை கழிவு முகாமைத்துவ நிலையத்தினூடாக பிளாஸ்ரிக்குகளின் பங்குகளைப் பெற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், இரண்டு இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இது கிழக்கு மாகாண சாலை மேம்பாட்டு ஆணையம் மற்றும் கிழக்கு மாகாண சபையின் கீழ் உள்ள ஏ.ஜி.சி. இன்னோவேட் (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாகும்.

இந்நிகழ்வில் மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த முறை பிளாஸ்ரிக் கழிவு மேலாண்மைக்கு சிறந்த தீர்வாக பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. திண்மக்கழிவு தற்போது இலங்கையின் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. ஒப்பந்தத்தின்படி முதல் கட்டமாக இந்த முறையைப் பயன்படுத்தி திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் சாலைகள் அமைக்கப்படும்.

# தமிழர்களுக்காக ஐ.நா. சபையூடாக பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில் ஒன்றையாவது இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை

## அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கலையரசன்

(வீரமுனை நிருபர்)

அரசாங்கம் தமிழர்களை பல வருடங்களாக ஏமாற்றி வந்துள்ள நிலை எதிர்வரும் காலங்களில் இயல்பாகவே மாற்றமடையும். சர்வதேச சமூகத்தினால் தமிழர்களின் கரங்களுக்கு தானாகவே தீர்வுகள் கிடைக்கும் நிலை ஏற்படும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் த.கலையரசன் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தையும், தமிழர்களையும் அரசாங்கம் தொடர்ச்சியாக ஏமாற்றி வருகிறதே என வினவியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தந்தை செல்வாவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து ஜனநாயகப் போராட்டங்களை தமிழர்கள் முன்னெடுத்திருந்தார்கள். தற்போதுவரை எதுவுமே வெற்றிபெறவில்லை. ஆனால், எவ்வாறு கிடைக்கும், எப்படிக் கிடைக்கும், எதனால் கிடைக்கும் என்பதை விட தமிழர்கள் எதிர்பார்க்கும் தீர்வுகள் எதிர்வரும் காலங்களில் குறிப்பாக வெகுவிரைவில் கிடைக்கப்பெறுவதற்கான சாத்தியங்கள் ஏற்படுவதை உணர முடிகிறது. தமிழர்களைப் பொறுத்தமட்டில் வேறு எந்த எதிர்பார்ப்பும் இன்றி சர்வதேசத்தையே நம்பியிருக்கின்றார்கள்.



போர் முடிந்தவுடன் சர்வதேச மனித உரிமைகள் ஆணையாளர்நாயகம் இலங்கை அரசாங்கத்தை பாராட்டிய விடயத்தை எல்லோரும் அறிவார்கள். பாராட்டிய மறுநாளே இலங்கையில் இடம்பெற்றதாக கூறப்படும் மனித உரிமைகள் மீறல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டும் என்ற கடப்பாட்டையும் விதித்திருந்தது.

இலங்கை அரசாங்கத்தினால் பொறுப்புக்கூறல் நல்லிணக்கச் செயற்பாட்டில் எந்தவித முன்னேற்றங்களும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. பொறுப்புக்கூறலில் பல விடயங்களுக்கு பொறுப்புக்கூற வேண்டிய கடப்பாடுள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் நீதி வழங்கப்பட வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகிறோம்.

காணாமல் போனோர் விடயத்திற்கு தீர்வு, யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான தீர்வு, யுத்தத்தின்போது பாதிக்கப்பட்ட வடகிழக்கு மக்களை பொருளாதார ரீதியில் கட்டியெழுப்புதல், பெரும்பான்மையினரால் அபகரிக்கப்பட்ட காணிகளை உரிய மக்களிடம் ஒப்படைத்தல், தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் விடுவித்தல் உட்பட பல்வேறு விடயங்களுக்கு தீர்வுபெற வேண்டிய நிலையினை ஐ.நா.மனித உரிமை பேரவை வலியுறுத்தியுள்ளது.

ஐ.நா. சபையூடாக பரிந்துரைக்கப்பட்ட விடயங்களில் ஒன்றையாவது இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவில்லை என்ற அடிப்படையில் பல தீர்மானங்களை எடுத்திருக்கிறார்கள்.ஆகவே, அன்றிலிருந்து இன்று வரைக்குமாக பெரும்பான்மை அரசியல் தலைவர்களின் ஏமாற்று அரசியல் இன்னும் எத்தனை காலத்திற்கு வெற்றி பெறும் என்று தெரியவில்லை. எங்களுக்கு தர்மம் வெல்லும் என்ற நம்பிக்கை இருக்கிறது. நிச்சயமாக இறைவனின் நாட்டத்தினாலாவது தமிழ் மக்களுக்கு நிரந்தர தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

# பெரியநீலாவணையில் சேதனப்பசளை உற்பத்தி விழிப்புணர்வு செயலமர்வு





(பெரியநீலாவணை நிருபர்)

ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் அம்பாறை மாவட்டத்தில் சேதனப்பசளை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இங்கு சேதனப்பசளையின் பாவனை வெற்றியளித்து வருவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர். பெரியநீலாவணை விவசாய விரிவாக்கல் நிலையத்தினூடாக சேதனப்பசளை உற்பத்தி தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கமளிக்கும் செய்முறை பயிற்சி நேற்று முன்தினம் (09) பெரியநீலாவணையில் நடைபெற்றது.



விவசாயப் போதனாசிரியரும் நிலையப் பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.எம்.சமீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சேதனப்பசளை உற்பத்தி மற்றும் அதன் பாவனை தொடர்பாக விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதில் மறு பயிர்களுக்கான பாடவிதான உத்தியோகத்தர் எஸ்.எச்.ஏ.நிகார், தொழில்நுட்ப உதவியாளர் அஸ்வினி செந்தூரன் உட்பட பலர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

சேதனப்பசளை பாவனை தற்போது அதிகரித்துள்ளதுடன், வெற்றியளித்துள்ளதாகவும் தெரிவித்த விவசாயிகள், நஞ்சற்ற உணவு உற்பத்தி வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ள ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட அரசாங்கத்திற்கும் நன்றி தெரிவித்தனர்.

# ஏறாவூர் ஆதார வைத்தியசாலைக்கு சிகிச்சை உபகரணங்கள் கையளிப்பு

(ஏறாவூர் நிருபர்)

ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்திற்கு ஒரு தொகுதி உபகரணங்களைக் கையளிக்கும் நிகழ்வு வைத்திய அத்தியட்சகர் தலைமையில் நடைபெற்றது.

சதகா அறக்கட்டளை நிதியம் இப்பொருட்களை வழங்கியுள்ளது.

சலவை இயந்திரம், தலையணைகள், படுக்கை விரிப்புகள், குளிர்சாதனப்பெட்டி மற்றும் நீர்ச் சுத்திகரிப்புக் கருவி உள்ளிட்ட பல பொருட்கள் இதன்போது கையளிக்கப்பட்டன.

கொவிட் தொற்றில் சடுதியான அதிகரிப்பு ஏற்பட்டதையடுத்து ஏறாவூர்ப் பிரதேசத்திலும் சிகிச்சை நிலையம் ஒன்றினை அமைக்க வேண்டுமென்ற நோக்குடன் பல்வேறு தரப்பினரும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com



**காத்தான்குடி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையில் பணிபுரிந்து சேவை நிமித்தம் கல்லாறுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆர்.எம்.முபாரிஸை கௌரவித்து காத்தான்குடி தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை நிலையப் பொறுப்பதிகாரி எம்.எஸ்.எம்.ரிஸ்வி நினைவுப் பரிசு வழங்குவதைப் படத்தில் காணலாம்.**

# மட்டு. மாவட்ட அபிவிருத்தி குறித்து கடந்த கால ஆட்சியாளர்கள் கரிசனை காட்டத் தவறினர்

## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் சாடல்





கடந்த கால ஆட்சியாளர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தின் அபிவிருத்தி குறித்து கரிசனை காட்டத் தவறினர் என சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேச கிராமங்களுக்கான பிரதான வீதி புனரமைப்பு தொடர்பில் பிரதேச மக்களிடம் மேற்கொண்ட சந்திப்பொன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகப்பெரிய பிரதேசமாகவும், 3500க்கும் அதிகமான குடும்பங்களும் செறிந்து வாழுகின்ற மற்றும் 14 க்கு மேற்பட்ட அரச நிறுவனங்களும் கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேசத்தினைச் சார்ந்த பகுதிகளில் 34,700 க்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு விவசாய நிலங்களாகவே காணப்படுகின்றன. குறிப்பாக இந்த கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேசத்தினைச் சார்ந்த பகுதி மட்டக்களப்பு மாவட்டத்தின் பொருளாதார நடவடிக்கைகளுக்கு முக்கிய பங்கு வகித்து வருகின்றது.

எனினும், மழைக்காலங்களில் வெள்ளம் ஏற்படும் சந்தர்ப்பங்களில் பிரதான வீதி மற்றும் கிரான் பிரதேசத்திற்கான பாலம் என்பன உரிய முறையில் சீரமைக்கப்படாமையினால் நீரினால் மூழ்கும் சந்தர்ப்பங்களே அதிகளவில் காணப்படுகின்றன. இவ்வாறு தாழ்நில பகுதிகளாக உள்ள கிரான் பிரதேசத்தினைச் சார்ந்த விவசாயிகளும் அரச அதிகாரிகள் மற்றும் பிரதேச பொதுமக்கள் எனப்பலரும் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதாக உள்ளது.

இவ்வாறு சீரற்ற முறையில் காணப்படுகின்ற இந்த கிரான் பிரதேசத்தைச் சார்ந்த கிராமங்களுக்கான வீதி மற்றும் பாலம் தொடர்பில் கடந்த கால ஆட்சியாளர்களிடம் பிரதேச மக்கள் தெரிவித்து இருந்தபோதிலும் எவரும் கண்டுகொள்ளாத சந்தர்ப்பங்களே அதிகமாகக் காணப்பட்டன. எனினும், தற்போது இருக்கும் அரசாங்கம் பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திகள் குறித்து பல நடவடிக்கைகள் எடுத்துவருகின்றன. குறிப்பாக பின்தங்கிய பிரதேசங்களின் பாலங்கள் மற்றும் வீதிகள், குளங்கள் எனப்பல அபிவிருத்திகள் செய்யப்படுகின்றன.

அதில் ஒரு கட்டமாகவே கோறளைப்பற்று தெற்கு கிரான் பிரதேசத்தைச் சார்ந்த கிராமங்களுக்கு செல்லும் பிரதான பாதை மற்றும் பாலத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவற்றைப் புனரமைப்பது தொடர்பில் முன்மொழிவுகளை பெற்றுக்கொள்வதற்காக மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்களுடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், வருங்காலங்களில் வீதி அபிவிருத்தி அமைச்சின் ஊடாக மட்டு. மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசங்களின் வீதிகள் மற்றும் பாலங்கள், குளங்களை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும், இதனூடாக மாவட்டத்தின் அபிவிருத்திக்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறுபொருளாதார பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

# இராணுவ வீரர்களின் 37 ஆவது நினைவேந்தல் நிகழ்வு; மட்டு. வவுணதீவு அதிரடிப்படையினர் இரத்த தானம்

(கனகராசா சரவணன்)

இராணுவ வீரர்களின் 37 ஆவது நினைவேந்தலை முன்னிட்டு மட்டக்களப்பு வவுணதீவு விசேட அதிரடிப்படையினர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்த தானம் வழங்கும் நிகழ்வு வவுணதீவு விசேட அதிரடிப்படை முகாமில் நேற்று முன்தினம் (09) இடம்பெற்றது.

இந்த இராணுவ வீரர்களின் நினைவேந்தல் எதிர்வரும் முதலாம் திகதி இடம்பெறும் நிலையில், விசேட அதிரடிப்படையின் கட்டளைத் தளபதியும், சட்டத்தரணியும், பிரதி பொலிஸ் மா அதிபருமான வர்ண ஜெயசுந்தரவின் எண்ணக்கருவுக்கமைய, அம்பாறை கட்டளைத் தளபதியும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜே.ஆர்.சேனாதீரவின் வழிகாட்டலில் மட்டக்களப்பு பிரதேச படையணியின் கட்டளைத் தளபதியும், உதவிப்பொலிஸ் அத்தியட்சகரும் டி.சி.வேட்டவிதானவின் ஆலோசனையின் பேரில் வவுணதீவு விசேட



அதிரடி படை முகாம் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் டபிள்யூ.ஜீ.எஸ்.ஹயப்பிரிக தலைமையில் இந்த இரத்தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இதில் 50க்கும் மேற்பட்ட விசேட அதிரடிப்படையினர் மற்றும் உயிரிழந்த அதிரடிப்படை வீரரான கே.எம்.எம்.நவாஸின் குடும்ப உறவினர்கள் கலந்துகொண்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்தத்தை தானமாக வழங்கினர்.

# மன்னாரில் 39 மில்லியன் ரூபா பெறுமதியான 131 கிலோ கேரள கஞ்சாவுடன் இருவர் கைது

## சந்தேகநபர்கள் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸாரிடம் ஒப்படைப்பு







மன்னார், இழுப்புக்கடவை பிரதேசத்தில் நேற்றுக் காலை கடற்படையினரால் முன்னெடுக்கப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 131 கிலோ கிராம் 725 மில்லிகிராம் கேரள கஞ்சா போதைப் பொருளுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களிடமிருந்து லொறியொன்று கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான ரோந்து நடவடிக்கைகள் கடற்படையினரால் கடற்கரை பிரதேசம் உள்ளிட்ட கடல் வலயங்களை உள்ளடக்கும் வகையில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைய, வட மத்திய கடற்படையினர் மற்றும் மன்னார் பொலிஸார் இணைந்து இந்த சுற்றிவளைப்பு நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர். இதன்போது, மீன் ஏற்றிச் செல்வதற்காக பயன்படுத்தப்படும் குளிரூட்டி வசதியுடைய சந்தேகத்துக்கிடமான லொறியொன்றை பரிசோதனைக்குட்படுத்தியபோது, அந்த லொறியிலிருந்து சூட்சுமமான முறையில் 07 பயணப்பைகளில் 06 பொதிகள் என்ற அடிப்படையில் பொதியிடப்பட்டிருந்த இந்த 131 கிலோகிராம் 725 மில்லிகிராம் கேரள கஞ்சா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அந்த லொறியின் சாரதி மற்றும் அதில் பயணித்த உதவியாளர் ஆகியோர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா தொகையின் பெறுமதி 39 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமென கடற்படை தெரிவித்துள்ளது.

கொவிட் - 19 கட்டுப்பாட்டுக்காக விதிக்கப்பட்டுள்ள சுகாதார வழிமுறைகளுக்கமைய இந்த சுற்றிவளைப்பு முன்னெடுக்கப்பட்டுள்ளது. கற்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 36 மற்றும் 40 வயதுடைய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரும் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா தொகை மற்றும் லொறி என்பவற்றுடன் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக கடற்படை மேலும் தெரிவித்தது.

# ஒலிம்பிக்கில் பங்கேற்றதனூடாக இலங்கை வழங்கிய மனிதாபிமான ஒத்துழைப்புக்கு ஜப்பான் பாராட்டு



ஜப்பான், டோக்கியோவில் இந்த ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்று இலங்கை காட்டிய மனிதாபிமான ஒத்துழைப்புக்கு ஜப்பான் தூதுவர் அகிரா சுஜியாமா நன்றிகளைத் தெரிவித்தார். இந்த சந்திப்பு நேற்று முன்தினம் (09) வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்றது.

வெளிநாட்டு அமைச்சர் தினேஷ் குணவர்தனவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வேண்டுகோளின் பேரில், 1.45 மில்லியன் டோஸ் அஸ்ட்ராசெனெக்கா தடுப்பூசிகளை நன்கொடையாக வழங்கிய ஜப்பான் அரசாங்கத்திற்கும் அதன் மக்களுக்கும், இலங்கை அரசாங்கமும், அதன் மக்களும் நல்குகின்ற நன்றிகளை ஜப்பான் பிரதமருக்கு அமைச்சர் குணவர்தன தெரிவித்தார். இலங்கைக்கு வழங்கப்பட்ட தடுப்பூசிகளை பொதுமக்களுக்கு விரைவில் கிடைக்கச் செய்வதற்காக இலங்கை அரசாங்கம் முன்னெடுத்த உடனடி நடவடிக்கைகளால் ஜப்பான் அரசாங்கம் மிகவும் மகிழ்ச்சியடைவதாக ஜப்பான் தூதுவர் தெரிவித்தார்.

இரு நாடுகளுக்குமிடையேயான இராஜதந்திர உறவுகள் ஸ்தாபிக்கப்பட்டு 70 ஆண்டுகள் நிறைவு அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் இடம்பெறுவதால், இரு நாடுகளினதும் இணைந்த நினைவேந்தல் விழாவை நடத்துவது குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது. இரு நாடுகளுக்குமிடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் ஜப்பானிய முதலீட்டின் கீழ் இலங்கையில் இடம்பெறும் அபிவிருத்தித் திட்டங்களின் முன்னேற்றம் மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புக்கள் குறித்த தகவல்களையும் இரு தரப்பினரும் பரிமாறிக் கொண்டனர்.

# ஒக்கம்பிட்டியில் கொரோனா தீவிரம்

## மீள் அறிவித்தல்வரை விற்பனை நிலையங்களுக்குப் பூட்டு

புத்தல, ஒக்கம்பிட்டிய நகரத்திலுள்ள சகல விற்பனை நிலையங்களையும் நேற்று மாலை 6 மணிமுதல் தற்காலிகமாக மூடுவதற்கு அந்த விற்பனை நிலையங்களின் உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர்.




ஒக்கம்பிட்டி நகரை அண்மித்த பகுதிகளில் உருவாகியுள்ள கடுமையான கொரோனா பரவலை கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், ஒரு சில விற்பனை நிலையங்கள் நேற்றுக் காலையிலேயே மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஒக்கம்பிட்டி நகரிலுள்ள மக்களுக்கு நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட ரெபிட் அன்ரிஜன் பரிசோதனையில் 17 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், புத்தல பிரதேசத்தில் 79 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 72 பேருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலைமையின் காரணமாக அந்தப் பிரதேசத்திலுள்ள விற்பனை நிலையங்களை மூடுவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன், மீண்டும் கடைகளை திறப்பதற்கான தினம் எதிர்காலத்தில் அறிவிக்கப்படும் என ஒக்கம்பிட்டி வர்த்தக சங்கத்தின் தலைவர் டீ.எம்.பீ.ஜீ. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# வணக்கஸ்தலங்களில் அதிகமானோர் ஒன்றுகூடுவதை தவிர்த்துக்கொள்க!

## மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கோரிக்கை

*(மாத்தளை நிருபர்)*

மத்திய மாகாணத்தில் கொவிட் தொற்று பரவும் வேகம் மிகவும் அவதானமிக்க நிலையை அடைந்துள்ளதால் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள சகல சர்வ வணக்கஸ்தலங்களிலும் இடம்பெறுகின்ற வழிபாடுகளை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுமாறு மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் நிஹால் வீரசூரிய கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் சர்வமத வழிபாட்டு நிலையங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். நாட்டில் அசுர வேகத்தில் கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டிருக்கும் வேளையில், மத்திய மாகாணத்திலும் தீவிர நிலையை அடைந்துள்ளது.

எனவே, இத்தொற்றிலிருந்து பாதுகாத்துக்கொள்ள மத்திய மாகாணத்தில் அமைந்துள்ள சகல சர்வமத வழிபாட்டுத் தலங்களிலும் மக்கள் ஒன்றுகூடி நடத்தக் கூடிய வழிபாடுகளை முற்றிலும் தவிர்த்துக் கொள்ளுமாறு சர்வமத வழிபாட்டுத் தலங்களின் அறங்காவலர்களும், நம்பிக்கையாளர்கள் சபைகளும் பரிபாலன குழுக்களும் பொதுமக்களை தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் கேட்டுக் கொண்டுள்ளார்.

# கொரோனாவிலிருந்து 2,644 பேர் பூரண குணம்

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 644 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 இலட்சத்து 98 ஆயிரத்து 162 ஆக அதிகரித்துள்ளது.

# நோர்வே தூதுவர் – விளையாட்டுத்துறை அமைச்சருக்கிடையில் கலந்துரையாடல்

நோர்வே தூதுவர் ட்ரீனா யூரன்லி மற்றும் இளைஞர், விளையாட்டுத்துறை அமைச்சர் மற்றும் டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று இடம்பெற்றது.

இதன்போது தொழில்நுட்ப மயப்படுத்தலை விரிவுபடுத்தல், விளையாட்டு மற்றும் கொள்கை தயாரிப்புத் துறைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை ஊக்குவிப்பது தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இதேவேளை இருநாட்டுக்கும் இடையிலான நட்புறவு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



# தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கழகம் வாழ வேண்டும்

## கலைஞரின் மூன்றாவது நினைவேந்தல் நிகழ்வில் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. தெரிவிப்பு



தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கழகம் வாழ வேண்டும். கலைஞரின் கொள்கைகள் வாழ வேண்டும். அதனூடாக தமிழினத்தின் இழிநிலை அழிய வேண்டும் என்பதற்கு எமது தாய் மண்ணில் நிலையான ஆட்சி இருக்க வேண்டும். அதைத்தான் நாமும் விரும்ப வேண்டும். எனவே, கலைஞர் நாமம் அழியப் போவதில்லை. அழியாத தடத்தில் பயணிக்கின்ற பெரிய தொண்டர் படை இருக்கின்ற இந்தக் கழகம் வாழும். தமிழ் பேசும் மக்களை வாழ வைக்கும். ஈழத் தமிழருக்கும் அது விடிவைத் தேடித்தரும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

தமிழக முன்னாள் முதலமைச்சர், முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதியின் மூன்றாவது ஆண்டு அஞ்சலி நிகழ்வு கொழும்பு-12, பிரைட்டன் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கலை, இலக்கியம், அரசியல் என்று மூன்று துறைகளிலும் அகலக்கால் பதித்து இன்று நாம் எல்லோரும் வியக்கின்றளவு பெரும் தடயத்தை விட்டுச் சென்றிருக்கும் முத்தமிழ் அறிஞர் டொக்டர் கலைஞர் கருணாநிதிக்கான இந்த நினைவு வைபவத்தில், வெறுமனே அவரின் நினைவுகளை மீட்டிப் பார்ப்பது என்பது மாத்திரமல்ல, அவர் நிலைநாட்டி விட்டுச் சென்றிருக்கின்ற சாதனைகளையும் நாங்கள் இன்று கொண்டாடுகின்றோம்.

கலை, இலக்கியம் என்று வருகின்ற போது கலைஞரைத் தவிர்த்து விட்டு கடந்த நூற்றாண்டின் கலை, இலக்கியத்தைப் பற்றிப் பேச முடியாது. ஆழப்பதிந்த ஒரு பெயராக அது நிலைத்து நிற்கின்றது. அதில் எந்த சந்தேகமும் கிடையாது. அவருடைய எழுத்துக்கள் மற்றும் படைப்புக்களைப் பற்றி நிறையப் பேசலாம்.

என்னைப் பொறுத்தமட்டில் குறளோவியம் தந்தவர், அதிலும், திருக்குறளை பகுத்தறிவு வழி நின்று எங்களுக்கு பகுப்பாய்வு செய்து தந்த அவருடைய மொழிநடை - கருத்தாழமிக்க உரைநடை மிகவும் ஆழமானதும் விரிவானதுமாகும். அவ்வாறுதான் தொல்காப்பியப் பூங்கா. தமிழில் இலக்கணத்தை இலகுபடுத்தித் தருவதில் அவர் சாதித்த பெரிய சாதனை அதுவாகும். அதைப்போல் ஏராளமான கலைப் படைப்புக்களை அவர் தந்துள்ளார். தென்பாண்டிச் சிங்கம், பொன்னர் சங்கர், நெஞ்சுக்கு நீதியின் மூன்று பாகங்கள், பகுத்தறிவு இயக்கம், சுயமரியாதை இயக்கம் இவற்றினுடைய பின்னணியை இந்த மூன்று பாகங்களிலும் தாராளமாக எங்களுக்கு தந்ததில் கலைஞருடைய பங்களிப்பு சாமான்யமானதொன்றல்ல.

அவருடைய நாடகங்களை எடுத்து கொள்வோமானால், மனோகரா, சோக்ரடீஸ், சேரன் செங்குட்டுவன் என்று ஏராளமானவை உள்ளன. அவற்றின் வசனங்களிலுள்ள வசீகரம் இன்றும் எங்களுடைய மனங்களில் நிழலாடுகின்றது.

'மனோகரா' நாடகத்தில் புருஷோத்தமன் தர்பாரில் தனயன் மனோகரன் தன்னுடைய தாயை வஞ்சித்த தகப்பனுக்கு எதிராக பேசுகின்ற வசீகர வசனங்களைப் பேசி தன்னுடைய கலை வாழ்வை ஆரம்பித்த கலைஞர்கள் இங்கு இந்தக் கூட்டத்திலும் இருக்கின்றார்கள்.

இந்தப் பின்னணியில் அவருடைய கொள்கைகளை தன்னுடைய கலைப் படிப்பினூடாக தமிழர்களின் இரத்த நாடி, நாளங்களிலும் உணர்ச்சி நரம்புகளிலும் ஊட்டிய பெரும் மேதைக்காகத்தான் இன்று நாங்கள் மேடைபோட்டுப் பேசுகின்றோம்.

அவருடைய மேதாவிலாசத்தைப் பற்றி நிறைய பேசலாம். அது ஓரிரு வரிகளில் கதைத்து முடிக்கின்ற விவகாரமும் அல்ல. பகுத்தறிவுக் கொள்கை என்று வருகின்ற போது, அது நாஸ்திகம் என்று சிலர் நினைக்கலாம். கடவுள் மறுப்பு என்று நினைக்கலாம். ஆனால், அது அவ்வாறு அல்ல. சமூக நீதி என்று வருகின்ற போது சாதிக் கொடுமைகளைப் பற்றிப் பேசலாம். அதற்காக சுயமரியாதை இயக்கம் தொடர்ந்தது.

80 வருட காலப் பொது வாழ்வு. 75 வருட காலம் ஒரு பத்திரிகையாளர். "முரசொலி" என்ற பத்திரிகையின் ஆசிரியர் தலையங்கத்தில் எது வருகின்றது என்பதை பொறுத்துத்தான் தமிழ் நாட்டின் அரசியல் தீர்மானிக்கப்படுகின்றது என்றளவுக்கு வழிநடத்திய பத்திரிகையாளராக இருந்தார். 70 வருடங்கள் கலைத்துறைக்கு பங்களிப்பு செய்தார். 60 வருடங்களுக்கு மேல் சற்றும் சளைக்காத சட்டமன்ற செயற்பாடுகள். 13 தடவைகளாக சட்டமன்ற உறுப்பினர், 5 தடவைகள் முதல்வர். இவற்றையெல்லாம் அடைவதற்கு அவர் கொடுத்தது சாதாரணமான விலை அல்ல. அடைந்த அவமானங்கள் சாமான்யமானவை அல்ல. அவர் சுமந்த விழுப்புண்கள் இலகுவில் ஆறியவைகளும் அல்ல.

இவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் அவர் மேடையேறினால், அவருக்கே உரித்தான மஞ்சள் நிறச் சால்வை, கறுப்புக் கண்ணாடி அந்த அடையாளங்களோடு மேடையில் பேச ஆரம்பிக்கின்ற போது அவருடைய பாணியில் "என் உயிரிலும் மேலான என் இனிய உடன் பிறப்புக்களே" என்று ஆரம்பிக்கின்ற போது அவையிலிருந்து எழுகின்ற கரகோஷம் வானைப் பிளக்கும். பாரிய இயக்கத்தின் போராளிக் கூட்டம் இன்று மீண்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆட்சிபீடம் ஏற்றி இருக்கின்றது.

எம்.ஜி.ஆரைப் பொறுத்த மட்டில் மிகவும் ஜனரஞ்சகமான அவரது ஆட்சி 1977ஆம் ஆண்டிலிருந்து 1991வரையில் தொடர்ந்தது. அந்த சம காலத்தில்தான் இலங்கையின் இனப் பிரச்சினையும் உக்கிரமடைந்தது. இந்தக் கட்டத்தில்தான் இலங்கை தமிழர்களின் உய்வுக்காக முதன்முதலில் தமிழக திராவிட கழகத்தோடு சேர்ந்து மிகப் பெரிய பேரணியை கலைஞர் 1977 கலவரத்திற்கு பின்னர் முன்னெடுத்தார். அதுவே முழு தமிழகத்தின் பார்வையையும் ஈழத் தமிழர்களின் பிரச்சினையின் பால் திருப்பியது. தன்னுடைய சட்டசபை ஆசனத்தைத் துறந்து 1983ஆம் ஆண்டு கலவரங்களுக்கு பின்னர் தமிழர்களை ஒடுக்க நினைத்தவர்களுக்கெல்லாம் சிம்ம சொப்பனமாக இருந்தவர் கலைஞர். அவரைப் பற்றிய விமர்சனங்களும் இல்லாமல் இல்லை. பல வருட கால பொது வாழ்வில் விமர்சனங்கள் இல்லாமல் அரசியலில் ஈடுபட முடியாது.

சுயமரியாதை இயக்கம் ஆரம்பித்த போது அவ்வியக்கத்தினூடாக வந்த படிப்பினைகள் சாதி வேறுபாடு தமிழகத்தில் கிராமம் கிராமமாக, ஒழுங்கை, ஒழுங்கையாக இருந்துவந்த நிலையில், அவையெல்லாம் ஒழுங்கைகளின் பெயர்களால் ஓங்கி ஒழித்துக் கொண்டிருந்தன. முதலியார் தெரு, பறையர் தெரு, மறவர்தெரு, நாயர் தெரு, பல்லர் தெரு என்றெல்லாம் தெருவைத் தாண்டி வீடு வாங்க முடியாது. அவ்வாறான சாதிக் கொடுமைகள் நிலவிய காலத்தில் சமத்துவ கிராமம் அமைத்து அவற்றிற்குச் சாவுமணி அடித்தவர் கலைஞராவார். இதைத்தான் இன்று தமிழகமும், தமிழுலகும் கொண்டாடுகின்றன.

வெறும் நாஸ்திகர் என்பதல்ல. அவர் சமூக சமத்துவத்திற்காகப் போராடினார். பெண்ணுரிமைக்காகப் போராடினார்.

கலைஞர் பெண்களுக்கான சொத்துரிமை, சம உரிமையை பெற்றுக் கொடுத்து அமுல்படுத்துவதில் தமிழகத்தில் சாதனை படைத்தார். அருந்ததிகள் என்ற கூட்டத்தினர் கையிலும் தலையிலும் கழிவைச் சுமக்கின்ற தொழிலை கேவலமாகப் பார்த்து அவர்களுக்கு எதுவுமே இல்லாத நிலையில் 3 சதவீத ஒதுக்கீடு கொடுக்க வேண்டுமென்று தமிழகத்தில் சட்டமியற்றியவர் கலைஞராவார்.

முதல்வர் தளபதி ஸ்டாலின் சகலரையும் ஒன்றிணைத்து இட ஒதுக்கீடு, ஆசனப் பங்கீடு என்று வருகின்ற போது தாராள தன்மையோடு நடந்து கொள்வதால் காங்கிரஸோடும், ஏனைய சிறு சிறு கட்சிகளோடும் அவருக்கு கீழுள்ள கூட்டணி மிகவும் பலமாக இருக்கின்றது. தாராள, விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை இல்லை என்றால் அது ஒருபோதும் சாத்தியமாகாது. கலைஞர் அதனை செய்து காட்டி இருக்கின்றார். நாட்டை துண்டாக்கிவிடுவார்கள், பிரிவினைவாதிகள் என்றெல்லாம் வடக்கில் எண்ணிக் கொண்டிருந்தார்கள். இதற்கு முடிவு கட்ட வேண்டுமென்பதற்காக கலைஞர் அன்னை இந்திராவை அழைத்தார்.

அண்ணாவின் உருப்படத்தை திரை நீக்கம் செய்வதற்கு தமிழகம் வந்த அன்னை இந்திராவிடம் நாங்கள் சர்ச்சைக்காரர்களோ சண்டைக்காரர்களே அல்லர். "உரிமைக்கு குரல் கொடுப்போம், உறவுக்கு கை கொடுப்போம்" என்ற கோஷத்தோடு அவரோடு இணைந்து மத்தியில் கூட்டாட்சி, மாநிலத்தில் சுயாட்சி என்று நடத்தினார்கள். இங்கும் சில அரசியல் கட்சியினர் இதனை கையாள்கின்றனர். இதனை அறிமுகப்படுத்தியவர் கலைஞராவார்.

உண்மையான சமஷ்டி என்றால் என்ன? இதனை அர்த்தபுஷ்டியாக நடத்தி காட்டியது கலைஞரின் அரசியல் இராஜதந்திரமாக இருந்தது. அன்று கலகக்காரர்களாக பார்க்கப் பட்ட தமிழக அரசியல்வாதிகளை குறிப்பாக திராவிட முன்னேற்ற கழகத்தை அப்படி அல்ல என்று மத்திய அரசுக்கு உணர்த்துவதற்கு கலைஞர் வகித்த பங்கு சாமான்யமான விடயமல்ல. உரிமைக்கு குரல் கொடுத்தார். உறவுக்கு கை கொடுத்தார். அந்த அடிப்படையில் தான் அவருடைய அரசியல் சாணக்கியமும் வளர்ந்தது. அந்தக் கட்சியில் அடுத்த பிளவாக அரைவாசி மாவட்ட செயலாளர்களோடு வைகோ பிரிந்தார். கலைஞரின் மறைவோடு வைகோ இணைந்துவிட்டார்.

பலமான இயக்கமாக திராவிட கழகம் மீண்டும் முறுக்கேறி வீறுநடைபோடுகின்றது. இதனை பார்த்து நாம் அனைவரும் சந்தோஷப் படுகின்றோம். தமிழ் கூறும் நல்லுலகெங்கும் கழகம் வாழ வேண்டும். கலைஞரின் கொள்கைகள் வாழ வேண்டும். அதனூடாக தமிழினத்தின் இழிநிலை அழிய வேண்டும் என்பதற்கு எமது தாய் மண்ணில் நிலையான ஆட்சி இருக்க வேண்டும். அதைத்தான் நாமும் விரும்ப வேண்டும். எனவே, கலைஞர் நாமம் அழியப் போவதில்லை. அழியாத தடத்தில் பயணிக்கின்ற பெரிய தொண்டர் படை இருக்கின்ற. இந்தக் கழகம் வாழும். தமிழ் பேசும் மக்களை வாழ வைக்கும். ஈழத் தமிழருக்கும் அது விடிவைத் தேடித் தரும் என்று கூறி விடைபெறுகின்றேன் என்று தெரிவித்தார்.

# தங்கொட்டுவ, வென்னப்புவ, சிலாபம் ஆகிய பகுதிகளில் கொரோனா பரவல் தீவிரம்

**- வென்னப்புவ பிரதேச சபையின் பிரதான காரியாலயத்துக்கு பூட்டு**

**- வங்கி அதிகாரிகளுக்கும் தொற்று**




**- பொலிஸாருக்கும் கொவிட் - 19**

**- தங்கொட்டுவவில் தனியார் வர்த்தக நிலையங்கள் மீள் அறிவித்தல்வரை மூடல்**

(ஜூட் சமந்த)

தங்கொட்டுவ, வென்னப்புவ மற்றும் சிலாபம் ஆகிய பிரதேசங்களில் கொரொனா வைரஸ் தொற்று கடுமையாக பரவலடைந்து வருவதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா நோயாளர்கள் மூவர் அடையாளம் காணப்பட்டதைத் தொடர்ந்து வென்னப்புவ பிரதேச சபையின் பிரதான காரியாலயத்தை தற்காலிகமாக மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். வென்னப்புவ பிரதேச சபையை அண்மித்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டுவரும் தனியார் வங்கியொன்றில் கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர்.

வென்னப்புவ பொலிஸ் காரியாலயத்தில் பணியாற்றும் பெருமளவான அதிகாரிகள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளனர். இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள தொற்றுக்குள்ளான அதிகாரிகள் கொரோனா சிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதுடன், ஏனைய பொலிஸ் நிலையங்களிலிருந்து அதிகாரிகளை வரவழைத்து பணிக்கமர்த்துவதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இருந்தபோதிலும் வழமையான நடவடிக்கைகள் வென்னப்புவ பொலிஸாரினால் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன. தங்கொட்டுவ நகரம் மற்றும் அதனை அண்மித்த சில கிராமங்களில் நேற்று முன்தினம் மாத்திரம் 59 கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். கடந்த சில தினங்களுக்குள் தங்கொட்டுவ நகரம் மற்றும் அதனை அண்மித்த கிராமங்களில் அதிகளவான கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டிருந்தனர்.

தங்கொட்டுவ நகர பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் சில தனியார் வர்த்தக நிலையங்களில் கொரோனா நோயாளர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளனர். அதற்கமைய, அந்த சகல வியாபார நிலையங்களையும் தற்காலிகமாக மூடுவதற்கு சுகாதார அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

தங்கொட்டுவ நகரில் முன்னெடுக்கப்பட்டு வரும் அரச வங்கிகள் இரண்டில் சேவையாளர்களுக்கும் கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, சிலாபம், மாரவில மற்றும் கரவிடாகாரய ஆகிய பிரதேசங்களிலும் கொரோனா நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

திருமண நிகழ்வில் கலந்துகொண்ட மாரவில கிராமத்தைச் சேர்ந்த 08 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கராவிடாகாரய கிராமத்தில் 10 பேர் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் குறிப்பிட்டுள்ளனர்.

## கொவிட் தொற்று சிகிச்சை நிலையங்களுக்கு உளநல பொருட்கள் வழங்கிவைப்பு!

கிளிநொச்சி கொவிட் தொற்று நோயியல் சிகிச்சை நிலையங்களுக்கு 8 இலட்சத்து 50ஆயிரம் ரூபா பெறுமதியான உளநல பொருட்கள் வழங்கப்பட்டன.

சுவிஸ் மக்களின் நிதி உதவியுடன் சாந்திகம் நிறுவனத்தினால் குறித்த பொருட்கள் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டன.

குறித்த நிறுவனத்தின் பிரதிநிதிகளால் வழங்கப்பட்ட குறித்த பொருட்களை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி பிராந்திய சுகாதார வைத்திய அதிகாரி சரவணபவன் உள்ளிட்டோரிடம் வழங்கினர்.

குறித்த நிகழ்வு நேற்று பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது. கொவிட் தொற்று சிகிச்சை நிலையங்களுக்குத் தேவையான பொருட்கள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினரால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக குறித்த பொருட்கள் நேற்று கையளிக்கப்பட்டன.

இவை, கிருஸ்ணபுரம், பாரதிபுரம், முறிகண்டி ஆகிய பகுதிகளில் அமைந்துள்ள கொவிட் தொற்று சிகிச்சை நிலையங்களிலுள்ள நோயாளர்களின் உளநல விருத்திக்காக பயன்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





சிலாபம் ஸ்ரீ முன்னேஸ்வரம் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் பத்தாவது நாள் விழா நேற்று இடம்பெற்றது. (படங்கள்: வீர சொக்கன்)

## புகையிரத சேவையை பயன்படுத்துபவர்கள் சனநெருக்கடி ஏற்படாத வகையில் செயற்படல் வேண்டும்

**புகையிரதத் திணைக்களம் வேண்டுகோள்**

போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக புகையிரதங்களை பயன்படுத்தும் பயணிகள் சனநெருக்கடி ஏற்படாத வகையில் செயற்படுமாறு புகையிரதத் திணைக்களம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சில புகையிரத போக்குவரத்துகள் சுகாதார விதிமுறைகளை மீறி செயற்படுவது தொடர்பில் தகவல் கிடைத்துள்ளதாக புகையிரதத் திணைக்கள பொது முகாமையாளர் தம்மிக்க ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

புகையிரத போக்குவரத்து நடவடிக்கைகளின் பொது சனநெருக்கடி ஏற்படாதவகையில் புகையிரதங்களை தெரிவுசெய்வதற்கு பயணிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும். புகையிரதங்களில் பயணிக்கும்போது முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும் என்பதுடன், அரசாங்கத்தினால் வழங்கப் பட்டுள்ள சுகாதார ஆலோசனைகளை பின்பற்றி செயற்படுதல் வேண்டும். புகையிரத நிலையங்களுக்கு உள்நுழையும்போது கைகளை நன்றாக சுத்தம் செய்துகொள்வதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த வசதிகளை பயன்படுத்தி, தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். புகையிரத சேவையை பயன்படுத்தும் பயணிகளினதும், பொருட்களை கொண்டுசெல்பவர்களினதும் தேவை கருதி சேவை அமைந்திருத்தல் வேண்டும்.




அதற்காக எங்களால் முன்னெடுக்கப்படும் கண்காணிப்பு விஜயம், பயணிகளினதும் ஏனைய பிரிவுகளிலிருந்து கிடைக்கும் தகவலுக்கமைய செயற்படுத்தப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

## புத்தளம் வைத்தியசாலைக்கு புதிய அதிகாரி நியமனம்

( புத்தளம் நிருபர் )

புத்தளம் தள வைத்தியசாலையின் வைத்திய அதிகாரியாக தரிந்து பிரதீப் வீரசிங்க நியமிக்கப் பட்டுள்ளார்.

இவர் மாரவில தள வைத்தியசாலை மற்றும் சுகாதார அமைச்சில் சிறிதுகாலம் கடமை புரிந்துள்ளர்.



பின்னர் புத்தளம் தள வைத்திய சாலைக்கு வைத்திய அதிகாரியாக நியமனம் பெற்று வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் கொழும்பு முகத்திடல் கடற்கரை பூங்கா இரு வாரங்களுக்கு முடக்கம்

புத்தளம் கொழும்பு முகத்திடல் கடற்கரைப் பூங்கா எதிர்வரும் இரு வாரங்களுக்கு மக்கள் பாவனைக்குத் தடைசெய்யப்படுவதாக புத்தளம் நகரசபை தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் முதல் இது அமுலுக்கு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறப்பிட்டுள்ளதாவது,

இருப்பினும் காலை மற்றும் மாலை வேளைகளில் உடற்பயிற்சியில் ஈடுபடுபவர்களுக்கு மட்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதிகரித்துச்செல்லும் கொரோனா அலை காரணமாக, அடுத்துவரும் வாரங்களில் நெருக்கடியான நிலை ஏற்படலாம் என்றும் தற்போதைய டெல்ட்டா வைரஸின் பரவல் காரணமாக நாடு மிக மோசமான மருத்துவ அனர்த்தத்தை எதிர்கொள்ளவேண்டி வரும்.

இதனைக் கருத்திற்கொண்டே தாம் இந்த முடிவை எடுத்ததாகவும், அவர் கூறினார். அத்துடன், பொதுமக்கள் ஒன்றுகூடல்களைத் தவிர்த்து, அத்தியாவசிய தேவைகளுக்காக முகக்கவசம், சமூக இடைவெளி பேணி சுகாதார நடைமுறைகளை முறையாக பின்பற்றி வீட்டிலிருந்து ஒருவர் மட்டும் வெளியே வருகை தருமாறும் புத்தளம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஒரே நாளில் 3 இலட்சத்து 11 ஆயிரம் பேருக்கு 2ஆவது டோஸ் தடுப்பூசி செலுத்தப்பட்டது

நாட்டில் கொவிட் தடுப்பூசியின் 2ஆவது டோஸை பெற்றுக்கொண்டவர்களின் அதிக எண்ணிக்கை நேற்றுமுன்தினம் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, 3 இலட்சத்து 11 ஆயிரம் 102 பேருக்கு நேற்றுமுன்தினம் 2ஆவது டோஸ் தடுப்பூசி வழங்கப்பட்டது.

இதுவரை ஒருநாளில் வழங்கப்பட்ட 2ஆவது டோஸின் அதிக எண்ணிக்கையாகும். இதேவேளை, மொத்தமாக நேற்றுமுன்தினம் 4 இலட்சத்து 90 ஆயிரத்து 805 பேருக்கு கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கையின் சனத்தொகையில் இதுவரை 15



வீத மக்கள் அல்லது 32 இலட்சத்து 49 ஆயிரத்து 670 பேர் இரு தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

இதேவேளை, 11 மில்லியனுக்கு மேற்பட்டோர் முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர்.

## பியகம பிரதேச சபை உறுப்பினர் ஹஸனின் மறைவு பேரிழப்பு

**முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் எம்.பி. அனுதாபம்**



பியகம பிரதேச சபை முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் மர்ஹூம் எஸ்.எம்.எஸ்.ஹஸன், கம்பஹா மாவட்டத்தில் குறிப்பாக, மல்வானை மற்றும் அதனைச் சூழவுள்ள ஏனைய கிராமங்களுக்கும் அளப்பரிய பணிகளை ஆற்றியுள்ளதாகவும், அவரது இழப்பு அந்த பிரதேசத்தில் கட்சியின் வளர்ச்சிப் பாதையில் ஓர் இடைவெளியை ஏற்படுத்தியிருப்பதாகவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் அன்னாரது மறைவையிட்டு வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிறந்த சமூக சேவையாளரான மர்ஹூம் எஸ்.எம்.எஸ்.ஹஸன் முன்னரும் பியகம பிரதேச சபையில் உறுப்பினராக இருந்து பலவிதமான அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார். எமது கட்சியைப் பொறுத்தவரை பியகம தேர்தல் தொகுதியில் அதன் வளர்ச்சிக்கு அவர் ஆற்றிய பங்களிப்பை யாரும் இலகுவில் மறந்துவிட முடியாது.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டில் அதிக கரிசனை காட்டிவந்த அவர், மல்வானை அல்-முபாரக் தேசிய பாடசாலையின் முன்னேற்றத்தில் அதிக அக்கறை கொண்டிருந்தார்.

நான் அமைச்சராக பதவி வகித்த காலத்தில் பிரஸ்தாப பாடசாலைக்கு ஏறத்தாழ ஒன்றறை கோடி ரூபா செலவில் அதன் மைதானத்தை மையப்படுத்தி வடிகான் அமைப்பு செயற்றிட்டமொன்றையும் அவர் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

நீண்டகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த நிலையில், அவருக்கு அறுவைசிகிச்சையொன்றும் மேற்கொள்ளப்பட்டு உடல்நலம் சற்றுத் தேறிவந்த நிலையில் அண்மையில் அவரது வீடும், வியாபார நிலையமும் தீக்கரையானதால் மிகவும் பாதிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது அங்கு சென்று நிலைமையை நேரில் கண்டு ஆறுதல் கூறியிருந்தேன்.

எங்களது மறைந்த ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப்புடனும் நெருங்கிய தொடர்புகளைப் பேணிவந்த மர்ஹூம் ஹஸன், பொதுமக்களோடு மனம்விட்டு பழகுபவராகவும், அடிக்கடி அப்பிரதேசத்தில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு அனர்த்தங்களில்போது களத்தில் இறங்கி உதவுபவராகவும் இருந்துவந்தார்.

எல்லாம் வல்ல அல்லாஹ் அன்னாருக்கு ஜென்னத்துல் பிர்தௌஸ் சுவன பாக்கியத்தை வழங்குவானாக எனப் பிரார்த்திப்பதோடு, அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் தனிப்பட்ட முறையிலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பிலும் ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன் என்று குறிப்பிட்டுள்ளார்.





புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் வேண்டுகோளின்பேரில் கிராமிய வீதி மற்றும் அத்தியாவசிய உட்கட்டமைப்புகள் இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 17 மில்லியன் ரூபா செலவில் 1510 மீற்றர் நீளமான ஆலங்குடா வீதியின் அபிவிருத்திப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டது. (படங்கள் : புத்தளம்)

## இஸ்லாமிய புதுவருடத்தை முன்னிட்டு முகநூலினூடாக விசேட நேரடி நிகழ்வு









(ஏ.எஸ்.எம்.ஜாவித்)

இஸ்லாமிய புதுவருடமான ஹிஜ்ரி 1443 முஹர்ரம் மாதத்தை முன்னிட்டு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் திணைக்களத்தின் முகநூலினூடாக நேரடி விசேட இஸ்லாமிய நிகழ்வொன்றினை நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் அன்வர் அலி தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வரவேற்புரையை பிரதிப் பணிப்பாளர் அலா அஹமட் வழங்கியதுடன், முஹர்ரம் தொடர்பான தமிழ் மொழி மூலமான விசேட பயானை கொழும்பு பெரிய பள்ளிவாசலின் இமாம் அல்-ஹாஜ் மௌலவி எம்.எஸ்.எம்.தல்ஹா பாரியும், சிங்களமொழி மூலமான பயானை இஹ்ஷானியா அரபுக் கல்லூரியின் பிரதி அதிபர் அஷ்-ஷெய்க் எம்.எஸ்.எம்.பறூத் இஹ்ஷானியும் வழங்கினர்.

விசேட துஆப் பிரார்த்தனையை பிரதமரின் முஸ்லிம் சமய விவகாரங்களுக்கான இணைப் பாளர் கலாநிதி அஷ்-ஷெய்க் ஸெய்யத் ஹஸன் மௌலானாவும் வழங்கினர். நன்றியுரையை திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மௌலவி ஏ.எம்.றிஸ்மியும் வழங்கினார்கள்.

## புகையிரதத்தில் மோதி நபரொருவர் உயிரிழப்பு

(ஜூட் சமந்த)

சுண்ணாம்புக்கல் ஏற்றிச்சென்ற புகையிரதம் மோதியதில் நபரொருவர் உயிரிழந்துள்ளதாக வண்ணாத்திவில்லு பொலிஸார் தெரிவித்தனர்.

வண்ணாத்திவில்லு, விஜயபுர பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய கருணாரத்ன என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை வண்ணாத்திவில்லு 12 1/2 கட்டை பிரதேசத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளார்.

இந்த புகையிரதம் அருவக்காளு பிரதேசத்திலிருந்து பாலாவியிலுள்ள சீமெந்து தொழிற்சாலை வரை சுண்ணாம்புக்கல் ஏற்றிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புகையிரதத்தில் மோதி உயிரிழந்த நபரின் சடலம் தற்போது புத்தளம் ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கௌதாரிமுனை கடலட்டைப் பண்ணை விவகாரத்துக்கு அமைச்சர் டக்ளஸ் முற்றுப்புள்ளி






பூநகரி, கௌதாரிமுனை கடலட்டைப் பண்ணைகளுக்கான அனுமதிகளை வழங்கி வைத்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, குறித்த பிரதேசத்தில் இலங்கை - சீனக் கூட்டு நிறுவனத்தினால் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள கடலட்டை குஞ்சு பராமரிப்பு நிலையத்தை சட்ட ரீதியாக கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்தின் பொறுப்பில் ஒப்படைப்பதற்கு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பூநகரி, கௌதாரிமுனையில் கடலட்டைப் பண்ணைகளை அமைப்பதற்காக விண்ணப் பித்துள்ள அப்பிரதேச கடற்றொழிலாளர்கள் மற்றும் தனியார் முதலீட்டாளர்கள் ஆகியோர் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் மேற்குறிப்பிட்ட அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

பூநகரி நக்டா நிறுவன வளாகத்தில் நேற்று நடைபெற்ற குறித்த ஒன்றுகூடலில் சம்பிரதாயபூர்வமாக ஏழு பேருக்கு அனுமதிப்பத்திரங்களும் வழங்கப்பட்டன.

கௌதாரிமுனை பிரதேசத்தில் கடலட்டைப் பண்ணை அமைப்பதற்கான சுமார் 52 பிரதேச கடற்றொழிலாளர்கள் இதுவரை விண்ணப்பித்திருந்தனர்.

அதனடிப்படையில், பொருத்தமான இடங்களை அடையாளப்படுத்தி வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரி களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய ஆலோசனைக்கமைவாக, பண்ணை அமைப்பதற்கான இடங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், பண்ணைகளை அமைப்பதற்கான ஆரம்ப முதலீடுகளை வழங்குவதற்கு தனியார் முதலீட்டாளர் ஒருவரும் கடற்றொழில் அமைச்சரினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார்.

உடனடியாக களத்தில் இறங்கி வேலைகளை ஆரம்பிக்குமாறு பயனாளர் கள் மற்றும் அதிகாரிகளை கடற் றொழில் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

அதேவேளை, இலங்கை - சீன கூட்டு நிறுவனத்தினால் கௌதாரிமுனையில் அமைக்கப்பட்டுள்ள பரீட்சார்த்த கடலட்டைக் குஞ்சு பராமரிப்பு நிலையத் தின் முதலீடும், தொழில்நுட்பமும் எமக்கு அவசியமாக இருப்பதனால் குறித்த கடலட்டை குஞ்சு பராமரிப்பு நிலையத்தை கௌதாரிமுனை கடற்றொழிலாளர் சங்கத்திடம ஒப்படைப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதாகவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அறிவுறுத்தியுள்ளார்.

இதன்மூலம் கடந்த சில வாரங்களாக பரபரப்பாக பேசப்பட்ட கௌதாரிமுனை கடலட்டைப் பண்ணை விவகாரத்திற்கு கடற்றொழில் அமைச்சரினால் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

கௌதாரிமுனையில் அமைக்கப்பட் டுள்ள பரீட்சார்த்த கடலட்டைப் பராமரிப்பு நிலையம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனால் மக்களை குழப்பும் வகையிலான கருத்துகள் தொடர்ச்சியாக வெளியிடப்பட்டு வந்தன. இதனால் மக்களின் உண்மையான விருப்பங்களை அறிந்துகொள்வதற்காக இச்சந்திப்பில் கலந்துகொள்ளுமாறு அமைச்சர்டக்ளஸ் தேவானந்தாவினால் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரனுக்கு பகிரங்க அழைப்பு விடுக்கப் பட்டிருந்தது.எனினும், இச்சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் கலந்து கொள்ளாமை ஏமாற்றமளிப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

நேற்றைய கலந்துரையாடலில், பூநகரி பிரதேச செயலாளர் கிருஷ்னேந்திரன், நக்டா நிறுவனத்தின் வடக்கு மாகாணத்திற்கான பணிப்பாளர் நிருபராஜ், கடற்றொழில் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட பிரதானி மோகனகுமார், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் வை.தவநாதன், ஈ.பி.டி.பி. கட்சியின் பூநகரி அமைப்பாளர் இராசலிங்கம் மற்றும் தனியார் முதலீட்டாளர் அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு செய்திகள்

thamilannorth@gmail.com

# முன்னணி உறுப்பினர்கள் யாழ். மாநகர சபை முன்பாக போராட்டம்




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி யின் மாநகர சபை உறுப்பினர்கள் மாநகர சபை முன்றலில் அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமது வட்டார அபிவிருத்தி நிதியை அரசியல் பழிவாங்கலாக முதல்வர் நிறுத்தி வைத்திருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இப்போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர். இது ஓர் அராஜகமான செயற்பாடு என தெரிவித்துள்ளதோடு, யாழ். மாநகர முதல்வரின் இந்த அராஜக செயற்பாட்டுக்கு நீதி கோரி யாழ்ப்பாண மாநகர சபை உறுப்பினர் களால் அடையாள உணவு தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக் கப்படுகின்றது.

# தோணிக்கல் பகுதி வீடொன்றுக்குள் புகுந்து இளைஞர் குழு அட்டகாசம்

(வவுனியா நிருபர்)

வவுனியா, தோணிக்கல் பகுதி யிலுள்ள வீடொன்றுக்குள் புகுந்த இளைஞர் குழுவினர் வீட்டிலிருந்த தளபாடங்களை உடைத்து சேதப்படுத் தியதுடன், வீட்டாருக்கும் அச் சுறுத்தல் ஏற்படுத்தி விட்டு அங்கி ருந்து சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, தோணிக்கல், பொதுக் கிணறு வீதிக்கு அருகாமையிலுள்ள பூட்டியிருந்த வீடொன்றுக்குள் புகுந்த இளைஞர் குழு அங்கிருந்த கதிரை, மேசைகள் உள்ளிட்ட வீட்டுத் தளபாடங்களை உடைத்து சேதப்படுத்தியதுடன், கதவையும் உடைக்க முயன்றுள்ளனர்.

வெளியில் சென்ற வீட்டு உரிமையாளர்கள் வீட்டிற்கு வந்தபோது குறித்த இளைஞர் குழு வீட்டில் நின்றதுடன், வீட்டு உரிமையாளருக்கும் அச் சுறுத்தல் விடுத்துவிட்டு அங்கிருந்து சென்றுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் வீட்டு உரிமையாளரால் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ளனர்.

# தேனீ கொட்டியதில் காயமடைந்த ஒருவர் உயிரிழப்பு

தேன் கூட்டில் தேன் எடுக்க முற்பட்டபோது தேனீக்கள் கொட்டியதில் காயமடைந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டம், தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குமாரசாமிபுரம் பகுதியில் குறித்த சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 6.30 மணியலவில் இடம்பெற்றுள்ளது. தேன் கூட்டில் தேன் எடுத்துக்கொண்டி ருக்கையில் தேனீக்கள் கொட்டிய நிலையில் காயமடைந்து தருமபுரம் வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்ட குறித்த நபர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். இச்சம்பவத்தில் கதிரேசு செல்வரத்தினம் (64 வயது) என்பவரே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# வவுனியாவில் நூறு குளம் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வெளிக்குளம் புனரமைப்பு விரைவில் பூர்த்தியாகும்

## திலீபன் எம்.பி. தெரிவிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியா மாவட்டத்தில் நூறு குளங்கள் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் வெளிக்குளம் புனரமைப்புப் பணிகள் விரைவில் பூர்த்தியாகும் - என மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் சமல் ராஜபக்ஷவின் திட்டத்திற்கமைவாக வவுனியா மாவட்டத்தில் நூறு குளங்கள் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அதில் மத்திய நீர்ப்பாசன திணைக்களத்தின்கீழ் உள்ள வெளிக்குளம் 8.84 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

குறித்த புனரமைப்பு நடவடிக்கைகள் மற்றும் இதன்போது எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் கு.திலீபன், மத்திய நீர்ப்பாசன திணைக்கள பிராந்திய




பணிப்பாளர் கு.இமாசலன், மன்னார் பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் ந.யோகராசா, வவுனியா மத்திய நீர்ப்பாசன திணைக்களப் பிரிவு உதவியாளர் க.கஜமுகதாஸ், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரின் இணைப்பாளர் தினேஸ் அடங்கிய குழுவினர் வெளிக்குளம் குளப் பகுதிக்கு கள விஜயம் செய்து குளத்தின் புனரமைப்புப் பணிகளை பார்வையிட்டனர்.

இதன்போது கருத்து தெரிவித்த மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி நாடாளுமன்ற உறுப்பினருமான கு.திலீபன், எமது கோரிக்கைக்மைவாக அமைச்சர் சமல் ராஜபக்ஷ ஊடாக வவுனியா மாவட்டத்தில் 100 குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் வெளிக்குளம் புனரமைப்புப் பணிகள் விரைவில் பூர்த்தியாகும். இதன்மூலம் அதன் கீழ் உள்ள 35 ஏக்கர் விவசாய நிலங்களில் 27 குடும்பங்களைச் சேர்ந்த விவசாயிகள் இருபோக நெற்செய்கை செய்யும் அளவை அதிகரிக்க முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# பெரிய உளுக்குளம் பகுதியில் 76 பேருக்கு கொவிட் தொற்று உறுதி

(வவுனியா நிருபர்)

வவுனியா, பெரிய உளுக்குளம் பகுதி யில் 17 பேர் உட்பட 76 பேருக்கு கொவிட் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்பு களைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று வெளியாகின.

அதில் நேரியகுளம் பகுதியில் இருவருக்கும், மதீனா நகர்ப் பகுதியில் ஒருவருக்கும், பாரதிபுரம் பகுதியில் ஒருவருக்கும், போகஸ்வேவ பகுதியில் ஒருவருக்கும், அம்பலாங்கொடை பகுதியில் ஒருவருக்கும், அவுஸ்லப் பிட்டிய பகுதியில் மூவருக்கும், நெடுங்கேணி பகுதியில் இருவருக்கும், சின்னபூவரசன்குளம் பகுதியில் ஒருவருக்கும், ஆரா நிறுவனத்தைச் சேர்ந்த இருவருக்கும், மூன்றுமுறிப்பு பகுதியில் இரு இராணுவத்தினருக்கும், கற்குழி பகுதியில் ஒருவருக்கும், ஓமந்தை பகுதியில் ஒருவருக்கும், புதுக்குளம் பகுதியில் ஒருவருக்கும், தரணிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், வெளிவட்டவீதி பகுதியில் ஒருவருக்கும், வெளிக்குளம் பகுதியில் ஒருவருக்கும், பன்றிகெய்தகுளம் பகுதியில் ஒருவருக் கும், சாஸ்திரி கூழாங்குளம் பகுதியில் ஒருவருக்கும், மகாறம்பைக்குளம் பகுதியில் ஆறு பேருக்கும், சின்னசிப் பிக்குளம் பகுதியில் ஆறு பேருக்கும், வைத்தியர் விடுதியில் இருவருக்கும், கொக்கலிய இராணுவ முகாமில் ஒருவருக்கும், உளுக்குளத்தில் ஒன்பது பேருக்கும், பெரிய உளுக்குளம் பகுதியில் 17 பேருக்கும், கல்குண்ணாமடு பகுதியில் ஒருவருக்கும், மெனிக்பாம் பகுதியில் ஒருவருக்கும், பெரியகுளம் பகுதியில் மூவருக்கும், திருநாவற்குளம் பகுதியில் ஒருவருக்கும், பிரமனாலங்குளம் பகுதியில் ஒருவ ருக்கும், மதீனாமடு பகுதியில் ஒருவருக் கும், கனகராயன்குளம் பகுதியில் ஒருவருக்கும், நெடுங்கேணி பகுதியில் ஒருவருக்கும், மின்சார சபையில் பணியாற்றும் ஒருவருக்கும் என 76 பேருக்கு கொவிட் தொற்று உறுதிசெய்யப் பட்டுள்ளது.

இந்நிலையில் தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பிவைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுயதனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கடலுக்கு குளிக்கச்சென்ற முதியவர் சடலமாக மீட்பு



கொழும்புத்துறை, உதயபுரம் கடலுக்கு அதிகாலை குளிக்கச்சென்ற முதியவர் ஒருவர் காலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று அதிகாலை 5.30 மணியளவில் கடலுக்குச் குளிக்கச் சென்ற இவர் நீண்ட நேரமாகியும் காணாத நிலையில், காலை 8.30 மணியளவில் சடலமாக கரையொதுங்கினார்.

அப்பகுதியைச் சேர்ந்த மனுவேல் செபஸ்டியன் என்கிற 65 வயதான முதியவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மதுபோதையில் தாக்குதல்; குடும்பஸ்தர் காயம்

(வவுனியா நிருபர்)

வவுனியா மரக்காரம்பளை பகுதியில் மதுபோதையில் நின்ற நபர்கள் தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் மரக்காரம் பளையில் அமைந்துள்ள வியாபார நிலையத்திற்கு பொருட்களை கொள்வனவு செய்வதற்காக சென்றுள்ளார்.

இதன்போது அந்தப் பகுதியில் மதுபோதையில் நின்றிருந்த, உணவக உரிமையாளர் மற்றும் நபர் ஒருவரும் இணைந்து அவர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதனால் காயமடைந்த அவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தெரியப்படுத் தப்பட்டது.

தாக்குதலுடன் தொடர்புடைய இருவரை பொலிஸார் கைதுசெய்துள் ளதுடன், மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நபர்கள் தொடர்ச்சியாக இவ்வாறான தாக்குதல் சம்பவங் களில் ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# சம்பள முரண்பாடு தொடர்பான போராட்டத்தை வலுப்படுத்த ஒன்றுபட்டு செயற்பட அதிபர், ஆசிரியர்களுக்கு அழைப்பு

(வவுனியா நிருபர்)

அதிபர், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டை தீர்க்குமாறு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற தொழிற்சங்கப் போராட்டத்தை வெற்றியடையச் செய்ய வவுனியா மாவட்டத்திலும் அதிபர், ஆசிரியர்களை ஒன்றிணைந்து செயற்படுமாறு ஆசிரியர், அதிபர் ஒன்றிணைந்த சங்கங்களின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர் மண்டபத்தில் ஆசிரியர், அதிபர் ஒன்றிணைந்த சங்கங்களின் சம்மேளனத்தில் ஊடக சந்திப்பு நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம், இலங்கை ஆசிரியர் சங்கம், இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கம், ஏகாபத்த குருசேவா சங்கம், அதிபர் சங்கம் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது அதிபர், ஆசிரியர்களின் சம்பளப் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்பட வேண்டும். நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் குறித்த தொழிற்சங்கப் போராட்டத்திற்கு வவுனியா மாவட்ட அதிபர், ஆசிரியர்களும் பூரண ஆதரவை வழங்குகின்றோம். இது தொடர்பாக வவுனியா மாவட்ட இரு வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்கும் அறிவித்துள்ளோம்.

அரசாங்கம் குறித்த பிரச்சினைக்கு உடனடியாக தீர்வைப் பெற்றுத்தர வேண்டும். குறித்த போராட்டம் தற்போது சர்வதேசத்தினது கவனத்தைப் பெற்றுள்ளது. எனவே, எங்களது நியாயமான கோரிக்கைக்கு அரசாங்கம் பதில் தரவேண்டும். அதுவரை எமது போராட்டம் தொடரும் என்று தெரிவித்தனர்.

# பண்ணையில் உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனா

பண்ணை கடலில் தவறி விழுந்து உயிரிழந்த இளைஞனுக்கு கொரோனோ தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

பண்ணை பாலத்தடியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நண்பர்களுடன் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்த க.கௌதமன் (வயது 29) எனும் இளைஞன் தவறி கடலினுள் விழுந்து உயிரிழந்திருந்தார்.

அவரது சடலத்தில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் கொரோனா தொற்று கண்டறியப்பட்டுள்ளது.

அதனையடுத்து சுகாதாரப் பிரிவினர் சடலத்தை பொறுப்பெடுத்து கோம்பயன் மணல் மயானத்தில் மின் தகனம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# செல்லப் பிராணியான நாய் திடீரென இறந்த சோகத்தால் 5 நாட்கள் சாப்பிடாமல் இருந்த பெண் உயிரிழப்பு

## வட்டுக்கோட்டையில் சம்பவம்

செல்லப் பிராணியான நாய் திடீரென உயிரிழந்த சோகத்தில் 5 நாட்கள் சாப்பிடாமல் இருந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பின்னர் அவரது சடலத்தில் பெறப் பட்ட மாதிரிகளின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் வட்டுக்கோட்டை மூளாய் வீதியைச் சேர்ந்த கணேசலிங்கம் ஜெயமலர் (வயது-61) என்ற 3 பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்தவராவார். அவரது வீட்டில் செல்லப் பிராணியான நாய் கடந்த 5 நாட்களுக்கு முன் திடீரென உயிரிழந்துள்ளது. அந்த சோகத்தில் வயோதிபப் பெண் சாப்பிடாமல் இருந்துள்ளார்.

நேற்று அதிகாலை 3 மணியளவில் திடீரென மயக்கமடைந்த அவரை உடனடியாக அழைத்துச் சென்று யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சேர்த்துள்ளனர்.

எனினும், வெளிநோயாளர் பிரிவு அனுமதி யிலேயே அவர் உயிரிழந்துவிட்டார் என்று மருத்துவ அறிக்கையிடப்பட்டது. அதனையடுத்து அவரது சடலத்தில் கொவிட்-19 பரிசோதனை முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது.

பின்னர் இடம்பெற்ற பி.சி.ஆர். பரிசோதனையில் அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மரண விசாரணைகளை முன்னெடுத்த திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார், சடலத்தை சுகாதார முறைப்படி மின்தகனத்துக்கு அனுமதியளித்தார்.

# ரூ. 40 இலட்சம் வரி கட்டிய விஜய் - தனுஷ்



முடிவுக்கு வந்திருக்கிறது கொலிவுட்டின் ரோல்ஸ் ரொய்ஸ் பஞ்சாயத்து. நடிகர்கள் விஜய், தனுஷ் இருவருமே சில ஆண்டுகளுக்கு முன்பு வாங்கிய ரோல்ஸ் ரொய்ஸ் காருக்கு நுழைவு வரி விலக்கு கேட்டு வழக்குப்பதிவு செய்திருந்தனர். சமீபத்தில் இந்த வழக்கின் தீர்ப்பில் நடிகர் விஜய்யை நீதிபதி காட்டமாக விமர்சித்தமை பெரும் சர்ச்சைகளை கிளப்பியிருந்தது.

நடிகர் விஜய்யைத் தொடர்ந்து நடிகர் தனுஷும் இந்த சர்ச்சையில் சிக்கினார். இந்நிலையில், இருவருமே நுழைவு வரி கட்டுகிறோம் எனச் சொல்லி தற்போது முழுமையாக வரியை கட்டி வழக்கை முடித்திருக்கிறார்கள்.

விஜய், தனுஷ் இருவருமே ஏற்கனவே பாதி வரியை கட்டியிருந்ததால் தற்போது ரூ. 40 இலட்சம் நுழைவு வரியை கட்டியிருக்கிறார்கள்.

இந்நிலையில், விஜய்யின் 'பீஸ்ட்' படத்தில் தனுஷ் நடிக்கவிருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதலில் சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியம்

## ஐ.நா. பாதுகாப்புச் சபையில் இந்தியப் பிரதமர் மோடி எடுத்துரைப்பு

''கடல்வழி பாதுகாப்பு - வர்த்தகம் தொடர்பான 5 முக்கிய கொள்கைகளை பின்பற்ற வேண்டும்'' - எனவும் வலியுறுத்து



''கடல்சார் வழித்தடங்கள், நாடுகளின் தனிப்பட்ட தேவைக்கும், தீவிரவாதத்திற்கும் தவறாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை தடுத்துநிறுத்த சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். கடல்வழி பாதுகாப்பைப் பொறுத்தவரையில் 5 முக்கிய கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்'' என கடல்வழி பாதுகாப்பு, வர்த்தகம் தொடர்பான 5 முக்கிய கொள்கைகளை ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்தில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி எடுத்துரைத்துள்ளார்.

ஐ.நாவின் அதிகாரம் மிக்க பாதுகாப்புச் சபையின் தற்காலிக உறுப்பினராக 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளுக்கு இந்தியா சமீபத்தில் தெரிவுசெய்யப்பட்டது. 15 உறுப்பினர்களைக்கொண்ட சபையில் நிரந்தர உறுப்பினர்களான 5 நாடுகளை தவிர்த்து இந்தியா உட்பட 10 நாடுகள் தற்காலிக உறுப்பினர்களாக உள்ளன.

பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் நாடுகள் ஒவ்வொன்றும் சுழற்சிமுறையில் ஆங்கில எழுத்துகளின் அகர வரிசைப்படி, ஒவ்வொரு மாதமும் சபைக்கு தலைமை தாங்கும். அதன்படி, இம்மாதம் இந்தியா தலைமை பொறுப்பேற்றுள்ளது. இதனால், நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கு பிரதமர் மோடி தலைமை வகித்தார். இதன்மூலம் ஐ.நா. பாதுகாப்புச் சபை கூட்டத்துக்கு தலைமை வகித்த முதல் இந்தியப் பிரதமர் என்ற பெருமையை மோடி பெற்றுள்ளார்.

'கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதலில் சர்வதேச ஒத்துழைப்பு' குறித்து இடம்பெற்ற விவாதத்தில், காணொளி மூலம் பங்கேற்று பிரதமர் மோடி பேசியதாவது:

கடல்சார் பகுதிகள் தொடர்ந்து பல்வேறு விதமான சவால்களை சந்தித்து வருகின்றன. கடல்சார் வழித்தடங்கள் நாடுகளின் தனிப்பட்ட தேவைக்கும், தீவிரவாதத்திற்கும் தவறாக பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதனை தடுத்து நிறுத்த சர்வதேச ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். கடல்வழி பாதுகாப்பை பொறுத்தவரையில் 5 முக்கிய கொள்கைகள் பின்பற்றப்பட வேண்டும்.

சட்டப்படியான கடல்சார் வர்த்தகத்துக்கு இடையூறாக இருக்கும் தடைகள் அகற்றப்பட வேண்டும். சர்வதேச நாடுகளின் வளர்ச்சி தடையற்ற கடல்சார் வர்த்தகத்தை சார்ந்துள்ளது. கடல்சார் வர்த்தகத்தில் ஏற்படும் தடை உலக பொருளாதார வளர்ச்சிக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும்.

கடல்வழி வர்த்தகத்தில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சர்வதேச சட்டத்தின் கீழ் அமைதியான முறையில் தீர்வு காணவேண்டும். இதனால் பரஸ்பர நம்பிக்கை வளரும். இதன்மூலம் மட்டுமே உலக அமைதி, ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த முடியும்.

இயற்கை பேரிடர்கள், உறுப்பினரல்லாத நாடுகளால் ஏற்படும் கடல்சார் அச்சுறுத்தல்களை அனைத்து நாடுகளும் ஒருங்கிணைந்து எதிர்த்துப் போராட வேண்டும். இந்த விவகாரத்தில், பிராந்திய ஒத்துழைப்பை மேம்படுத்த இந்தியா பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கடல்சார் சூழல் மற்றும் கடல் வளங்கள் பாதுகாக்கப்பட வேண்டும். அத்தோடு கடல்சார் ஒத்துழைப்பை உறுதியுடன் மேம்படுத்த வேண்டும்.

- இவ்வாறு மோடி தெரிவித்துள்ளார்.



ஆவணி மாத பூஜை - ஓணம் பண்டிகை சிறப்பு பூஜை:

# 15இல் சபரிமலை ஐயப்பன் கோயில் நடை திறப்பு!

ஆவணி மாத பூஜை மற்றும் ஓணம் பண்டிகை சிறப்பு பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் எதிர்வரும் 15ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக திருவிதாங்கூர் தேவஸ்தானம் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,

ஆவணி மாத பூஜை மற்றும் ஓணம் பண்டிகை சிறப்பு பூஜைகளுக்காக சபரிமலை ஐயப்பன் கோயில் எதிர்வரும் 15ஆம் திகதி மாலை 5 மணிக்கு திறக்கப்படும் என்றும் தந்திரி கண்டரரு மகேஷ் மோகனரு முன்னிலையில் மேல்சாந்தி ஜெயராஜ் போற்றி நடையை திறந்துவைப்பார் எனவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தொடர்ந்து தீபாராதனை காட்டப்படும். அன்றைய தினம் மற்ற சிறப்பு பூஜைகள் நடைபெறாது. இரவு 9 மணிக்கு அரிவராசனம் பாடி நடை அடைக்கப்படும்.

மறுநாள் 16ஆம் திகதி அதிகாலை 5 மணிக்கு நடை திறக்கப்பட்டு நிர்மால்ய தரிசனம், கணபதி ஹோமம், நெய் அபிஷேகம் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா கட்டுப்பாடுகள் காரணமாக ஒன்லைன் முன்பதிவு அடிப்படையில் தினசரி 10,000 பக்தர்களுக்கு அனுமதியளிக்கப்படும் என தெரிவித்துள்ள தேவஸ்தானம், தரிசனத்திற்கு வருவோர் 48 மணிநேர இடைவெளியில் எடுக்கப்பட்ட கொரோனா நெகட்டிவ் சான்றிதழ் அல்லது 2 டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டதற்கான சான்றிதழ் வைத்திருக்க வேண்டும் என தெரிவித்துள்ளது.

சான்றிதழ் இல்லாத பட்சத்தில் முன்பதிவு செய்திருந்தாலும் தரிசனத்திற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் திருவிதாங்கூர் தேவஸ்தானம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் வேலுமணி உட்பட 17 பேர் மீது இலஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு



அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி. வேலுமணி உள்ளிட்ட 17 பேர் மீது இலஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் வழக்குப் பதிவுசெய்துள்ளனர்.

வருமானத்துக்கு அதிகமான சொத்து சேர்த்ததாக வேலுமணி மீது தொடர்ந்த முறைப்பாட்டையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

கோவை மாநகராட்சி திட்டப் பணிகளுக்கான ஒப்பந்தத்தில் ரூ. 346 கோடி ஊழல் செய்துள்ளதாக முறைப்பாட்டில் கூறப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், கோவை குனியமுத்தூரிலுள்ள வேலுமணியின் வீடு, சென்னை எம்எல்ஏ விடுதியிலுள்ள அவரது அறை உள்ளிட்ட 52 இடங்களில் இலஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் சோதனை செய்துள்ளனர்.

# இந்திய செய்திகள்

# எங்களுக்கு நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வரும் நயன்தாரா, தனக்கும் விக்னேஷ் சிவனுக்கும் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டதாக அறிவித்துள்ளார்

தென்னிந்திய சினிமாவில் அதிக சம்பளம் பெறும் நடிகையாக வலம் வருபவர் நயன்தாரா. இவர் நடிப்பில் தற்போது 'நெற்றிக்கண்' திரைப்படம் உருவாகியுள்ளது. இப்படம் நாளைமறுதினம் (13ஆம் திகதி) ஓடிடி தளத்தில் வெளியாகவிருக்கிறது.

நயன்தாரா ஏற்கனவே 2 முறை காதல் முறிவை சந்தித்து மூன்றாவதாக இயக்குநர் விக்னேஷ் சிவனுடன் காதல் வயப்பட்டுள்ளார். கடந்த 2015ஆம் ஆண்டு 'நானும் ரவுடிதான்' படத்தில் நடித்தபோது இருவருக்கும் காதல் மலர்ந்தது. சுமார் 6 வருடங்களாக காதலித்துவரும் இவர்கள், விரைவில் திருமணம் செய்துகொள்ள இருப்பதாக ஏற்கனவே தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில், ரி.வி. நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்ட நயன்தாராவிடம் கையில் அணிந்திருக்கும் மோதிரம் குறித்து கேட்டபோது,

''இது நிச்சயதார்த்த மோதிரம். எனக்கும் இயக்குநர் விக்னேஷ் சிவனுக்கும் நிச்சயதார்த்தம் முடிந்துவிட்டது'' என தெரிவித்துள்ளார்.



# குரங்கை இரையாக்கிய மலைப்பாம்பு

குஜராத்தில் குரங்கொன்றை இரையாக்கிய 10 அடி மலைப்பாம்பொன்று இரையை விழுங்கிய வேகத்தில் மயங்கிய நிலையில் நகர முடியாமல் இருந்துள்ளது.

குறித்த மலைப்பாம்பை மீட்ட வனத்துறையினர் அதனை வாந்தியெடுக்க வைத்துள்ளனர். இதன்பின்னர் மலைப்பாம்பு மயக்கம் தெளிந்தது. உணவாக்கப்பட்ட குரங்கு உயிர்நீத்த நிலையில் புதைக்கப்பட்டது. நலம்பெற்ற மலைப்பாம்பு, ஜம்புகோடா வனவிலங்கு சரணாலயத்தில் விடப்பட்டுள்ளது.



# இட்லி - பொங்கல் - ரோஸ்மில்க் - தக்காளி சாதம்: ஆர்ப்பாட்டம் செய்ய வந்தவர்களுக்கு அமோக விருந்து



அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் எஸ்.பி.வேலுமணிக்கு சொந்தமான இடங்களில் இலஞ்ச ஒழிப்புத்துறையினர் சோதனை நடத்திய நிலையில், அவரது வீட்டின் முன்பு திரண்டு ஆர்ப்பாட்டம் நடத்திய அவரது ஆதரவாளர்களுக்கு விதவிதமான உணவுப்பொருட்களை வழங்கி அசத்தியுள்ளனர் அக்கட்சியினர்.

ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களுக்கு விருந்தளிக்கப்பட்ட புகைப்படங்கள் வைரலாகியுள்ளன.

அ.தி.மு.க. ஆட்சியின்போது உள்ளூராட்சித்துறை அமைச்சராக இருந்த எஸ்.பி.வேலுமணி, பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாகவும், வருமானத்துக்கு மீறி சொத்து சேர்த்ததாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

அரசின் ஒப்பந்தப் பணிகளை பெற்றுத் தருவதாக 1.20 கோடி ரூபா மோசடி செய்து விட்டதாக முன்னாள் அமைச்சர் வேலுமணி மீது திருவேங்கடம் என்பவர் பொலிஸாரிடம் முறைப்பாடளித்தார். இதனையடுத்து வேலுமணி தொடர்புடைய 52 இடங்களில் இலஞ்ச ஒழிப்புப் பொலிஸார் சோதனை நடத்தினர்.

கோவை, குனியமுத்தூர் சுகுணாபுரம் பகுதியில் வசிக்கும் வேலுமணி வீட்டிலும், மதுக்கரை மார்க்கெட் பகுதியில் வசிக்கும் வேலுமணி மனைவியின் சகோதரர் சண்முகராஜா வீட்டிலும் சோதனை நடைபெற்றது.

இந்நிலையில், சோதனை நடைபெறுவதாக வந்த தகவலையடுத்து, சுகுணாபுரத்திலுள்ள வேலுமணியின் வீட்டின் முன் அ.தி.மு.க. தொண்டர்கள் அதிகளவு குவிந்தனர். வீட்டின் முன் கூட்டம் கூடியதால், கலைந்து செல்லுமாறு பொலிஸார் வலியுறுத்தியும் கலைந்து செல்ல ஆதரவாளர்கள் மறுத்ததுடன், பொலிஸாருடன் வாக்குவாதம் மற்றும் ரகளையில் ஈடுபட்டனர்.

இதற்கிடையே காலைமுதல் வீட்டின் முன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன. காலையில் இட்லி, பொங்கல், டீ, காபி, தண்ணீர்ப் போத்தல்கள், குளிர்பானம் போன்றவை வழங்கப்பட்டன. அதன்பின்னர் மற்பகலில் 'ரோஸ் மில்க்', மதியம் தக்காளி சாதமும் வழங்கப்பட்டன. ஆர்ப்பாட்டம் நடத்தவந்த இடத்தில் மினி விருந்தே கிடைப்பதாக சமூக வலைத்தளங்களில் சிலர் பதிவிட்டுள்ளனர்.

# ஆப்கனை விட்டு வெளியேறுமாறு இந்தியர்களுக்கு அறிவுரை



''ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியர்கள் தாயகம் திரும்ப வேண்டும்'' என இந்திய மத்திய அரசு அறிவுரை வழங்கியுள்ளது.

ஆப்கனிஸ்தானிலிருந்து அமெரிக்கப் படைகள் வெளியேறியதைத் தொடர்ந்து, தலிபான்கள் தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதுவரை அங்கு 6 மாகாணங்கள் தங்களது கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், மஜார் ஐ ஷரீப் நகரின் மீது கவனத்தை திருப்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், அந்நகரிலுள்ள இந்திய துணைத்தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது:

''மஜார் ஐ ஷரீப் நகரிலிருந்து இந்தியாவிற்கு சிறப்பு விமானமொன்று இயக்கப்படவுள்ளது. நகர் மற்றும் அருகிலுள்ள பகுதிகளில் வசிக்கும் இந்தியர்கள், அந்த விமானத்தில் தாயகம் திரும்புமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தாயகம் திரும்ப விரும்புபவர்கள் உடனடியாக தங்களது பெயர் மற்றும் கடவுச்சீட்டு விவரங்களை உடனடியாக அலுவலகத்தில் சமர்ப்பிக்கவேண்டும்''

- என்றுள்ளது.

ஆப்கனில் தலிபான்களின் தக்குதல்கள் அதிகரித்து வரும் நிலையில், அங்குள்ள தூதரகத்தில் பணியாற்றிய அதிகாரிகள், சிறப்பு விமானம் மூலம் டில்லி அழைத்து வரப்பட்டனர். தற்போது, ஆப்கனில், 1,500 இந்தியர்கள் உள்ளதாக மத்திய அரசு கணக்கிட்டுள்ளது.

# வீட்டில் நாய் - மாடு வளர்த்தால் ரூ. 10 வரி செலுத்த வேண்டும்!



வீட்டில் நாய், மாடு வளர்த்தால் ரூ. 10 வரி செலுத்த வேண்டும் எனவும், தெருவில் வீட்டு நாய் மற்றவர்களை அச்சுறுத்தினால், அசுத்தம் செய்தால் உரிமையாளருக்கு ரூ. 500 அபராதம் விதிக்கப்படும் எனவும் மதுரை மாநகராட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து மாநகராட்சி மேலும் தெரிவிக்கையில்,

இறைச்சிக் கடை, பிரியாணி விற்பனை நிலையத்திற்கு ஆண்டு உரிமம் சதுர அடிக்கு ரூ. 10. மதுரை மாநகராட்சி பகுதிகளிலுள்ள வீடுகளில் நாய், மாடு, எருமை, குதிரை வளர்த்தால் ஆண்டுக்கு ரூ. 10 வரி வசூலிக்கப்படும். அனுமதிக்கப்படாத இடங்களில் விற்பனைக்காக ஆடு, மாடு வதை செய்தால் ரூ. 5,000 அபராதம் விதிக்கப்படும் எனவும் அறிவித்துள்ளது.

கழிவுகளை தெருக்களில் கொட்டும் இறைச்சிக் கடைகளுக்கு ரூ. 2,000 அபராதம் வசூலிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

மாநகராட்சியின் இந்த அறிவிப்பு வீடுகளில் செல்லப்பிராணிகளை வளர்ப்போரிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.




# வெடித்து சிதறும் மவுண்ட்மெராபி

## பேரழிவு ஏற்படும் அபாயம்

இந்தோனேஷியாவின் ஜாவா தீவில் அமைந்துள்ள மவுண்ட்மெராபி எரிமலை வெடித்துச் சிதறி தீக்குழம்பை உமிழ்ந்து வருகிறது.

இந்த எரிமலை அடுத்தடுத்து 7 தடவைகள் வெடித்துள்ளதால் ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் நிலவுகிறது.

இந்தோனேஷியாவில் 120 எரிமலைகள் இருக்கின்றன. அதில் மவுண்ட்மெராபி எரிமலை முக்கியமானதாகும். இந்த எரிமலையில் கடந்த சில நாட்களாக புகை கிளம்பிவந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீரென வெடித்துச் சிதறியது.

அடுத்தடுத்து 7 தடவைகள் எரிமலை லாவா குழம்புகள் வெடித்து வெளியேறின. இதனால் ஒரு கிலோமீற்றர் உயரத்துக்கு புகை மூட்டமாக காட்சியளித்தது. அருகிலுள்ள கிராமங்களுக்குள் சாம்பல்கள் புகுந்தன.

இதனால் எந்த நேரத்திலும் பெரியளவில் வெடிப்பு ஏற்பட்டு ஆபத்து ஏற்படும் என்ற அச்சம் நிலவுகிறது. 2010ஆம் ஆண்டு இந்த எரிமலை வெடிப்பில் 350 பேர் உயிரிழந்தனர். எரிமலை வெடித்துச் சிதறியதில் பழங்கால நகரான யோக்யாத்ரா அழிந்து போனமை குறிப்பிடத்தக்கது.

## கோவிட் மாறுபாடுகள்:

# கிரேக்க எழுத்துகள் போதாது; நட்சத்திரக் கூட்டங்களின் பெயர் வைக்க பரிசீலனை



சீனாவின் வூஹான் மாகாணத்தில் முதன்முதலில் கண்டறியப்பட்ட கொவிட் - 19 வைரஸ், அதன்பின் படிப்படியாக மாறுபாடடைந்து தற்போது பல்வேறு வடிவங்களில் மக்களைத் தாக்கி வருகிறது. இந்த மாறுபாடுகளுக்கு கிரேக்க எழுத்துகளைக்கொண்டு பெயர் சூட்டப்பட்டு வருகிறது. அந்தவகையில் அல்பா, பீட்டா, காமா, டெல்டா, ஈட்டா, லோட்டா என பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன.

கிரேக்க எழுத்து வரிசையில் 24 எழுத்துகள் உள்ளன. ஆனால், கொவிட் வைரஸ் தொடர்ந்து திரிபடைந்து வருவதால், இந்த எழுத்துகளுக்குப் பிறகும் பெயர்கள் தேவைப்படும் என வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

உலக சுகாதார ஸ்தாபன கொவிட் தொழில்நுட்பக் குழுத் தலைவர் மரியா வோன் கெர்கோவ் கூறுகையில்,

கொவிட் வைரஸ் தொடர்ந்து திரிபடைந்து வருகிறது. அதனால், மாறுபாடுகளை அடையாளப்படுத்த நட்சத்திரக் கூட்டங்களின் பெயர் சூட்ட பரிசீலிக்கவுள்ளோம். கிரேக்க கடவுள்கள் அல்லது பெண் தெய்வங்களின் பெயர்களையும் சூட்ட ஆலோசித்து வருகிறோம் - என்றார்.

கொரோனா வைரஸின் டெல்ட்டா மாறுபாடு தற்போது பல்வேறு நாடுகளை உலுக்கிவரும் நிலையில், எண்ணிலடங்கா மாறுபாடுகள் வருவதுபோல் உலக சுகாதார அமைப்பு தெரிவித்திருப்பது அச்சத்தை அதிகரித்துள்ளது.

# கினியாவில் புதிய கொடிய ‘மார்பர்க்’ வைரஸ் கண்டுபிடிப்பு

## உலக சுகாதார அமைப்பு

“வியர்வையிலிருந்து மற்றவர்களுக்கு பரவும் தன்மை கொண்டது”



மேற்கு ஆபிரிக்கா நாடான கினியாவில் ‘மார்பர்க்’ எனும் புதிய கொடிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது என உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

எபோலா, கொவிட் - 19 போன்று ‘மார்பர்க்’ வைரஸூம் விலங்கிலிருந்து மனிதர்களுக்கு பரவும் தன்மை கொண்டது. பொதுவாக, குகைகள் அல்லது சுரங்கங்கள், குடியிருப்பு கொலனிகள் ஆகியவற்றில் இருக்கும் வௌவால்களிலிருந்து ‘மார்பர்க்’ வைரஸ் நோய் பரவுகிறது.

மனிதர்களுக்குப் பரவும் பட்சத்தில், பாதிக்கப்பட்டவர்களின் உடலிருந்து வெளியேறும் வியர்வையிலிருந்து இது மற்றவர்களுக்கு பரவுகிறது எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

வௌவால்களிலிருந்து பரவும் ‘மார்பர்க்’ வைரஸ் நோய் 88 சதவிகித இறப்பு விகிதத்தைக் கொண்டுள்ளது. ஒகஸ்ட் 2ஆம் திகதி (இம்மாதம்) தெற்கு குக்கெடோ மாகாணத்தில் ‘மார்பர்க்’ வைரஸ் நோய் காரணமாக இறந்த நோயாளியின் மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தியதில் இறப்பு விகிதம் குறித்த தகவல் கண்டறியப்பட்டதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது..

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பின் ஆபிரிக்காவுக்கான பிராந்திய இயக்குநர் மத்ஷிடிசோ மொய்தி தெரிவிக்கையில்,

‘‘மார்பர்க் வைரஸ் நோய், மிக வேகமாக பரவும் தன்மை கொண்டது. எனவே, அதன் பரவலை கண்டறிந்து தடுக்க வேண்டும்.

எபோலா வைரஸை தடுக்கும் வகையில் மேற்கொண்ட நடவடிக்கைகளால் கிடைத்த அனுபவங்களைக்கொண்டு புதிய வைரஸ் பரவலை கட்டுப்படுத்த சுகாதார அமைப்புகளுடன் ஒருங்கிணைந்து செயற்பட்டு வருகிறோம்’’ - என்றார்.

கடந்தாண்டு ஆபிரிக்காவிலிருந்து பரவத் தொடங்கிய எபோலா வைரஸால் 12 பேர் உயிரிழந்தனர். எபோலா முற்றிலும் கட்டுப்படுத்தப்பட்டுவிட்டது என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ள நிலையில், புதிய வைரஸ் கண்டறியப்பட்டுள்ளது.

தேசிய, பிராந்திய அளவில் மட்டுமே இது பெரும் அச்சுறுத்தலை தருகிறது என்றும் உலகளவில் இந்த வைரஸின் தாக்கம் குறைவு என்றும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

# பாகிஸ்தானின் உதவியுடன் காபூலை கைப்பற்ற தலிபான்கள் சதித் திட்டம்



“வான் தாக்குதல்கள் தொடரும்” - பென்டகன் அதிரடி அறிவிப்பு

தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் ஆப்கானின் 421 மாவட்டங்கள்

ஈரான் - தஜிகிஸ்தான் - பாக். எல்லைகள் அடைப்பு

பாகிஸ்தான் வழங்கும் ஆயுதங்கள் மற்றும் இதர உதவிகளை வைத்துக்கொண்டு, தலைநகர் காபூலை பிடிக்கும் திட்டத்துடன் தலிபான்கள் முன்னேறிக்கொண்டிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஆப்கானிஸ்தானின் 421 மாவட்டங்கள் தலிபான்களின் கட்டுப்பாட்டில் உள்ளன. ஈரான், தஜிகிஸ்தான் மற்றும் பாகிஸ்தானுடனான எல்லைப் பகுதிகளையும் தலிபான்கள் கைப்பற்றியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் கடந்த 2 நாட்களில் மட்டும் 6 மாகாண தலைநகரங்களை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதாக அந்நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மத்திய ஆசியா மற்றும் ஈரானிலிருந்து ஜனாதிபதி அஷ்ரப் கனியின் அரசுக்குக் கிடைத்துவரும் வர்த்தக வருவாய் மற்றும் இதர விநியோகங்களை துண்டிக்கும் நோக்கத்துடன் அவர்கள் முன்னேறி வருவதாகவும் கூறப்படுகிறது.

முக்கிய எல்லைச் சாவடிகளை தலிபான்கள் கைப்பற்றியுள்ளதால் சுங்க வருவாயில் சுமார் 60 சதவிகிதம் அவர்களின் கைகளுக்குச் சென்றுவிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

**விமானத் தாக்குதல் நடத்தப்படும்**

‘‘தலிபான்கள் மீது தொடர்ந்து விமானத் தாக்குதல் நடத்தப்படும்’’ என அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் அறிவித்துள்ளது.

ஆப்கானிஸ்தானில் கடந்த 20 ஆண்டுகளாக முகாமிட்டு போரிட்டுவந்த அமெரிக்கப் படையினர், அங்கிருந்து முழுமையாக தங்களது நாடுகளுக்குத் திரும்பி வருகின்றனர். இந்தச் சூழலைப் பயன்படுத்திக் கொண்டுள்ள தலிபான்கள், நாட்டின் பல்வேறு பகுதிகளைக் கைப்பற்றி வருகின்றனர். எனினும், அவர்களுக்கு எதிராக அமெரிக்க இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகனின் பத்திரிகைச் செயலாளர் ஜோன் கிர்பி தெரிவிக்கையில்,

ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு நிலைமை மோசமாகவுள்ளது. அங்கிருக்கும் எங்கள் அதிகாரிகள் மூலம் தொடர்ந்து விமானத் தாக்குதல் நடத்தி ஆதரவளிப்போம் என்றார்.

இதனிடையே, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஒகஸ்ட் இறுதிக்குள் இராணுவம் முழுமையாக திரும்பப் பெறும் என அறிவித்துள்ள நிலையில், அதன்பிறகும் ஆதரவு தொடருமா என்ற கேள்விக்கு ஜோன் பதிலளிக்கவில்லை.

மேலும், ஆப்கானிஸ்தானிலுள்ள அமெரிக்கர்களை உடனடியாக நாடு திரும்ப கடந்த 7ஆம் திகதி அமெரிக்கா உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கொலம்பியாவில் 2 தொன் கொக்கெய்ன் பறிமுதல்

கொலம்பியாவில் சட்டவிரோதமாக கடத்தப்பட்ட 2 தொன் கொக்கெய்ன் போதைப்பொருள் அந்நாட்டு கடற்படைப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ரோந்து பணியில் ஈடுபட்ட கடற்படைப் பொலிஸார், படகொன்றில் சந்தேகத்திற்கு இடமாக வெளிநாட்டு நபர் இருந்ததைக் கண்டு சோதனையில் ஈடுபட்டனர். சோதனையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கைமேல் பலனாக 120 பைகளில் 2 தொன்னுக்கும் அதிகமான கொக்கெய்ன் போதைப்பொருள் கிடைத்துள்ளது. கடத்தப்பட்ட போதைப் பொருளின் மதிப்பு 93 மில்லியன் அமெரிக்க டொலர் அளவுக்கு இருக்கும் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## புவி வெப்பமயமாதல் அதிகரிப்பு; மனித இனத்துக்கான ‘ரெட் அலர்ட்’

# கார்பன் வெளியேற்றத்தை குறைக்காவிட்டால் இயற்கை பேரழிவுகளைத் தவிர்க்க முடியாது

‘புவி வெப்பமயதால் நடவடிக்கை எதிர்பார்த்ததை விட மிக வேகமாக நிகழ்வதால், பருவநிலை மாற்றத்தில் பூமி முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. இதனால், பனிமலை உருகுதல், காட்டுத் தீ, வெள்ளம் போன்ற இயற்கைப் பேரழிவுகள் அடிக்கடி நிகழும் என ஐ.நா. அதிர்ச்சி அறிக்கையை வெளியிட்டுள்ளது.

இந்த காலநிலை மாற்றம் மனித இனத்துக்கான சிகப்பு எச்சரிக்கை என ஐ.நா. தெரிவித்துள்ளது.

21ஆம் நூற்றாண்டின் பருவநிலை மாற்றத்துக்கு மனித இனமே காரணம் என்று ஐ.நாவின் காலநிலை அறிவியல் குழு அறிக்கையில் எச்சரிக்கப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாக பல்வேறு நாடுகளில் வழக்கத்திற்கு மாறாக வெள்ளம், காட்டுத் தீ என இயற்கை சீற்றங்கள் அச்சத்தை ஏற்படுத்தி வருகின்றன.

சீனாவில் சமீபத்தில் 1000 ஆண்டுகளில் இல்லாத மழை கொட்டித் தீர்த்து கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. அமெரிக்கா, துருக்கியில் கடுமையான காட்டுத் தீ பரவுகிறது. வெள்ளம், காட்டுத் தீ ஆகியவை ஏற்படுவதற்கு உலகின் தட்பவெப்பநிலை அதிகரித்ததும் கடல்மட்டம் உயர்ந்ததுமே காரணம் என ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், இவை எதிர்காலத்தில் எவ்விதமான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்த ஆய்வு அறிக்கையை ஐ.நா. காலநிலை அறிவியல் குழு நேற்றுமுன்தினம் வெளியிட்டது. அமெரிக்க வளிமண்டல ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தின் 234 விஞ்ஞானிகள் புவி வெப்பமயமாதல் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

இது தொடர்பான 3,000 பக்கங்கள் அடங்கிய அறிக்கையில் அதன் துணை ஆசிரியரும் மூத்த விஞ்ஞானியுமான லிண்டா மியர்ன்ஸ் தெரிவித்திருப்பதாவது:

கடந்த 2015ஆம் ஆண்டு பரீஸில் நடந்த பருவநிலை மாற்றத்துக்கான உச்சிமாநாட்டில், கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பதன் மூலம் புவி வெப்பமயமாதலை 1.5 டிகிரி செல்சியசாக (2.7 டிகிரி பாரன்ஹீட்) குறைக்க ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், கடந்த நூற்றாண்டின் முதல் பாதியில், பூமி எதிர்பார்த்ததை விட மிக வேகமாக வெப்பமயமாதலுக்கு உட்பட்டுள்ளது.



இதனால், பூமி தற்போது 1.1 டிகிரி செல்சியஸ் (2 டிகிரி பாரன்ஹீட்) வெப்பமயதாலை எட்டியுள்ளது.

இதனால், எதிர்வரும் 2030ஆம் ஆண்டுக்குள், முன்பு கணிக்கப்பட்டதை விட, ஒவ்வொரு காலகட்டத்திலும் பூமியானது 1.5 டிக்ரி செல்சியஸ் வரை வெப்பமடையும்.

தொழிற்சாலைகள் கார்பன்-டை-ஒட்சைட் வெளியேற்றத்தை கட்டுக்குள் கொண்டுவரா விட்டால், பரிஸ் பருவநிலை ஒப்பந்தத்தை கடுமையாக பின்பற்றாவிட்டால், பூமி இன்னும் அதிக வேகமாக வெப்பமயமாகி 2 டிகிரி செல்சியஸ் நிலையை எட்டக்கூடும்.

இது கடும் வறட்சி, தொடர் கனமழை, வெள்ளம், புயல், சூறாவளி, காட்டுத் தீ, பனிமலை உருகுதல், வெப்பக்காற்று வீசுதல் உள்ளிட்ட பல்வேறு இயற்கை பேரிடர்களுக்கு வழிவகுக்கும். சமீபத்திய பருவநிலை மாற்றங்கள் இதனை நன்கு உணர்த்துகின்றன. இந்த மாற்றங்கள் புவி வெப்பமயமாதல் அதிகரித்தால் அடிக்கடி நிகழவும் வாய்ப்புள்ளது.

எடுத்துக்காட்டாக, 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறும் வெப்பக்காற்று வீசுதல் தற்போது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்கிறது. புவி வெப்பமயமாதல் இன்னும் ஒரு டிகிரி செல்சியஸ் கூடினால், வெப்பக்காற்று வீசுவது 7 ஆண்டுகளுக்கு 2 முறையாக மோசமடையக்கூடும்.

இதனால், அமெரிக்கா, அவுஸ்திரேலியா, கிரீஸ், துருக்கி நாடுகளில் ஏற்பட்டதுபோன்று காட்டுத் தீ சம்பவங்கள் கூட ஏற்படும். இதன்மூலம் மனித இனத்துக்கு சிகப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதிலிருந்து தப்பித்து எங்கும் ஓடி, ஒளிய முடியாது. கார்பன் வெளியேற்றத்தைக் குறைப்பது மட்டுமே கண் முன் உள்ள நிரந்தர தீர்வாகவுள்ளது. கார்பன்-டை ஒட்சைட்டினால் மாசடைவதை மிகப் பெரியளவில் வேகமாக குறைத்தல், கடுமையாக மாசடைவதை குறைத்தல், மிதமான கார்பன் வெளியேற்றம், மாசடைவதை குறைக்க சிறியளவிலான தற்போதைய திட்டங்களை தொடருதல், கார்பன் மாசுபாட்டின் தொடர்ச்சியான அதிகரிப்பு ஆகியவற்றை பொறுத்தே எதிர்காலம் அமையும்.

***கடல் மட்டம் 30 செ.மீ. உயர்வு***

அந்த அறிக்கையில் மேலும், அன்டார்டிக் உள்ளிட்ட பகுதிகளில் பனிமலை அவ்வபோது உருகி வருவதால், கடந்த 50 ஆண்டுகளில் மட்டும் கடல் நீர்மட்டம் 15 முதல் 30 செ.மீ. (6 முதல் 12 இன்ச்) வரை உயர்ந்துள்ளது. உலகளவில் ஏற்படும் இந்த பருவநிலை மாற்றங்களுக்கு கார்பன், மீத்தேன் வாயுக்கள் அதிகளவில் வெளியேறி புவி வெப்பமயமாகிறது. சூரியன் உட்பட பிற கோள்களினால் பத்தில் ஒன்று அல்லது 2 சதவீதம் மட்டுமே புவி வெப்பமாகிறது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# டோக்கியோவிலிருந்து பாரிஸ் வரை





*(ரமணி)*

உலகமே வியந்து பார்த்த டோக்கியோ ஒலிம்பிக் போட்டி நிறைவு பெற்றது. சாதனை, வேதனை, ஏமாற்றம், விபத்து போன்றவற்றால் டோக்கியோ ஒலிம்பிக் ரசிகர்களின் மனதை விட்டு என்றைக்குமே அகலாது. பல நாடுகளிலிருந்து டோக்கியோவை நோக்கிச் சென்றவர்கள் நண்பர்களாயினர். பழைய நண்பர்களை பாசத்துடன் சிலர் கண்டு மகிழ்ந்தனர்.

ஒலிம்பிக் கிராமத்தில் கொரோனாவால் சிலர் பாதிக்கப்பட்டனர். பதக்கக் கனவுடன் போட்டியிடக் காத்திருந்த அவர்கள் பங்குபற்றாமல் நாடு திரும்பினர். கொரோனாவால் பாதிக்கப்பட்டு குணமடைந்த வீரர் தங்கம் வென்று நம்பிக்கையளித்தார். விபத்து காரணமாக பதக்க வாய்ப்பை நழுவ விட்டவர்களும் சோகத்துடன் நாடு திரும்பினர். வெப்பத்தால் வாடியவர்கள் போட்டியை இடை நடுவில் கைவிட்டனர்.

டோக்கியோ ஒலிம்பிக்கில் கடைசி நாள் வரை சீனா முதலிடம் பெற்று அமெரிக்காவை அச்சுறுத்தியது. சீனாவை விட அதிக பதக்கங்களை அமெரிக்கா பெற்றிருந்தாலும், தங்கப் பதக்கத்தின் எண்ணிக்கை சீனாவை விட குறைவாக இருந்ததால் இரண்டாவது இடத்தில் இருந்தது. கடைசி நாளில் 3 தங்கப் பதக்கங்களைப் பெற்ற அமெரிக்கா பதக்கப் பட்டியலில் முதலிடம் பெற்றது.



ஒலிம்பிக் கிராமத்தில் தங்கியிருந்தவர்கள் வெளியேற ஆரம்பித்து விட்டனர். ஜப்பானின் முக்கிய விமான நிலையங்களில், ஒலிம்பிக்கில் பங்கேற்கச் சென்றவர்களின் சத்தம் எதிரொலிக்கிறது. சர்வதேச ஒலிம்பிக் பேரவையின் தலைவர் தோமஸ் பாக் முன்னிலையில், ஒலிம்பிக் கொடி இறக்கப்பட்டது. அதனை தோமஸ் பாக்கிடம், டோக்கியோ நகர முதல்வர் வழங்கினார்.

2024 இல் ஒலிம்பிக் போட்டியை நடத்தவுள்ள பாரிஸ் நகர் மேயரிடம் தோமஸ் பாக் ஒலிம்பிக் கொடியை முறைப்படி வழங்கினார். அப்போது பிரான்ஸின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. பாரிஸ் நகரின் உலக அதிசயமான ஈபிள் டவர் உள்ளிட்ட முக்கிய இடங்கள் உள்ளடங்கிய வீடியோ தொகுப்பு காண்பிக்கப்பட்டது. இதேவேளை ஈபிள் டவரில் கூடிய மக்கள், மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். பிரான்ஸின் விமானங்கள் அணிவகுத்து ஒலிம்பிக் நிறங்களை வெளியிட்டன. முன்னதாக பிரான்ஸில் 1924ஆம் ஆண்டு பாரிஸ், 1968ஆம் ஆண்டு கிரெனோபிள் (பனிக்கால ஒலிம்பிக்), 1992 ஆம் ஆண்டு ஆல்பர்ட்வில்லே (பனிக்கால ஒலிம்பிக்) ஆகியன நடைபெற்றன. நான்காவது முறையாக பிரான்ஸில் 2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் நடைபெறவுள்ளது.




## விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

## ஒலிம்பிக்கில் சறுக்கிய தருணங்கள்

பெண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்தில் பங்குபற்றுவதற்காக இங்கிலாந்திலிருந்து டோக்கியோவுக்குச் சென்ற 27 வயதுடைய எஸ்ஸி நைட் தயாராக நின்றார். எஸ்ஸி நைட்டின் பெயர் ஒலிபெருக்கியில் அறிவிக்கபட்டபோது கைகளை உயர்த்தி தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

ஆரம்பப்பள்ளி ஆசிரியையான எஸ்ஸி நைட், ஒலிம்பிக்கில் பங்குபற்றுவதற்காக வேலையை உதறி



பயிற்சி பெற்றார். நைட் எதிர்பார்த்த தருணம் வந்ததும், தனது முழு பலத்தையும் சேர்த்து ஓடத்தொடங்கினார். முதலாவது தடையை நெருங்கியதும் மூச்சு விட முடியாமல் தடுமாறி விழுந்தார்.

இங்கிலாந்திலிருந்து டோக்கியோவுக்கு விமானத்தில் சென்றபோது கொரோனா தொற்று இருக்கலாம் என சந்தேகப்பட்டு சோதனை செய்த ஒருவருடன் அவர் நெருக்கமாக இருந்துள்ளார். அதன் காரணமாக ஒலிம்பிக் கிராமத்தில் எஸ்ஸி நைட் தனிமைப்படுத்தப்பட்டிருந்தார். இதனால் பயிற்சி, விளையாட்டுக்கான முன்னேற்பாடு எல்லாம் எஸ்ஸிக்கு தடைப்பட்டன.

ஒலிம்பிக்கில் பங்குபற்றுவதற்காக எஸ்ஸி நைட் பல வருடங்களாக மேற்கொண்ட முயற்சிகள் அனைத்தும் ஒரு வினாடியில் தவிடுபொடியாகின.

## இலங்கையில் வைத்து பயிற்றுவிப்பாளர் கடமைகளை ஆரம்பிக்கும் ஷோன் டைட்



ஆப்கானிஸ்தான் கிரிக்கெட் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளரான ஷோன் டைட் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உடன் அமுலுக்கு வரும் வகையில் அடுத்த ஐந்து மாதங்களுக்கு ஆப்கானிஸ்தான் அணியின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருடைய முதல் தொடரானது எதிர்வரும் செப்டெம்பர் முதலாம் திகதி ஹம்பாந்தோட்டை மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறவுள்ள பாகிஸ்தான் அணியுடனான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேச தொடருடன் ஆரம்பமாகிறது. பாகிஸ்தான் அணியுடனான தொடரைத் தொடர்ந்து ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ள ஐ.சி.சி. இருபதுக்கு 20 உலகக் கிண்ணத் தொடரிலும் ஷோன் டைட் ஆப்கானிஸ்தான் அணியின் பந்து வீச்சுப் பயிற்றுவிப்பாளராக செயற்படவுள்ளார்.

தற்போது 38 வயதாகும் அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் முக்கிய வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஷோன் டைட், அவுஸ்திரேலிய அணிக்காக 3 டெஸ்ட் போட்டிகள், 35 ஒருநாள் மற்றும் 21 இருபதுக்கு 20 சர்வதேச போட்டிகளில் விளையாடி மொத்தமாக 95 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். தற்போது முதல் தடவையாக தேசிய அணியொன்றின் பந்துவீச்சுப் பயிற்றுவிப்பாளராக ஷோன் டைட் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஒலிம்பிக்கில் மீண்டும் கிரிக்கெட் முயற்சிகளை ஆரம்பித்துள்ள ஐ.சி.சி.



ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டைச் சேர்த்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக சர்வதேச கிரிக்கெட் பேரவை அறிவித்துள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக் நிறைவடைந்த நிலையில் அடுத்த ஒலிம்பிக், 2024ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரிஸிலும், 2028 ஒலிம்பிக் போட்டி அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸிலும் நடைபெறவுள்ளன. இந்நிலையில் 2028 லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டையும் சேர்த்துகொள்ள முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக ஐ.சி.சி. அறிவித்துள்ளது.




இதற்கு முன்னர் கடந்த 1900 பாரிஸ் ஒலிம்பிக் போட்டியில் மட்டுமே கிரிக்கெட் விளையாட்டு நடைபெற்றது. அதிலும் இங்கிலாந்தும், பிரான்ஸும் மட்டும் விளையாடின. இதனால் 128 வருடங்களுக்குப் பிறகு ஒலிம்பிக் போட்டியில் கிரிக்கெட் விளையாட்டை மீண்டும் சேர்க்க ஐ.சி.சி. முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை, அடுத்த வருடம் பேர்மிங்ஹமில் நடைபெறவுள்ள 2022 பொதுநலவாய விளையாட்டுப் போட்டியில் மகளிர் கிரிக்கெட் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பில் ஐ.சி.சி.யின் தலைவர் கிரேக் பார்க்லே தெரிவிக்கையில், அமெரிக்காவில் 30 மில்லியன் கிரிக்கெட் ரசிகர்கள் உள்ளார்கள். இதனால் லொஸ் ஏஞ்சல்ஸ் ஒலிம்பிக்கில் கிரிக்கெட் பங்கேற்பது பொருத்தமாக இருக்கும். ஆனால், இது அவ்வளவு எளிதல்ல.

ஒலிம்பிக் போட்டியில் இணைந்துகொள்ள பல அற்புதமான விளையாட்டுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. எனினும் கிரிக்கெட்டைச் சேர்க்க இதுவே சரியான நேரம். ஒலிம்பிக்ஸும் கிரிக்கெட்டும் நல்ல கூட்டணியாக அமையும் என்று தெரிவித்தார்.

## T20 தொடரை 4–1 என கைப்பற்றிய வங்கப்புலிகள்; ஆஸி. அணிக்கு வரலாற்றில் மோசமான தோல்வி

சுற்றுலா அவுஸ்திரேலிய அணிக்கும், பங்களாதேஷ் அணிக்குமிடையிலான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை பங்களாதேஷ் அணி 4-1 என்ற அடிப்படையில் கைப்பற்றியது.

பங்களாதேஷ் அணி முன்னதாகவே மூன்று போட்டிகளில் வெற்றிபெற்று தொடரைக் கைப்பற்றிய நிலையில், இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும், இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் நடைபெற்றது. போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாடி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்றது.

123 என்ற இலகுவான வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய அவுஸ்திரேலிய அணி 13.4 ஓவர்கள் நிறைவில் 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து 60 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மோசமான தோல்வியை சந்தித்தது. இதனைத் தொடர்ந்து பங்களாதேஷ் அணி, அவுஸ்திரேலிய அணியுடன் முதன்முறையாக இருதரப்புத் தொடர் ஒன்றைக் கைப்பற்றியது.





போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் 9 ஓட்டங்களுக்கு, 4 விக்கெட்களை வீழ்த்திய சகலதுறை வீரர் ஷகீப் அல்-ஹசன் தெரிவான அதேவேளை, தொடர் ஆட்டநாயகனாகவும் ஷகீப் அல்-ஹசன் தெரிவானார்.

இதேவேளை அவுஸ்திரேலிய அணி இப்போட்டியில் 62 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்ததைத் தொடர்ந்து, இருபதுக்கு 20 கிரிக்கெட் வரலாற்றில் அந்த அணி ஆகக்குறைந்த மோசமான ஓட்ட எண்ணிக்கையை நேற்று முன்தினம் டாக்காவில் பதிவு செய்தது.

இதற்கு முன்னர் அவுஸ்திரேலிய அணி, இங்கிலாந்து அணிக்கு எதிராக கடந்த 2005ஆம் ஆண்டு 79 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தற்போது அந்த ஓட்டங்களையும் விட குறைவான ஓட்ட எண்ணிக்கையைப் பதிவு செய்தது.

## நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக சமரவீர



இலங்கை டெஸ்ட் அணியின் முன்னாள் ஸ்பெஷலிஸ்ட் என்றழைக்கப்படுகின்ற திலான் சமரவீர நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். நியூஸிலாந்து கிரிக்கெட் அணியானது அடுத்ததாக பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கு இருதரப்பு சுற்றுப்பயணம் மேற்கொள்ளவுள்ள நிலையில், குறித்த இரு தொடர்களுக்குமான நியூஸிலாந்து அணியின் துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக திலான் சமரவீர நியமிக்கப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக இலங்கையைச் சேர்ந்த சந்திக்க ஹத்துருசிங்க செயற்பட்ட காலப்பகுதியில் பங்களாதேஷ் அணியின் துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக செயற்பட்ட திலான் சமரவீர, தற்போது நியூஸிலாந்து அணிக்கு துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், இலங்கை அணிக்கும் ஒரு சில தொடர்களுக்கு துடுப்பாட்ட பயிற்றுவிப்பாளராக அவர் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7